
கல்கி

KALKI
14.12.86
ரூ. 1.50





ஸர்ஃப் வாங்குவது மேலும் புத்திசாலித்தனம்
''தெரிஞ்சே சொல்றேன்: ஸர்ஃப் வாங்கறதைப் போல புத்தியுள்ள காரியம் எதுவுமே இல்லே. பவர் பேக்டு தயாரிப்பு ஆச்சே. அபார சக்தி— கொடுத்த பணத்துக்கு அமோகமாப் பலன்.''
அமோகமாப் பலனு? ஸர்ஃப் விலைதான் அதிகமாச்சே, லலிதாம்மா?
''அண்ணாச்சி, எத்தனை விதமா லாபம் தருது. உங்க கண்ணுல படலியா? ஸர்ஃப் ஒண்ணுதானே எதையும் வெள்ளைவெளேர்னு வெளுக்குது. அதனால, பார்வைக்கு எப்பவுமே புதுக்கருக்குதான். எந்த நாளுமே பண மிச்சம். கணக்குப் பாருங்க— அமோகமாப் பலன்னு இதானே?''
சரி, அப்படி என்னதான் இருக்கு ஸர்ஃப்லே?
''நிறையவே இருக்கு. அளவுக்கு அளவு 1 கிலோ சாதா பவுடருக்கு ஈடு ஒரு ½ கிலோ ஸர்ஃப். அதாவது 1 கிலோ சாதாப் பவுடர் எவ்வளவு துணிகளை வெளுக்குமோ, அதையே பாதி அளவு ஸர்ஃப் வெளுத்திடும். பார்த்துக்குங்களேன், ஸர்ஃப் நமக்கு அதிக லாபம்தானே?''
1 கிலோ சாதா பவுடர்
½ கிலோ ஸர்ஃப்
அப்ப ஸர்ஃப் ஒரு வகையில ஈடு செய்துடுதே?
''ஏன், பல வகையில லாபம் நமக்கு. மலிவுச் சரக்கு வாங்கறதுக்கும் மதிப்புள்ள பண்டம் வாங்கறதுக்கும் வித்தியாசம் உண்டே. அதனாலதான் சொல்றேன் ஸர்ஃப் வாங்கறதுதான் மேலும் புத்திசாலித்தனம்.''
POWER PACKED
Surf
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு


பொன்னியின் செல்வன்
அமரர்
கல்கி
மணியம்
கல்கி
பொங்கல்
சிறப்பிதழில்
ஆரம்பம்

“இப்போதும் நாங்கள் இந்தியாவைத்தான் நம்புகிறோம்!”

★★ விடுதலைப் புலிகளின் லட்சியம், அவற்றை அடைய அவர்கள் கையாளும் வழிகள் முதலியன பற்றி எழக் கூடிய எத்தனையோ பல கேள்விகளில் சிலவற்றுக்கு இங்கே பதிலளிக்கிறார், ‘தமிழீழ விடுதலைப் புலி’களின் தலைவரும் இராணுவத் தளபதியுமான வேலுப் பிள்ளை பிரபாகரன். இந்தப் பேட்டியின்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் என்று சொல்லப் படும் பாலசிங்கமும் உடனிருந்தார்; சில சமயங்களில் பிரபாகரனுக்கு இந்தப் பேட்டியில் பதில் சொல்ல உதவியும் புரிந்தார். இதோ பேட்டி........

கல்கி: தமிழக போலீஸார் உங்களிட மிருந்து பறித்த தகவல் தொடர்புச் சாதனங் களைத் திருப்பித் தர வேண்டுமென்று, நீங்கள் உண்ணாவிரதமிருந்தீர்கள். அதற்கு உடனடி யாக வெற்றியும் கிடைத்தது. இது அகிம் சைக்குக் கிடைத்த வெற்றி! அப்படியிருக் கும்போது, நீங்கள் இலங்கையிலும், அகிம்சை முறையிலேயே வெற்றி பெறலாமே! ஆயுத மேந்திப் போராட வேண்டிய அவசிய மென்ன?

பிரபாகரன்: உலகிலேயே அகிம்சை முறை யில் வெற்றி பெற்ற நாடு இந்தியாவைத் தவிர வேறு எதுவும் இருக்க முடியாது. ஓர ளவுக்கு மனிதாபிமானம் உள்ள நாடும் இந்தியாதான். அதனால்தான் எனது உண்ணா விரதத்திற்கு இங்கே வெற்றி கிடைத்தது. ஆனால் மனித நேயமற்ற சிங்கள அரசிடம்— இராணுவத்திடம் இம்முறை எடுபடாது.

கல்கி: மனிதாபிமானமுள்ள இந்தியர்களி டம்தான் அகிம்சை முறைப் போராட்டம் வெற்றி பெற முடியுமென்றால், மகாத்மா காந்தி என்ன இந்தியர்களுக்கு எதிராகவா போராடினார்? ஆங்கிலேயர்களை எதிர்த்துத் தானே அகிம்சை முறையில் போராடி வெற்றி பெற்றார்!

பிரபாகரன்: இந்திய சுதந்திரப் போராட் டத்தில் காந்தி மட்டும்தான் பங்கெடுத்துக் கொண்டார் என்று எப்படிச் சொல்ல முடி யும்? நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் போன்ற வர்களும் இருந்தார்கள்; ஆயுதமேந்தினார் கள். இவற்றோடு சுதந்திர எழுச்சி என்பது இந்தியா முழுவதும் பரந்து கிடந்தது.

கல்கி: நீங்கள் சொல்வதை நாங்கள் மறுக்க வில்லை. ஆனால் நீங்களே சொன்ன அந்தச் சுதந்திர எழுச்சி என்பது, நூறு சதவிகிதம் இல்லாவிட்டாலும் மிகப் பெரும்பான்மை யான இந்திய மக்கள் காந்தியடிகளின் அகிம்சை முறைப் போராட்டத்தின் பின்னால் தான் கிளர்ந்து எழுந்தார்கள் இல்லையா? இறுதியில் அதுதான் வெற்றியும் பெற்றது. நேதாஜியின் நோக்கங்கள் பகுதி அளவில் தான் வென்றன.

பிரபாகரன்: உண்மைதான். ஆனாலும் காந்தியடிகளின் அகிம்சைப் போராட்ட முறைதான் வெற்றி பெற்றது என்று சொல்ல முடியாது. அன்றைய இந்தியர்களின் சுதந்திர எழுச்சியைக் கண்ட ஆங்கிலேயர்கள், இந்த அகிம்சை முறை தோல்வியுற்றால் எதிர்காலத் தில் இவர்கள் ஆயுதமேந்தவும் தயங்க மாட் டார்கள் என்று உணர்ந்திருப்பார்கள். அதைத்தான் நேதாஜி போன்றவர்கள் உணர்த்தினார்கள். இது காரணமாகத்தான் தங்கள் காலனி ஆதிக்கத்தின் கீழுள்ள நாடு களுக்கு விடுதலை கொடுக்க முன் வந்தார்கள். அப்படித்தான் நாங்கள் கருதுகிறோம்.

கல்கி: எதையும் நாம் ஒரு முன் அபிப்



பிரபாகரன்

ராயத்தோடும் பிடிவாதத்தோடும் பார்க்க வேண்டியதில்லை. இந்தியாவில் தோன்றிய புத்த மதத்தைத் தங்கள் மதமாக ஏற்றுக் கொண்ட சிங்கள மக்கள் அத்தனை பிடிவாதமாகவும் மிருகத்தனமாகவும்தான் இருப்பார்கள் என்று எப்படியொரு முடிவுக்கு வர முடியும்?

பிரபாகரன்: நாங்கள் இப்போதும் சாதாரணச் சிங்கள மக்களுக்கு எதிராக எங்கள் ஆயுதங்களைப் பயன்படுத்துவதே இல்லை. அவர்கள் மேல் எங்களுக்கு இன்னமும் மரியாதை இருக்கிறது. நல்ல உறவுகளும் இருக்கின்றன. எங்கள் போராட்டமெல்லாம் சிங்கள இராணுவத்தினரோடுதான்.

கல்கி: அப்படியானால் நீங்கள் சிங்கள மக்களையும் சிங்கள இராணுவத்தினரையும் வேறு வேறு பார்வையில்தான் பார்க்கிறீர்களா?

பிரபாகரன்: ஆமாம்.

கல்கி: சிங்கள இராணுவம் என்பது சிங்கள மக்களைக் கொண்டதுதானே? அதில் என்ன வேறுபாடு?

பிரபாகரன்: அருமையான கேள்வி. சிங்கள இராணுவத்தை — அதாவது அரசை ஆட்டி வைத்துக் கொண்டிருப்பவர்கள் புத்த பிட்சுக்கள்தான். மூல காரணம் புத்த பிட்சுக்கள்தான். இலங்கையில் மதமும் அரசியலும் பின்னிக் கிடக்கின்றன!

கல்கி: கொல்லாமையையும், புலால் உண்ணாமையையும், அகிம்சையையும் வற்புறுத்திய மதம் புத்த மதம். அப்படிப்பட்ட மதத்தைச் சேர்ந்த புத்த பிட்சுக்களா இப்படிச் செய்கிறார்கள்?

பிரபாகரன்: ஆமாம். புத்த பிட்சுக்கள் தான் அங்கே அரசியல் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தமிழர்களுக்குச் சம உரிமையும் தமிழ் மொழிக்கு உரிய மரியாதையையும் கொடுக்க முன்வந்த பண்டார நாயகாவைச் சுட்டுக் கொன்றதே ஒரு புத்த பிட்சு தான் என்றால் நம்ப முடிகிறதா?

கல்கி: ஏதோ ஒருவர் அப்படியொரு வெறியில் இருந்திருக்கலாம். காந்தியடிகளைச் சுட்டுக் கொன்றது ஓர் இந்து என்பதற்காக, இந்துக்கள் எல்லாமே அப்படிப்பட்டவர்கள்தாம் என்றோ, அல்லது இந்திரா காந்தியைச் சுட்டவர்கள் சீக்கியர்கள் என்பதாலேயே சீக்கியர்களெல்லாம் அப்படிப்பட்டவர்கள்தாம் என்றோ சொல்லிவிட முடியாதல்லவா?

பிரபாகரன்: நாங்களும் அப்படிச் சொல்லவில்லை. அதன் மூலம் எங்களை நியாயப்படுத்திக் கொள்ளவுமில்லை. அவர்களின் மிருகத்தனம் எந்த அளவுக்கு அதிகரித்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகவே சொன்னோம்; எங்களை விளக்கப்படுத்திக் கொள்வதற்காகவே சொன்னோம்.

கல்கி: இதற்கு என்ன காரணம்?

பிரபாகரன்: இன வெறி தான் காரணம்.

கல்கி: அந்த இனவெறிக்குத்தான் காரணம் கேட்கிறோம்.

பிரபாகரன்: தமிழர் — சிங்களவர் என்ற இந்த இனவெறி ஆதியிலிருந்தே, அரசர் காலத்திலிருந்தே இருந்து கொண்டிருக்கிறது. பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்திலிருந்து விடுபட்டபின், கல்வி, தொழில், போன்ற பலவற்றில் இந்த இனவெறி பிரதிபலித்திருக்கிறது. இதற்குக் காரணம் தமிழர்களின்



* பயிற்சி பெறும் ஒரு விடுதலைப் புலி

உழைப்பும் முன்னேற்றமும்தான் வேறென்ன?

கல்கி: இந்த இனவெறி ஆரம்பத்திலிருந்தே இருந்து கொண்டிருக்கிறதென்றால், அரசாங்கத்தில் தமிழர்களுக்கு அவர்கள் பிரதிநிதித்துவம் தந்திருக்க வேண்டிய அவசியமில்லையே?

பிரபாகரன்: சிங்கள அரசில் தமிழர் பிரதிநிதித்துவம் என்பது வெறும் கண் துடைப்பு. பிரிட்டிஷ் காலத்தில் மத அடிப்படையிலும், இன அடிப்படையிலும் சிறுபான்மையினராக உள்ள தமிழர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்த இருபத்தொன்பதாவது ஷரத்தைப் புதிய அரசியல் சட்டத்தின் மூலம் பறித்தது சிங்கள அரசுதான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஆக, பிரிட்டிஷ் காலத்திலிருந்த பாதுகாப்பைக்கூட சிங்கள அரசு தமிழர்களுக்கு வழங்கவில்லை என்பதுதான் உண்மை.

கல்கி: உங்களுடைய உரிமைகள் பறிக்கப்பட்டிருக்கின்றன என்பதிலும் அந்த உரிமைகள் மீண்டும் பெறப்பட்டாக வேண்டும் என்பதிலும் எங்களுக்குக் கருத்து வேறுபாடே இல்லை. ஆனால், அவற்றைப் பெறுவதற்காக ஆயுதமேந்தித்தான் போராட வேண்டுமா? அகிம்சை முறையிலேயே பெறலாமே என்றுதான் சொல்லுகிறோம்.

பிரபாகரன்: நீங்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். 48ல் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை பறிக்கப்பட்ட போதும் சரி, 58ல் தமிழ் மக்களின் குழந்தைகள் கூடக் கொல்லப்பட்டுக் கோயில்களெல்லாம் இடிக்கப்பட்டபோதும் சரி, அதன்பிறகு நடந்த பல கலவரங்களின் போதும் சரி தமிழர்கள்தான் கொல்லப்பட்டிருக்கிறார்கள் கடந்த 83லிருந்து இன்று மட்டும் மொத்தமாக 10,000 பேருக்கும் அதிகமாகத் தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்] ஆனால் அப்போதும் நாங்கள் ஆயுதப் போராட்டத்தைப் பற்றிய சிந்தனையே இல்லாமல்தான் இருந்தோம். அப்போது நடந்த இனக் கலவரங்களிலெல்லாம் தமிழர்கள்தான் கொல்லப்பட்டார்கள். சிங்கள இராணுவமோ அல்லது மக்களோ தமிழ் மக்களால் கொல்லப்பட்டதாக வரலாறே இல்லை. முப்பதாண்டுகளுக்கு மேலாக எங்களது போராட்டம் அகிம்சை முறையில்தான் இருந்தது. அதையும் முறியடிக்கும் வகையில்தான் — மொழிவாரியாகத் தமிழர்கள் ஒன்று சேர்ந்துவிடக் கூடாது — தமிழர்கள் சிறுபான்மையினராகவே இருந்துவிட வேண்டும் என்ற பிரித்தாளும் சூழ்ச்சியில்தான், தமிழ்ப் பகுதிகளிலெல்லாம் சிங்கள அரசு சிங்கள மக்களைத் திட்டமிட்டுக் குடியேறச் செய்தது; எங்கள் உடைமைகளைப் பறித்தது. எங்கள் மீதான தாக்குதலை மிருகத்தனமாகத் தொடர்ந்தது. இந்தச் சூழ்நிலையில்தான் — நாங்கள் எங்கே கடைசியில் பாலஸ்தீனர்களைப் போல நாடிழந்து போய்விடுமோ என்ற பயத்தில்தான் கடந்த 72ல் ஆயுதமேந்திய எங்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புத் தோன்றியது. இப்போது கூடப் பாருங்கள், நாங்கள் எந்தச் சிங்கள மக்களையும் கொன்றதில்லை. எங்கள் மீது தாக்குதல் நடத்தும் இராணுவத்தினரைத்தான் கொல்லுகிறோம். ஆனால் அவர்கள் அப்படியல்ல; அவர்கள் தாக்குதலை எங்களோடு மட்டும் நடத்தாமல் அப்பாவித் தமிழர்கள் மீதும் நடத்துகிறார்கள். இது அந்த இராணுவத்தின் — சிங்கள அரசின் மிருகத்தனமல்லவா? இதன் முன்பு அகிம்சை எப்படி வெற்றி பெறும்?

கல்கி: இலங்கைத் தமிழர்கள் அத்தனை பேரும் தனித்தமிழீழம் ஒன்றுதான் பிரச்னைக்கான தீர்வு என்று கருதுகிறார்களா?

பிரபாகரன்: ஆமாம். வேறு வழி இல்லை என்பதை அனைவரும் உணர்ந்துவிட்டார்கள். அதன் அடிப்படையில்தான் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியினர் தேர்தலில் வெற்றி பெற்றார்கள் என்பதையும் இந்த இடத்தில் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

கல்கி: சரி, தனித் தமிழீழம் ஒன்றுதான் பிரச்னைக்கான தீர்வு என்று இலங்கைத் தமிழர்கள் அத்தனை பேரும் உணர்ந்துவிட்டதாகவே வைத்துக் கொள்வோம். ஆனால், அதைப் பெறுவதற்கான வழிமுறை ஆயுதப் போராட்டம் ஒன்றுதான் என்று அனைவரும் உணர்ந்திருக்கிறார்கள்?

பிரபாகரன்: நிச்சயமாக. தமிழீழ விடுதலைப்புலிகளின் அமைப்பே தமிழ் மக்களின் அமைப்பின்றித் தனிப்பட்ட அமைப்பு அல்ல.

கல்கி: அப்படியானால், ஆயுதப்போராட்ட அமைப்பு என்பது ஒன்றாகத்தானே இருக்க வேண்டும். இப்படிப் பல்வேறு அமைப்புகளாகப் பிரிந்து கிடக்க வேண்டிய அவசியமென்ன?

* தற்போது PLOT இயக்கத்தின் தலைவராக இருக்கும் முகுந்தன் என்கிற உமா மகேஸ்வரனும் பிரபாகரனும் ஒரே இயக்கத்தில் இருந்தவர்கள்தான். இயக்கத்தில் இருக்கும் யாரும் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது என்பது பிரபாகரனது கட்டளை. ஆனால் முகுந்தன் ஊர்மிளா என்ற பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டதால் பிரபாகரனுக்கும் முகுந்தனுக்கும் பாண்டி பஜாரில் துப்பாக்கிச் சண்டையே வந்தது. முகுந்தன் தனி இயக்கம் துவங்கி விட்டார். ஆனால் இப்போது பிரபாகரனே கல்யாணம் செய்து கொண்டுள்ளார்! ஒரு குழந்தையும் இருக்கிறது!

* சென்னை மீனம்பாக்கத்தில் வெடிகுண்டு வெடித்த சம்பவம் ஞாபகம் இருக்கும். அதைச் செய்தவர்கள் தமிழீழ இராணுவம் என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள். இதன் தலைவர் பணக்கொடை மஹேஸ்வரன். இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட விக்னேஸ்வரராஜா என்பவர் ஜாமீனில் வெளி வர-கிள்ளிவளவனும் திருநாவுக்கரசும் உதவினார்கள். கிள்ளிவளவன் நெடுமாறனது காமராஜ் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர். ராதாகிருஷ்ணன் என்ற வக்கீல் இதற்கு உதவி செய்தார். ஜாமீனில் வெளிவந்த விக்னேஸ்வர ராஜா லண்டனுக்கு ஓடிப் போய்விட்டார். திரும்பி வர மறுத்துக் கொண்டிருக்கிறார். எனவே இப்போது கிள்ளிவளவனும் திருநாவுக்கரசும் வழக்கறிஞர் ராதாகிருஷ்ணனும் வாரம் ஒருமுறை சைதாப்பேட்டை கோர்ட்டுக்குச் சென்று வந்து கொண்டிருக்கிறார்கள்! இதில் மிகவும் வேதனையான விஷயம் என்னவென்றால் கிள்ளிவளவன் தமது ஒரே சொத்தான வீட்டைக் கோர்ட்டில் ஜாமீனுக்காகக் காட்டி வி. ராஜாவை வெளியே கொண்டு வந்தார். இப்போது பெண்களின் கல்யாணத்திற்கு வீட்டை அடமானம் வைத்துப் பணம் புரட்டலாம் என்றால் அதுவும் முடியாது! சிக்கலிலிருந்து எப்படி விடுபடுவது என்று தன்னைச் சந்திக்க வருபவர்களிடம் கேட்டுக் கொண்டிருக்கிறார் கிள்ளிவளவன்!

* பிரபாகரனது இயக்கத்தில் பெரும்பாலோர் அவரது சொந்த ஊரான வெல்வெட்டித் துறையைச் சேர்ந்த மீனவ சமூகத்தினர். 'டெலோ' இயக்கத்தில் இருப்பவர்கள், யாழ்ப்பாணம்—திரிகோணமலையைச் சேர்ந்த சைவ வேளாளர்கள். இப்படியாக ஒவ்வொரு இயக்கத்திலும் குறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்தவர்கள் அதிகமாக இருக்கிறார்கள்.

பிரபாகரன்: அப்படிச் சொல்ல முடியாது. 'ஈராஸ்' இயக்கத்தோடு இன்னமும் எங்களுக்குத் தொடர்பு இருக்கிறது.

கல்கி: இருக்கட்டும். டெலோ இயக்கத் தலைவர் சிறீ. சபாரத்தினத்தையும், மற்ற சிலரையும் உங்கள் இயக்கம் கொல்ல வேண்டிய அவசியமென்ன?

பிரபாகரன்: அவர்கள் மக்கள் விரோதச் செயல்களில் ஈடுபட்டார்கள். யாழ்ப்பாணத்திலுள்ள தமிழர்களிடம் அவர்களே கொள்ளையடிக்க ஆரம்பித்துவிட்டார்கள். வேறு வழி இல்லை....

கல்கி: ..... என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். அப்படித்தானே?

பிரபாகரன்: நீங்கள் யாழ்ப்பாணத்தில் போய்க் கேட்டுப் பாருங்கள். அவர்கள் என்ன செய்தார்கள் என்பதை!

கல்கி: உங்களுடைய பல்வேறு அமைப்புகளின் செயல்கள் பல உங்களிடையே ஒற்றுமை நிலவுவதாக உணர்த்தவில்லை. அப்படி நிலவுவதாக ஒப்புக் கொண்டாலும் ஆயுதமேந்திப் போராடிப் பழக்கப்பட்ட போராளிகள், ஒருகாலத்தில் பதவி ஆசைக்காகவும் தங்கள் ஆயுதங்களைப் பயன்படுத்த மாட்டார்கள் என்பதற்கு என்ன நிச்சயம்? பல நாடுகளில் இதுபோல நடந்திருக்கிறதே!

பிரபாகரன்: 'தமிழீழ விடுதலைப் புலிகள்' இயக்கம் என்பது தனிப்பட்ட பிரபாகரனின் இயக்கம் அல்ல. நான் முன்பே சொன்னதுபோல், இந்த இயக்கம் மக்கள் இயக்கம். அதனால் எதிர் காலக் குழப்பங்களுக்கோ, பதவிப் போராட்டங்களுக்கோ அவசியமே இல்லை. தங்கள் தலைமையை மக்கள் தீர்மானிப்பார்கள்.

கல்கி: உங்கள் இயக்கம் மட்டும்தான் உண்மையான இயக்கம் என்கிறீர்களா?

பிரபாகரன்: நிச்சயமாக. இல்லையென்றால் மக்கள் எங்களுக்கு ஆதரவு கொடுப்பார்களா? மக்களின் முழு ஆதரவும் இல்லாவிட்டால், இன்றைக்கும் யாழ்ப்பாணத்திற்குள் சிங்கள இராணுவம் நுழைய முடியாதபடி எங்களால் தற்காத்துக் கொள்ள முடியுமா என்ன?

கல்கி: யாழ்ப்பாணத் தமிழர்கள் என்பவர்கள் எப்போதுமே தோட்டத் தொழிலாளர்களாக உள்ள தமிழர்களைக் 'கள்ளத் தோணி ஏறி வந்தவர்கள்' என்றுதான் பரிகாசம் செய்வார்கள். தங்களோடு சமமாக அவர்களைப் பாவிப்பதில்லை. இந்நிலையில் தனித் தமிழீழம் அமைந்தால், இலங்கையின் மற்ற இடங்களிலுள்ள தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் கதி என்ன என்கிறார்களே?

இந்தச் சந்தேகத்தை ஒருமுறை தொண்டமானைச் சந்தித்தபோது அவரே எழுப்பினார்!

பிரபாகரன்: எங்கள் முன்னோர்கள் அவர்களை அப்படிப் பரிகாசம் செய்திருக்கலாம். நான் மறுக்கவில்லை. ஆனால் நாங்கள் அப்படியில்லை. அவர்களுக்கும் சேர்த்தேதான் போராடுகிறோம். இப்போது நாங்கள் அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம். தமிழர்களுக்குள் பேதம் என்ற பேச்சுக்கே எங்களிடம் இடமில்லை. நான் சொல்லும் இந்தப் பதில் தமிழ் பேசும் முஸ்லிம்களுக்கும் பொருந்தும்.

கல்கி: சரி, நீங்களே முன்பு சொன்னீர்கள், உங்களின் இப்போதைய போராட்டம், தற்காப்புக்கு முக்கியத்துவம் கொடுத்துப் போராடப்படும் போராட்டம் என்று. இந்நிலையில், இந்தியா போன்ற வேறொரு நாட்டின் துணை இல்லாமல் தனித் தமிழீழம் என்பது அடைந்துவிடக் கூடிய 'லட்சியம் தானா? ஏனெனில் இந்தியா உங்கள் தனித் தமிழீழத்திற்குத் தமது ஆதரவு இல்லையென்பதை வெளிப்படையாகவே கூறிவிட்டதே!

பிரபாகரன்: எங்களால் மட்டுமே முடியுமா முடியாதா என்பது வேறு விஷயம். ஆனால் இப்போது நாங்கள் எங்கள் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பில்லாத காரணத்தால் போராடித்தான் ஆக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் இருக்கிறோம். போராடாமலிருந்தாலும் சிங்கள இராணுவத்தின் மிருகத்தனத்தில் நாங்கள் கொல்லப்படுவது உறுதியாகிவிட்டதால், அப்படிச் சாவதைவிடப் போராடிச் சாவதே மேல் என்ற முடிவுக்கு வந்துவிட்டோம்.

கல்கி: ஆக, யாருடைய உதவியுமின்றித் தனித்து நின்று போராடி வெற்றி பெற முடியாது என்பது உங்களால் உணரப்பட்டிருக்கிறதா?

பிரபாகரன்: தோல்வியடைந்துவிட்டால் என்ன செய்வது என்று எப்படிப் போராடாமல் இருக்க முடியும்? அதோடு பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினருக்கு ஆரம்பத்தில் ஆதரவு தராத நாடுகளெல்லாம் இப்போது ஆதரவு தரவில்லையா? இந்தியாவும் இப்போது அந்த இயக்கத்தை அங்கீகரிக்கவில்லையா?

கல்கி: உங்கள் தனித் தமிழீழக் கோரிக்கையைத்தான் இந்தியா வெளிப்படையாகவே ஆதரிக்க முடியாதென்று சொல்லிவிட்டதே?

பிரபாகரன்: உலக அரசியல் ஒருநாள் மாறும். அப்போது இந்தியா எங்களை ஆதரிக்கக் கூடும். சமீப காலங்களில் சர்வதேச நிலைமைகளைப் பார்த்தால் பல்வேறு விடுதலை இயக்கங்களுக்கு இந்தியா ஆதரவு அளித்து வருவது தெரியும். இன்னொரு விஷயமும் இருக்கிறது. ஈழ விடுதலைக்கு இந்தியா உதவுமா அல்லது உதவாதா என்பது சர்வதேச அரசியல் (**Geo Politics**) நிலைமைகளையும் பொறுத்தது.

கல்கி: உங்கள் ஆயுதங்களைப் பறிமுதல் செய்ததிலிருந்தே உங்கள் தனித் தமிழீழக் கொள்கையை இந்தியா ஆதரிக்காது என்பது வெட்ட வெளிச்சமாகிவிடவில்லையா?

பிரபாகரன்: அப்படி நாங்கள் நினைக்கவில்லை. இப்போதும் நாங்கள் இந்தியாவைத்தான் நம்புகிறோம்.

கல்கி: ஆயுதங்களைப் பற்றி பேச்சு வருவதால் ஒன்று கேட்கிறோம். இந்தியாவில் ஒரு குடிமகன் சாதாரண துப்பாக்கி வைத்துக் கொள்வதற்குக்கூட அரசிடம் லைசென்ஸ் பெற வேண்டும். அப்படியிருக்க நீங்கள் நவீன ரக ஆயுதங்களை வைத்து இருப்பது சட்ட விரோதமல்லவா?

பிரபாகரன்: (மௌனம்) .....

கல்கி: இது தவறென்று நீங்கள் நினைக்கவில்லையா? உங்களிடம் அவை எப்படி வந்து சேர்ந்தன?

பிரபாகரன்: எங்களிடம் இருந்த ஆயுதங்களையெல்லாம் போலீஸார் பறிமுதல் செய்துவிட்டார்களென்பது வெளியில் வந்த செய்தி. ஆக, போலீஸாரிடம்தான் அந்த ஆயுதங்கள் இப்போது இருக்கின்றன. அந்த ஆயுதங்கள் எங்களிடம் எப்படி வந்தன என்பதை அவர்களைக் கேட்டால் தெரியும். அவர்களையே சொல்லச் சொல்லுங்கள்.

கல்கி: இன்னமும் இந்தியாவைதான் நம்புகிறோம் என்று சொன்னீர்கள்; அப்படியானால், இந்திய அரசின் சமரச முயற்சிக்கு நீங்கள் அத்தனை ஆர்வம் காட்டுவதாகத் தெரியவில்லையே. தமது பிடிவாதத்திலிருந்து ஜெயவர்த்தன இறங்கி வந்தாலும் நீங்கள் வருவதில்லை என்றதொரு கருத்து நிலவுகிறதே?

பிரபாகரன்: ஜெயவர்த்தன இறங்கி வந்திருக்கிறார் என்று பிரமாதப்படுத்துவது தவறு. கடந்த 57ல் தமிழர்கள் வாழும் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு மாநில சுயாட்சி அந்தஸ்து வழங்கப்படும் என்றதோர் நிலை ஏற்பட்டபோது, அதை எதிர்த்து புத்த பிட்சுக்களுடன் ஊர்வலம் போனதே இந்த ஜெயவர்த்தனதான். அதோடு, அன்றைக்குக் கொடுக்கப்படவிருந்த அந்தஸ்தைக் கூட இன்றைக்குக் கொடுக்காமல் கிழக்கு மாகாணத்தையே மூன்றாகப் பிரிக்கும் ஜெயவர்த்தனவின் சூழ்ச்சியை எப்படி ஒப்புக் கொள்ள முடியும்? ஆக, இப்போது ஜெயவர்த்தன இறங்கி வரவில்லை. அன்றைய திட்டத்தைவிட இன்றைக்குப் பின்தங்கிய தொரு திட்டத்தைத்தான் அவர் சொல்லுகிறார். அதைக்கூட அவர் எழுத்து பூர்வமாகத் தர முன் வரவில்லை என்பதையும் நீங்கள் கவனிக்க வேண்டும்.

கல்கி: அதாவது அன்றைக்குக் கொடுக்கப்

இப்போது! நியூட்ரின் வழங்குகிறது...
இன்ஸ்டன்ட் ஃபுட்ஸ்!

விரும்பிக் கேட்டதுமே...



குலாப் ஜாமூன்!

ஆம். உண்மை. இப்போது நியூட்ரின், இன்ஸ்டன்ட் குலாப் ஜாமூன்களை உங்களுக்கு வழங்குகின்றது. இன்சுவை கொழிக்கும் இனிப்புப் பண்டம், நொடிகளில் தயார்! நாவினில் நீரூறும் குலாப் ஜாமூன்களைத் தயாரித்து குடும்பத்தினரையும் நண்பர்களையும் வியப்பில் ஆழ்த்துங்கள். நியூட்ரின் இன்ஸ்டன்ட் குலாப் ஜாமூன் மிக்ஸ் உபயோகித்து, கணப்பொழுதில் தயாரித்து மகிழுங்கள்.

நியூட்ரின் இன்ஸ்டன்ட் குலாப் ஜாமூன் மிக்ஸ் 200 கிராம் மற்றும் 100 கிராம் பாக்கெட்டுகளில் கிடைக்கிறது.

நீங்கள் விரும்பும் மிருதுவான தேனூறும் குலாப் ஜாமூன்களை உங்கள் அன்றாட உணவுடன் ருசித்து ரசித்துச் சாப்பிடுங்கள்.

வாழ்வில் இனியவைகளை
வழங்குவோர் நியூட்ரின்!

நியூட்ரின்
இன்ஸ்டன்ட்
திகைப்பூட்டும் தித்திப்பு



ACIL/0919/85 TAM

nutrine

வழங்குவோர்: இந்தியாவிலேயே மிகப்பெருமளவில் விற்பனையாகும் மிட்டாய் தயாரிப்பாளர்கள்.

பட்டதுபோல் அல்லது இந்தியாவில் இருப்பதுபோல் ஒரு மாநில அந்தஸ்து உங்களுக்குக் கொடுக்கப்பட்டால், உங்கள் தனித் தமிழீழக் கொள்கையை விட்டுவிடுவீர்களா? அத்திட்டத்தை ஒப்புக் கொள்வீர்களா?

பிரபாகரன்: தனித் தமிழீழ லட்சியத்தை விட்டுவிட்டால் 'பிரபாகரன் ஒரு துரோகி!' என்று தமிழ் மக்களே என்னைத் தொலைத்து விடுவார்கள்.

கல்கி: தயவு செய்து, இதையே நீங்கள் ஜெயவர்த்தனாவுக்கும் திருப்பிப் போட்டுப் பாருங்கள். தனித் தமிழீழத்திற்கு ஒப்புக் கொண்டால் சிங்களவர்கள் அவரை மட்டும் விட்டு வைப்பார்களா என்ன? ஆக, பிரச்னைக்கு ஒரு சுமுகமான தீர்வு வேண்டாமா? மாநில அந்தஸ்து கொடுத்தால் தனித் தமிழீழத்தை விட்டுவிடுவீர்களா, மாட்டீர்களா?

பிரபாகரன்: அப்படியொரு திட்டம் வரும்போதுதான் அது பற்றிச் சொல்ல முடியும். இப்போது எப்படிச் சொல்ல முடியும்?

கல்கி: அப்படியொரு திட்டம் வந்தால் என்ன செய்வீர்கள் என்பதுதான் கேள்வி!

பிரபாகரன்: வரட்டும். அப்போது சொல்கிறோம்.

கல்கி: நல்லது. நீங்கள் அத்தனை பேரும் எங்களிடம் அடைக்கலம் தேடி, ஈழத்திலிருந்து வந்திருக்கும் எங்கள் சகோதரர்கள். உங்களை நாங்கள் மிகவும் நேசிக்கிறோம். உங்கள் பிரச்னைக்கு விரைவில் ஒரு சுமுகமான தீர்வு காணப்பட வேண்டும் என்பதிலும் நாங்கள் மிகவும் அக்கறை கொண்டுள்ளோம். இந்நிலையில் இங்கு—எங்கள் அடைக்கல நிழலில் இருக்கும் விடுதலைப் புலிகள் எங்களையே சுடுகிறீர்களே ....?

பிரபாகரன்: தயவு செய்து நீங்கள் ஒரு விஷயத்தை ஆழமாகப் பார்க்க வேண்டும். தமிழகத்தில் நடந்த சம்பவங்களுக்கும் எங்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. மற்ற இயக்கத்தினர்தான் அப்படிச் செய்கிறார்கள். ஆனால் தமிழ்த் தினசரிகளிலெல்லாம், 'விடுதலைப் புலிகள் சுட்டார்கள்!' என்று கொட்டை எழுத்தில் போடுவதுதான் வருத்தத்திற்குரிய விஷயம். விடுதலைப் புலிகள் என்றால் அது எங்களைத்தான் குறிக்கும். காரணம், எங்கள் இயக்கத்தின் பெயரே தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE). எங்கள் இயக்கம் தமிழகத்தில் இதுவரை எந்தச் சிறு சலசலப்பையும் ஏற்படுத்தியதே இல்லை. 'விடுதலைப் புலிகள்' என்ற போர்வையில் சில சமூக விரோதிகளும் ஊடுருவி இருக்கிறார்கள். அவர்களைக் கண்காணிப்பது அவசியம் என்று நாங்களே ஆரம்பத்தில் தமிழக அரசிடம் எடுத்துக் கூறியிருக்கிறோம்.

கல்கி: கடைசியாக ஒன்று. தி.மு.க. தலைவர் கருணாநிதி நிதி திரட்டிக் கொடுத்தபோது உங்கள் இயக்கம் மட்டும் அதை வாங்கிக் கொள்ளவில்லையே அது ஏன்? எதிர்க் கட்சிகளின் ஆதரவைப் பெறுவதை விட ஆளும் கட்சியின் ஆதரவை இழந்து விடக் கூடாது என்ற உங்களின் எண்ணம் தான் காரணமா?

பிரபாகரன்: கலைஞரின் நிதியை வாங்கக் கூடாது என்ற எண்ணம் எங்களுக்கு ஒரு போதும் இருந்ததில்லை. சிறிது தாமதப் படுத்தினோம், அவ்வளவுதான். எங்களுக்கு இங்குள்ள அனைவரும் ஒன்றுதான். எனவே, தயவு செய்து இங்குள்ள அரசியலோடு எங்களைத் தொடர்புபடுத்தாதீர்கள்!

அட்டை வண்ணப்படமும்,
பிரபாகரன் படமும்:

ஏ. வி. பாஸ்கர்


தோரா
பாதல்
உங்களை உள்ளே தள்ளியாச்சு! இனிமே புலியைச் சமாளிக்கறது எனக்கொண்ணும் கஷ்டமில்லே!
பர்னாலா
பயங்கரவாதிகள்


காங்கிரஸ்லே சேர வந்துட்டேன்! நீங்க சொன்னா 'டக்'னு உக்காந்துடுவேன்
மகாராஷ்டிர முதல்வர் பதவி
சரத் பவார்


என் வேஷ்டி போனது போகுது.. உங்க வேஷ்டி பத்திரம்!
ப.உ.ச
ஊழல் ஒழிப்பு இலாகா
ஊழல்

கல்கி

1986 டிசம்பர் 14
மலர் 45 இதழ் 20
அக்ஷய கார்த்திகை 28



பயங்கரவாதம் வெல்ல விடுவோமா?


ஒரு பாவமும் அறியாத இருபத்திரண்டு பஸ் பயணிகளைக் கொன்று குவித்தார்களே என்ற ஆத்திரமும் வருத்தமும் மேலோங்க, 'பயங்கரவாதிகளை அடக்கு, ஒடுக்கு!' என்று கோஷம் போடுவது எளிது. 'மத்திய, மாநில அரசுகள் வன்மையான நடவடிக்கை எடுக்கவில்லை' என்று சாடுவது அதைவிட எளிது. இந்தக் கோபமும், உணர்ச்சிக் கொந்தளிப்பும், 'அக்கிரமம் நடப்பதைத் தடுக்க நம்மால் முடியாதிருக்கிறதே' என்ற தாபத்தின் விளைவுகள். ஆனால் சற்று யோசித்துப் பார்த்தால், ராஜீவ்—பூட்டாசிங்—பர்னாலா—ரொபைரோ ஆகியோரின் பணி எவ்வளவு கடுமையானது என்பது புரியும். படையெடுத்து வரும் பகைவனை எதிர்த்து அழித்துவிடலாம். விரோதி நாட்டின் மீது படையெடுத்துப் போய் வெற்றி பெறலாம். யுத்தம் என்பதே பயங்கரம்தான் என்றாலும் அதற்கும் ஓர் இலக்கணம் உண்டு. ஆனால் பயங்கரவாதம் என்பது எந்த இலக்கணத்துக்குள்ளும் அடங்காதது. தலைவர்களுக்குப் பாதுகாப்புத் தந்துவிடுகிறார்களே, அவர்களைத் தாக்க முடியவில்லையே என்ற ஆத்திரத்தில், ஒரு பாவமும் அறியாத மக்களைத் தாக்கிக் கொன்றுவிட்டு, ஓடி விடுகிறவர்களை எப்படி கண்டுபிடிப்பது? எங்கே சந்திப்பது? எவ்வாறு சமாளிப்பது? தலைவருக்கு வேணுமானால், 'செக்யூரிடி' ஏற்பாடு செய்யலாம்; நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் ஒரு மெய்க்காவலரை நியமிக்க முடியுமா?

எனவே, பஞ்சாப் பிரச்னை என்பது பயங்கரவாதிகளை வளைப்பது மட்டுமல்ல என்பது உணரப்பட வேண்டும். பயங்காரவாதிகளுக்குப் பயிற்சியும் ஊக்கமும் அளித்து, பாகிஸ்தான் அவர்களை எல்லை கடந்து அனுப்பிக் கொண்டிருக்கிறது. எனவே எல்லைக் காவல் குறித்து, வாஜ்பாய் போன்றவர்கள் கூறியுள்ள சிறந்த யோசனைகள் ஏற்கப்பட வேண்டும். அதே நேரத்தில் பாகிஸ்தானுடன் ராஜரீக உறவுகள் மூலம் தொடர்பு கொண்டு, இந்த அநியாயத்துக்கு அந்நாடு துணை போகாமல் தடுக்க வேண்டும். இதற்கு அமெரிக்க அதிபரின் செல்வாக்கு மிகவும் பயன்படும்.

பிரச்னையின் மற்றொரு அம்சம் பஞ்சாப் அரசியல். பாதல், டோரா ஆகியோரைச் சிறைப்படுத்துவது எளிது. ஆனால் இதனால் பிரச்னை தீராது. ஒருவேளை அதிகரிக்கவே வாய்ப்புண்டு! இவர்கள் பர்னாலாவை ஒரு சங்கடத்தில் ஆழ்த்தும் பொருட்டு பயங்கரவாதிகளுக்குத் தங்கள் அனுதாபங்களைச் சில தருணங்களில் தெரிவித்திருக்கிறார்களே தவிர, இவர்களே பிரிவினைவாதிகளாகவோ பயங்கரவாதிகளாகவோ மாறிவிட்டதற்கான சாட்சியம் ஏதும் இல்லை. இந்நிலையில் அகாலிதளத்தில் உள்ள பிளவுதான் பயங்கரவாதிகளை ஒடுக்குவதில் உள்ள மிகப் பெரிய இடையூறு என்பது உணரப்பட வேண்டும். அகாலிதளத்தில் ஒற்றுமை உருவாவது என்பது சாத்தியமே இல்லையா? இதற்கான முயற்சிகளை ராஜீவ் ஏன் மேற்கொள்ளவில்லை? அது வேறு கட்சியின் உட்பூசல் விவகாரம் என்று ஒதுங்கலாமா?

லோங்கோவாலுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் இன்னும் முழுமையாக நிறைவேற்றப்படாமல் இருப்பது மற்றுமொரு பெரிய குறைபாடு. (அஸ்ஸாம் ஒப்பந்தமும் இப்படியே அந்தரத்தில் விடப்பட்டிருக்கிறது.) ஒப்பந்தங்களில் கையெழுத்துப் போட்டுக் கைகுலுக்கி, போட்டோ எடுத்துக் கொள்வது சுலபம். ஒப்பந்தத்தை நிறைவேற்றி வைப்பது ரொம்பக் கஷ்டம். இந்தக் கடினமான காரியத்தில் ராஜீவ் வெற்றி பெற்றே ஆகவேண்டும். மாறாக இதில், ராஜீவ் தோல்வி கண்டால், அது பயங்கரவாதத்தின் வெற்றியாகிவிடும்!


தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்.



* இந்தத் தண்ணீர் துவைக்கவும், குளிக்கவும்கூட லாயக்கில்லாதது...



* பேரூராட்சித் தலைவர் அங்கப்பன்



* துவைக்கவும் லாயக்கில்லாததென்று கொடுக்கப்பட்ட சர்ட்டிபிகேட்



பெரியார் மாவட்டம் — ரீ-விசிட்:

சில மகிழ்ச்சிகள்; சில ஏமாற்றங்கள்...

"**வா**ங்க ஸார்" என்று நம்மை மீண்டும் வரவேற்றார் சென்னிமலை அம்மாபாளையம் முத்துசாமி. இந்தப் பகுதி மக்கள் குடி தண்ணீருக்காகப் படும் அல்லல்களை ('தண்ணீரை எதிர்பார்த்துத் தவமிருக்கிறார்கள்' — 27.4.86 கல்கி இதழ்) நீங்கியதா என்று விசாரித்தால், "ஒண்ணும் நடக்கலை ஸார்" என்று பரிதாபமாகச் சொல்கிறார்.

சென்னிமலையின் விரிவாக்கப் பகுதியான அம்மாப்பாளையம் மட்டுமல்ல, சென்னிமலை பேரூராட்சியைச் சேர்ந்த முகாசி மற்றும் ஒட்டப் பாறை ஊராட்சிகளைச் சேர்ந்த ஊர்களும் தண்ணீர்ப் பஞ்சத்தால் பரிதவிக்கின்றன. இந்தப் பஞ்சத்திற்குக் காரணம் தண்ணீர் இல்லாத குறை இல்லை. பவானி ஆற்றிலிருந்து சென்னிமலைக்கு வரும் பைப் லைனிலிருந்து இடையில் சென்டெக்ஸ் காலனிக்கும் தண்ணீர் கொடுக்கக் கனெக்ஷன் தரப்பட்டிருக்கிறது. ஆனால் சென்டெக்ஸ் காலனியில் குடி தண்ணீருக்காக மட்டும் உபயோகிக்காமல், சாயப் பட்டறைக்கும் ஆயிரக்கணக்கான லிட்டர் தண்ணீரை உபயோகப்படுத்துவதால், சென்னிமலைக்கு வரும் தண்ணீரின் அளவு குறைந்து விடுகிறது. அதனால்தான் மேற்சொன்ன ஊர்களில் பஞ்சம்.

பேரூராட்சித் தலைவர் அங்கப்பனைச் சந்தித்தபோது, "சென்டெக்ஸ் நிர்வாகம் குடி தண்ணீரை வியாபார வேலைகளுக்குப் பயன்படுத்துவதை நிறுத்த வேண்டுமென்று 4.5.86 அன்று ஒரு சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டினேன். பெரும்பாலோர் சென்டெக்ஸ் நிர்வாகத்திற்கு ஆதரவாகவே பேசினார்கள். இத்தனைக்கும் பல லட்சம் வருமானமுள்ள சென்டெக்ஸ் நிர்வாகம் தண்ணீருக்குக் கட்டணம் செலுத்தினாலும், இந்தக் குடி தண்ணீர்த் திட்டத்துக்காக பைசாக் கூடச் செலவிடவில்லை. ஒருநாள் திடீரென்று சென்டெக்ஸ் காலனிக்குள் விஜயம் செய்து டேங்க்கைப் பார்த்தேன். பிரும்மாண்டமான டேங்க்! காலனிக்குள் செல்லும் குழாய்க்கான கேட் வால்வை வெளியே வைத்து, சென்டெக்ஸ் காலனிக்கு முறைப்படி

தண்ணீர் விடும் பொறுப்பைப் பேரூராட்சி நிர்வாகத்திடம்தான் தர வேண்டும் என்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமும் கேட்டுக் கொண்டுள்ளேன். சென்டெக்ஸ் நிர்வாகத்தைப் பற்றி நான் சொல்ல வேண்டியதில்லை. பெரிய இடத்துத் தொடர்பு உள்ளவர்கள். மக்கள் என் பக்கம் இருப்பார்கள் என்ற நம்பிக்கையில்தான் இப்படி நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறேன். பார்ப்போம்'' என்றார்.

மேலும் அம்மாப்பாளையத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் சரியாக வராததால், அங்கு ஆழ்குழாய்கள் போடப்பட்டு அந்தத் தண்ணீரை மக்கள் உபயோகித்து வருகிறார்கள் என்றும் அந்தத் தண்ணீரை உபயோகித்தால் சரும வியாதிகள் வருகின்றன என்றும் முன்பே குறிப்பிட்டிருந்தோம் அல்லவா? அந்தத் தண்ணீரைக் கோயமுத்தூர் அரசு சோதனைச் சாலையில் பரிசோதித்துப் பார்த்த போது, 'அந்தத் தண்ணீர் குளிப்பதற்கும் துவைப்பதற்கும்கூட உபயோகமில்லாதது' என்று தெரிய வந்ததாம். ஆனால் அம்மாப்



• ஓசைப்பட்டி: அப்படியே கிடக்கும் அஸ்திவாரம்

பாளையம் வாசிகள் என்ன செய்வார்கள். அந்தத் தண்ணீரைத்தான் தொடர்ந்து உபயோகிக்கிறார்கள். வேறு வழி?

ஈரட்டுப்பாளையம் —

சென்னிமலை — ஊத்துக்குளி பாதையில் இருந்து விலகி இரண்டு கி.மீ. தூரம் தள்ளி உள்ள கிராமம் ('அளவான குடும்பம்தான்; ஆனாலும் வறுமைதான்' — 20.4.86 கல்கி இதழ்). சென்றமுறை நாங்கள் போய்வந்த பிறகு, நடந்த இரண்டு முன்னேற்றங்கள்: பொதுக் கிணற்றின் சுவர் இடிந்திருந்ததைச் சரிப்படுத்திக் கட்டியுள்ளார்கள்; 2. ஒரே ஒரு ஆழ்குழாய் கிணறு போட்டுள்ளார்கள்.

''இந்த ஆழ்குழாய் போடுவதற்கும் அரசை மிரட்டித்தான் காரியத்தைச் சாதித்தோம்!'' என்றார் இளைஞர் குப்புசாமி. ''கல்கியிலிருந்து நீங்கள் வந்து சென்ற பிறகு, எங்களுக்கெல்லாம் ஓர் உத்வேகம் வந்து, கடந்த 3.5.86 அன்று 'பஸ் மறியல் செய்வோம்' என்று அறிவித்தோம். அதற்கு அவசியமில்லாதபடி அரசு உடனே ஆழ்குழாய் ஒன்றைப் போட்டுவிட்டது'' என்றார்.

பஞ்சாயத்து மெம்பர் செல்லப்பன் 'சாலை வசதி'யைப் பற்றிக் குறிப்பிட்டார். ''சென்னிமலை — தோப்புப்பாளையம் — ஊத்துக்குளி சாலைக்கும், தோப்புப்பாளையம் — விஜயமங்கலம் சாலைக்கும் இடையில் எங்கள் கிராமம் அமைந்துள்ளது. மேற்சொன்ன இரண்டு சாலைகளையும் எங்கள் கிராமத்தின் வழியாக இணைக்கலாம். அப்படி இணைத்து பஸ் விட்டார்களானால் ஏராளமான கிராமங்கள் பயன்பெறும். எங்களது அடுத்த போராட்டம் சாலை வசதிக்காகத்தான் இருக்கும்'' என்றார் செல்லப்பன்.

கல்கி நிருபர்கள் வந்து போன பிறகு சென்னிமலை ஆரம்பச் சுகாதார அலுவலர்

• அல்லாவு



கள் வந்து கிராமத்தில் சென்ஸஸ் எடுத்துக் கொண்டு போனார்களாம். 'தமிழரசு' பத்திரிகையிலிருந்துகூட வந்து பேட்டி, படங்கள் எடுத்துக் கொண்டு போனதாகச் சொன்னார் குப்புசாமி. கு.க. திட்டத்தை, அரசின் பிரசாரத் தாக்குதல் — வற்புறுத்தல்கள் இல்லாமல் வெற்றிகரமாகச் செயல்படுத்திக் கொண்டு வரும் தங்கள் கிராமத்தை அரசு ஸ்பெஷலாகக் கவனிக்க வேண்டும் என்பதே இந்தக் கிராமவாசிகளின் கோரிக்கை.

வரத்துக்கரை —

''நீங்கள் எழுதினால் ஏதாவது விமோசனம் கிடைக்கும்னு நினைச்சோங்க...'' என்று சோகத்துடன் ஆரம்பிக்கிறார் வரத்துக்கரை



• செல்லி கவுண்டனூரில் முன்பு கல்கி சென்ற போது இருந்த நிலை.....

• .....இப்போது அங்கே, கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள வீடுகள்



• செல்லி கவுண்டனூர்: எருமைக்குக் கடன்....



அய்யாவு. ('பனையேறும் எங்களுக்கு பஸ் ஏற வழியில்லீங்க' — 27.4.86 கல்கி இதழ்) கிளுவை முட்கள் நிறைந்த அந்த இட்டேரிப் பாதை; மழை வேறு பெய்திருந்ததால் சேறும் சகதியுமாய்....

வரத்துக்கரை கிராமத்தைப் பற்றிக் கட்டுரை வந்தவுடன், வரத்துக்கரையை உள்ளடக்கிய குண்டடம் பஞ்சாயத்து யூனியனின் தலைவர் துரைராஜ், அய்யாவுவைக் கூப்பிட்டனுப்பி, "எங்களிடம் குறைகளைச் சொல்லக் கூடாதா?" என்று கேட்டாராம்.

பஞ்சாயத்து மெம்பர், சுப்பராயனைச் சந்தித்துக் கேட்டபோது, "எங்கே பணம் இருக்கு?" என்று வழக்கமாக எல்லோரும் சொல்கிறபடியே சொன்னார். "வரத்துக்கரை கிராமமக்களுக்குச் சாலை வசதி வேண்டுமானால் 'கல்கி' ஆசிரியரும் கலெக்டரும் வந்து செய்வார்கள்' என்று உங்கள் பஞ்சாயத்தில் தீர்மானம் போட்டீர்களாமே?" என்று சுப்பராயனைக் கேட்டபோது, "இல்லீங்க.... தலைவர் அப்படிச் சொல்லிட்டிருந்தாரே தவிர, தீர்மானமா எதுவும் போடலே!" என்று கூறினார்.

இப்போதிருக்கும் நிலைமையை வைத்துக் கணித்தால் வரத்துக் கரைக்கு அடிப்படை வசதிகள் என்பது 21ம் நூற்றாண்டில்கூட வருமா என்பது சந்தேகமே! அத்தனை சுறுசுறுப்பாக இயங்குகிறது அரசு இயந்திரம்.

ஓசைப்பட்டி —

ஆப்பக்கூடல் அருகேயுள்ள இந்தக் கிராமத்திற்குச் சென்றவுடன், "ஐயா, எங்களுக்கு எப்பங்க ஐயா கட்டித் தருவீங்க?" என்று காலில் விழாத குறையாகக் கேட்டார் பாட்டன் என்ற ஹரிஜனப் பெரியவர். 'நாங்கள் பவானி கிராமிய கூட்டுறவுச் சங்கத்தினர் அல்ல' என்று தெரிவித்ததும் அவர் முகம் சுருங்கிப் போயிற்று.

அஸ்திவாரங்கள் இன்னமும் அப்படியேதான் இருக்கின்றன. ('நம்பிக்கை வெல்லுமா — நம்பிக்கைத் துரோகமா?' — 27.4.86 கல்கி இதழ்) சென்ற மாதம் மழை பெய்தபோது, மிகவும் கஷ்டப்பட்டுப் போய் விட்டார்களாம். அந்த மழையில் ஏற்கெனவே போடப்பட்ட அஸ்திவாரம் அங்கங்கே கரைந்து போயிருக்கிறது. என்ன காரணத்திற்காக இந்த வீடுகள் கட்டப்படாமலிருக்கின்றன என்பது அந்த ஹரிஜனக் காலனி வாசிகளுக்குத் தெரியவில்லை. பவானி கிராமிய கூட்டுறவுச் சங்கத்தின் பொறுப்பின்மையைப் பார்க்கையில் ஓசைப்பட்டி ஹரிஜன வாசிகளின் நம்பிக்கை என்னும் அஸ்திவாரம், காலப்போக்கில் கரைந்து விடும் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

செல்லிகவுண்டனூர் —

முன்பு நாம் எழுதிய ('இதோ ஒரு கொத்தடிமைக் காலனி — 20.4.86 கல்கி இதழ்)

கட்டுரை பல நல்ல விளைவுகளை ஏற்படுத்தி இருக்கிறது. அங்குள்ள ஹரிஜனங்களுக்கு இப்போது எண்பத்து மூன்று வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. ஒன்பது பேருக்கு ஆடுகள் வாங்கவும், ஒன்பது பேருக்கு எருமைகள் வாங்கவும், ஒன்பது பேருக்குக் கடைகள் வைத்துக்கொள்ளவும் அம்மாப்பேட்டை மற்றும் சித்தாரிலுள்ள வங்கிகள் கடன் கொடுத்திருக்கின்றன.

''நீங்கள் கொத்தடிமைகள் என்று யார் சொன்னது? பத்திரிகைகாரர்களிடம் பேசியது யார்?'' என்றெல்லாம் கல்கியில் கட்டுரை வந்தபிறகு, மாவட்ட அதிகாரிகளும், அ.தி.மு.க.வினரும் வந்து மிரட்டிவிட்டுப் போயிருக்கிறார்கள். இது பற்றிக் கேட்டால், ''அப்படியெல்லாம் இல்லீங்க!'' என்று மிரட்சியுடன் பதிலளிக்கிறார் வங்கியில் கடன் வாங்கி சவுண்ட் சர்வீஸ் வைத்துள்ள வீரன் என்னும் இளைஞர்.

''நாங்க அடிமையில்லீங்க.... பண்ணையத்தில முன்பணம் வாங்கிக் கொண்டுதானே வேலை செய்யறோம்!''. என்றார் வீரன் என்ற பெரியவர். (இந்தக் கிராமத்தில் 'வீரர்'கள் அதிகம்.)

''முன்னாலேயே வாங்கும் பணம் போதாவிட்டால், கடன்தானே வாங்கி வேலை செய்வீர்கள். அந்தக் கடனைக் கட்டாவிடில், அதுவே அடுத்த வருடத்திற்கான முன்பணம் போல மாறிவிடும். இப்படியே போனால் ஒரு கட்டத்தில் கட்டாயத்துக்காக உழைக்க வேண்டித்தானே இருக்கும். இது அடிமைத்தனம் இல்லையா?'' என்று கேட்ட போது, ''அது, ஆமாங்க.... ஆனா இதைச் சொன்னா கவுண்டருங்க கோவிச்சுக்குவாங்க... பண்ணையில வேலை கிடைக்காதுங்க....'' என்று தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டார் அவர்.

கடன் அடைக்க வேலை செய்யும் இந்தப் பழக்கம் ஒருபக்கமிருந்தாலும், மொத்தத்தில் ,வேறு பல நன்மைகள் ஏற்பட்டிருப்பதால் அந்த மக்களை இந்த ரீ—விசிட்டில் சந்தித்தபோது, ''கல்கிக்காரங்க வந்தாங்க, கவலையெல்லாம் தீர்த்தாங்க!'' என்று சொல்லி மகிழ்ந்தார்கள். அதைக் கண்டு நாமும் ஓரளவு ஆறுதலுடன் திரும்பினோம்.

சத்தியமங்கலம் தாலுகாவைச் சேர்ந்த பசுவபாளையம் பொது இட ஆக்ரமிப்பு பற்றி நாம் மாவட்டக் கலெக்டரிடம் எடுத்துச் சொல்லிவிட்டு வந்த பிறகு, கடந்த 17.10.86 அன்று, சத்தியமங்கலம் தாசில்தார் முன்னிலையில் அந்தப் பொது இட ஆக்ரமிப்புகளைக் கிராம நிர்வாக ஊழியர்கள் அகற்றிவிட்டார்கள் என்பதை அவ்வூர் மக்கள் நம்மிடம் தெரிவித்தபோது, நமக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

பெரியார் மாவட்டத்தில் நல்ல காரியங்களை நடத்திக் காட்டிய அத்தனை அதிகாரிகளுக்கும் நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

— ப்ரியன்

படங்கள்: மனோ, புஷ்பராஜ்

அடுத்த இதழ்

கலை விழாச் சிறப்பிதழ்:

* இந்த வருடம் என்ன ஸ்பெஷல்?

* லால்குடிக்கு ஐம்பது!
அகாடமிக்கு அறுபது!
எம். எஸ்.ஸுக்கு எழுபது!

* முன்னணி இளம் கலைஞர்களைப் பின்னுக்குத் தள்ள முடியுமா?



* கலாக்ஷேத்ராவில் என்ன தகராறு? நீதிமன்றம் போக நேர்ந்தது ஏன்?





கல்கி, டி.கே.சி., ராஜாஜி:

ஒரு மலரின் மூன்று இதழ்கள்!

ஒரு மலரின் மூன்று இதழ்கள் கல்கி, டி.கே.சி., ராஜாஜி என்று தமது சொற்பொழிவைத் தொடங்கினார் மீ.ப. சோமு. அப்புறம் மூன்று நாட்களுக்கு அந்த மலரின் அழகையும் மென்மையையும் வண்ணத்தையும் மணத்தையும் நாம் அநுபவிக்கச் செய்தார். இடம் சென்னை பல்கலைக் கழகம். நிகழ்ச்சி அமரர் கல்கி நினைவுச் சொற்பொழிவு. முதல் நாள் முதலிடத்தில் கல்கி; மையமாக டி.கே.சி., சிகரமாக நிறைவு நாளில் ராஜாஜி.

கல்கி என்ற வானவில்லின் வண்ண ஜாலங்களை முழுவதுமாகத் தீட்ட ஒரு மணி நேரம் போதாது என்ற காரணத்தினாலோ என்னவோ ஒரு பத்திரிகை ஆசிரியர் என்ற அளவிலே மட்டும் அவரைப் படம் பிடித்துக் காட்டினார் சோமு. அதற்கே நேரம் போதவில்லை! ஒரு பத்திரிகை ஆசிரியர் தொடர் கதையை வெற்றிகரமாக எழுதிவிட்டால் மட்டும் போதாது. தலையங்கம் முதல் துணுக்கு வரை பல அம்சங்களையும் எழுதுகிற ஆற்றல் படைத்தவராக இருக்க வேண்டும். தலைப்புத் தருவதிலும் ஒரு புகைப்பட விளக்கம் எழுதுவதிலும்கூட புதுமை காட்ட வேண்டும். கல்கியின் கதை, கட்டுரைகள் மட்டுமல்ல, கவிதைகளும் தலையங்கங்களும் மட்டுமல்ல, தலைப்புக்களும் புகைப்பட விளக்கங்களும்கூட காலத்தை வென்ற இலக்கியங்களாக இன்றும் நினைவில் நிலைத்திருப்பதை எடுத்துக்கூறினார் சோமு. இத்தனைக்கும் தமக்கு முன்னோடி என்று வைத்துக் கொள்ள யாருமில்லாத காலகட்டத்தில் பத்திரிகை ஆசிரியர் என்ற பொறுப்பை ஏற்றுப் பெருவெற்றி பெற்றவர் கல்கி. அந்த வெற்றி எத்தகையது என்றால் இன்று எந்தப் பத்திரிகையின் எந்த ஆசிரியர் எதைச் செய்ய முயன்றாலும் அதனை கல்கி ஏற்கெனவே செய்து காட்டிய முன்னோடியாக விளங்குகிறார்!

மறுநாள் டி.கே.சி. நம் எதிரே தோன்றி, கவிதைகளை ரசிக்கச் செய்தார்; விஞ்ஞான உண்மைகளைத் தமிழிலே விளக்கினார்; பல்கலைக் கழகங்களையும் பண்டிதர்களையும் சாடினார்; அதே சமயம் தமக்கு யார் மீதும் எதன் மீதும் விரோதமில்லை என்பதை உணர்த்தினார். நமது கவிதைகளையும் கலைகளையும் தாமும் ரசித்துப் பிறரையும் ரசிக்கச் செய்தார் ரசிகமணி என்றால் ரசிகமணியையே நாம் ரசிக்கும்படி செய்தார் சோமு.

கடைசி நாளன்று ராஜாஜி பற்றிப் பேசுகையில் சோமு சொல்லாற்றலின் சிகரத்துக்கே போய்விட்டார் எனலாம். அதற்கு ராஜாஜி என்ற கருப்பொருளும் காரணம் என்றாலும், 'கல்கி நினைவு அறக்கட்டளை நிறுவியதன் பயனை இன்று அடைந்துவிட்டோம்' என்றே தோன்றியது, அந்தப் பேச்சைக் கேட்டபோது. பார்க்கப் போனால் அமரர் கல்கி நினைவு நிதியைக் கொண்டு பல்கலைக் கழகத்தில் ஓர் அறக்கட்டளை நிறுவ வேண்டும் என்ற யோசனையைக் கூறியதே ராஜாஜி தானே!

சோமு மூன்று நாட்களிலும் சொன்ன நூற்றுக்கணக்கான சம்பவங்களை, அவற்றிலிருந்து வெளியாகி நமது மனத்தில் பதிந்த கருத்துக்களை இந்த ஒரு பக்கத்தில் எப்படித் தொகுத்துத் தர முடியும்? நல்ல வேளை, சொற்பொழிவுகளை முன்கூட்டியே எழுதி, பல்கலைக் கழகத்துக்குக் கொடுத்துவிட்டார் சோமு. அவை நூலாகவும் வடிவம் பெறலாம். ஆனால் எழுதியதைப் படிக்காமல் குறிப்புக்களை மட்டும் வைத்துக் கொண்டு நம்முடன் உரையாடுவதுபோல் பேசினார் சோமு. அதுவே நல்லதாயிற்று. ஏனென்றால் அந்தப் பேச்சிலே குதி போட்ட உணர்ச்சிகளை எழுத்திலே எப்படி வடிக்க முடியும்? யாராவது கேஸட்டில் ஒலிப் பதிவு செய்து வெளியிட்டால் புண்ணியமாய்ப் போகும்! அதைக் கேட்டால், மூன்று மகான்களையும் தரிசிக்கும் பாக்கியம் பெறாதவர்கள்கூடத் தரிசித்தே விடுவார்கள்!

— நமது நிருபர்



மேட்டூர் நல்லப்பன்

ஒரு நண்பனின் கதை

போட்டிக் கதை: 14



பஸ் பாதையிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தள்ளி இருந்தது அந்த இடம். நடைபாதை என்று சொல்லும்படி எதுவுமில்லை. காட்டிலும், மேட்டிலும், வயல் வரப்பிலும் நடந்த பிறகுதான், நாங்கள் அந்த இடத்தை அடைய முடிந்தது. பெட்டிஷன் கொடுத்தவர்கள் அந்த இடத்தைக் குறிப்பிட்டு விவரமாக எழுதியிருந்ததால், அதிகம் சிரமப்படாமல் அவ்விடத்தை அடைந்துவிட்டோம்.

பகலெல்லாம் உழைத்துக் களைத்துப் போன சூரியன், ஓய்வு கொள்ள இரவைத் தேடிச் செல்லும் நேரம். கோடை வெயில் அந்த அந்தி வேளையிலும் பூமியை வறுத்துக் கொண்டிருந்தது.

அது மேட்டுப்பாங்கான வறண்ட பகுதி என்றாலும், நிறையப் பனைமரங்களும், அங்கங்கே வேப்ப மரங்களும் பூமியைப் போர்த்திக் கொண்டிருந்தன.

எங்களுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டிருந்த யுத்த தந்திரப்படி, சுற்றி வளைத்து எதிரியை நெருங்கினோம்.

மிகவும் அருகில் சென்ற பிறகுதான் அவர்கள் எங்

களைக் கவனித்தார்கள். பத்துப் பதினைந்து பேர் இருக்கலாம். வயது வித்தியாசம் இல்லாமல் இளைஞர்களும் முதியோரும் இரண்டறக் கலந்திருந்தனர். எங்களின் வருகை அவர்களுக்குக் கொஞ்சம் அச்சத்தையும், கொஞ்சம் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியிருக்க வேண்டும். அவர்களின் மருண்ட விழிகள் அதை எனக்குத் தெரியப் படுத்தின. எனக்கு அவர்களைப் பற்றி அக்கறையில்லை. அதோ பனை மரத்திலிருந்து இறங்கிக் கொண்டிருக்கிறானே, அவன்தான் எனது இலக்கு.

''ஏய் ஒன் நாட் நைன், போர் நாட் த்ரீ, த்ரீ நட் ஒன், அவன் எறங்கற மரத்தை ரவுண்ட் அப் பண்ணுங்க. இல்லேன்னு எஸ்கேப் ஆயிடுவான்'' எனது சகாக்களுக்கு வேகமாக உத்திரவிட்டேன்.

தங்களது கனத்த காலணிகள் படபட வெனச் சப்திக்க, வேகமாக ஓடி அந்த மரத்தைச் சுற்றி நின்றார்கள், அந்த மூன்று கான்ஸ்டபிள்களும். நான் ஓர் எஸ். ஐக்கே உரிய மிடுக்கோடும் முறைப்போடும் முகத்தைக் கடுகடுவென்று வைத்துக் கொண்டு வரப்பில் நின்றிருந்தேன்.

எங்களைப் பார்த்தும் சிறிதும் பதற்றமோ பயமோ இன்றி, வெகு இயல்பாக அவன் அந்த உயரமான மரத்திலிருந்து இறங்கிக் கொண்டிருந்தான். அவனது இடுப்பில் தொங்கிய குடுவையிலிருந்து பனங்கள் தளும்பித் தளும்பித் தெறித்துக் கொண்டிருந்தது. மெல்ல வீசிய காற்றில் அந்தத் துளிகள் என் மீது பனியைப் போல் விழுவதை உணர்ந்தேன்.

மரத்தை விட்டுத் தரைக்கு வந்ததும், எனது சகாக்கள் மூவரும் மூன்று பக்கம் வர, ஏதோ விமானத்திலிருந்து பெட்டி படுக்கையுடன் இறங்கி நடந்து வரும் பயணியைப் போல, தனது கள் இறக்கும் சாதனங்கள் உடம்பில் நெளிய என்னை நோக்கிக் கம்பீரமாக நடந்து வந்தான் அவன்.

இடைக் கயிறு, பனம் பாளைகளைச் சீவும் கத்திகளுடன் கூடிய பெட்டி, இடுப்பு வார், கால் கயிறு, கள் இறக்கும் சுரைக் குடுவை, ஒரு சிலுவை சுமப்பது போல் தோளில் ஏணியைச் சுமந்தபடி என்னை நோக்கி வ்ந்தவன், என்னைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் நான் நின்ற இடத்துக்கும் சற்றுத் தள்ளி, வரப்பின் மீது எல்லா உபகரணங்களையும் வைத்துவிட்டு, ஏணியை மட்டும் அருகில் இருந்த வேப்ப மரத்தின் மீது சார்த்திவிட்டு என்னை நோக்கி வந்தான்.

அசாதாரணமான உயரம்; அதற்கேற்ற பருமன்; சிவப்பு நிறம்; ஸ்டெப் கட்டிங். இடுப்பில் லுங்கியை மடித்துக் கட்டியிருந்தான். மேலாடை எதுவுமில்லை. உழைப்பால் உடம்பு வேர்த்திருந்தது. முகத்தில் அறிவுக்களை. அவனைப் பார்க்க எனக்கே ஆச்சரியம். நான் அவனை உற்றுப் பார்த்தேன்! அவனும்தான்!

அவன், யாரென்று அரை நொடியில் எனக்குத் தெரிந்துவிட்டது. எனக்குள் அதிர்ச்சி! ஆச்சரியம்! இனம் புரியாத மன உணர்வினால் ஸ்தம்பித்து நின்றுவிட்டேன். அவனுக்கும் அதே நிலை. என்னைப் பார்த்ததால் ஏற்பட்டிருக்க வேண்டும். எனக்கு முன்பு சற்றுத் தள்ளி நின்றிருந்தவன், பசுவை நோக்கிச் செல்லும் கன்றைப் போல் ஆவலோடு என்னை அணைத்துக் கொள்ள வந்தவன், என்னை அணுகியதும், பிரேக் போட்டது போல் சட்டென்று நின்றுவிட்டான். எனது காக்கி உடைதான் அவனை என்னை நெருங்கவிடாமல் தெருடு

கிறது என்பதை அறிந்த நான், தன்னை மறந்து நின்றவனைத் தாவி அணைத்துக்கொண்டேன்.

''என்னடா ரவி, இந்தக் கோலம்? உன் எம். ஏ. பர்ஸ்ட் கிளாஸ் என்னடா ஆச்சு?'' நான்தான் முதலில் பேசினேன். எனது திடீர் சந்திப்பு அவனைப் பேச முடியாமல் சிறிது பொழுது திக்கு முக்காட வைத்து விட்டது.

''அதெல்லாம் ஏட்டுச் சுரைக்காய்டா. கறிக்கு உதவாது. பட்டத்தை வாங்கிக் கொண்டு வெளியில் வந்த போது, நானும் தரையில் கால் பாவாமல் ஆகாயத்தில்தான் பறந்து கொண்டிருந்தேன். இந்த மூன்று வருஷ வேலை தேடல், இந்த வறண்ட பூமியில் தான் என்னைத் தள்ளிவிட்டது. இந்த வானம் பார்த்த பூமியும், இந்தப் பனை மரங்களும் தான் எனக்கு சாஸ்வதம் என்று ஆகி விட்டது!'' அவன் விரக்தியோடு கூறிய வார்த்தைகள் என்னை வேதனைப்படுத்தின. சிறிது நேரத்துக்கு இறுக்கமான மௌனம். என்ன பேசுவது என்று இருவருக்குமே புரியாத நிலை. மீண்டும் அவனே தான் பேசினான்.

''ஐம்பதினாயிரம் ரூபாய் செலவழித்து நான் வாங்கிய பட்டம் என்னை வாழவைக்க வில்லை. இந்த வறண்ட காட்டில் இருக்கும் பனைமரங்கள் தான் எனக்கும், எனது வயதான தாய்,தந்தைக்கும் இப்ப கஞ்சி ஊத்துது. சரி அது கெடக்குது. நாட்டுல பாதிப் பேர் என்னை விட மோசமான நெலையில இருக்காங்க. நீ எப்படி இருக்கே. இந்த உத்தியோகத்துக்கு எப்ப வந்தே? கல்யாணம் செஞ்சுக்கிட்டியா?''

அவனின் வறுமை நிலைக்காக நான் வருந்திக் கொண்டிருக்கும் போது, அவன் எனது கல்யாணத்தைப் பற்றிப் பேசியது எனக்கு என்னவோ போலிருந்தது.

''எனக்கென்னடா, எங்கப்பா வசதியானவர். நீ பர்ஸ்ட் கிளாசில பாஸ் ஆயிட்ட. நான் ரெண்டு சப்ஜெக்ட் அரியர்ஸ். அடுத்த அக்டோபரில்எழுதிமுடித்தேன். அரைலகரம் கொடுத்து என் அப்பா இந்தக் காக்கி உடையை வாங்கிக் கொடுத்தார். எனக்கு வரப் போற மாமனார்கிட்ட் இந்தப் பணத்தை வட்டியும் முதலுமாய் வசூலித்து விடுவார். இப்பத்தான் பெண் பார்க்கும் படலம் நடந்து கொண்டிருக்கிறது'' என்று அவன் முதுகில் தட்டினேன்.

''உன்னைப் பார்த்ததும் எனக்கு எவ்வளவு சந்தோஷமாயிருக்கு தெரியுமா குமார்? நாம் இன்னும் கல்லூரியில் இருக்கிற மாதிரியே இருக்குடா. அந்த நாட்கள்தான் எவ்வளவு அற்புதமானவை'' என்றவனின் கண்களில் தெரிந்த ஏக்கம் என்னையும் அந்தக் கல்லூரிக் காலத்தை நோக்கி இட்டுச் சென்றது.

அந்தக் காலேஜின் கதாநாயகன் இந்த ரவி. எந்தக் கதைக்கும் கதாநாயகன்னு ஒருத்தன் இருந்தா, வில்லன்னு ஒருத்தன் கட்டாயம் இருந்தே ஆக வேண்டும். அந்தப் பெருமை அடியேனுக்குத்தான்.

கல்லூரியில் அழகாய் இருக்கும் பெண்

களாவும் பலாவும்

களாவை
பலாக்கனியைவிட
இன்றைய களா, சிறந்ததென்று
எவன் சொன்னான்?

அது
உனது பலாக்களைப் பறிப்பவன்
ஓதிய பாடம் அல்லவா?

இன்று
களா என்றால் — எழுதி வைத்துக் கொள்
களா தான் உனக்குக் கதி!

பலா!
கனாதான்!

பட்டினி கிட
பலாவையே உண்பதென்று
விரதம்கொள்!
சந்திப்பது சாவு எனில் அது
களாவைவிட இனிதானது!

முடங்கிய
முயற்சிகளுக்கா 'திருப்தி' என்று பெயர்?
வேட்கைகள்
வேட்டை நாய்களோ — அவற்றை
வீழ்த்துவதாய் எண்ணமோ!

இந்த
ஏமாளித் தனத்துள்ளே
கொட்டாவி விட்டால் உனது
பட்டப் பகல்களை மற்றவன்
பட்டாப் போட்டுக் கொள்வான்!

எது கிடைத்து — இன்று
நிம்மதி அடைந்தாயோ —
அதுவும் உனக்கு நாளை மறுக்கப்படலாம்!
அப்போதும் தப்பாது
உனக்குக் கொடுப்பார்கள்
கட்டெடுத்த — 'புத்தம் புதுப்'
பழமொழியென்று!

— தமிழன்பன்

களெல்லாம் அவனையே காதலித்தார்கள். ஏதோ ஒன்றிரண்டு பேராவது என் மீது கடைக்கண் காட்டியிருந்தால் நானும் வில்லனாக மாறியிருக்க மாட்டேன். எவளும் என்னைத் திரும்பிப் பார்க்கவில்லை. இந்த வகையில் எனக்கும் இந்த ரவிக்கும் எத்தனையோ மோதல்கள். இருந்தாலும் என்னை இவன் பகைத்துக் கொண்டதே இல்லை. ஒரு முறை இவனை எப்படியாவது வம்புக்கு இழுக்க வேண்டும் என்பதற்காக, இவனுடைய காதலி என்று கல்லூரி முழுவதும் பேசப்படும் சரண்யாவை (சிறந்த அழகி. அங்கு படித்த அத்தனை மாணவர்களும் அவளுடைய பார்வைக்காகத் தவம் கிடப்பார்கள்!) ஆராய்ச்சிக் கூடத்தில் இவன் எதிரிலேயே கட்டிப்பிடித்து விட்டேன். அதைப் பார்த்து ஆத்திரமோ, ஆவேசமோ படாமல் மெல்ல என்னை அவளிடமிருந்து விலக்கி விட்டான். நான் இதுதான் சான்ஸ் என்று ரவியை ஓங்கிக் கன்னத்தில் அறைந்து விட்டேன். இவன் என்னைத் திருப்பித் தாக்குவான் — எனது அடியாட்கள் இவனை நன்றாக உதைப்பார்கள் — என்று எதிர்பார்த்த நான், ஏமாந்தேன். இவனோ எனக்கு உபதேசம் செய்யத் துவங்கிவிட்டான்.

''இங்க பார் குமார்! நாமெல்லாம் இங்க படிக்க வந்திருக்கிறோம். நமக்காக நம்மைப் பெற்றவங்க எவ்வளவோ கஷ்டப்பட்டு, நம்ம பிள்ளை நல்லா படிச்சு முன்னுக்கு வரணுங்கிற எண்ணத்துடன்தான் நமக்கு மாதா மாதம் பணம் அனுப்பிக்கிட்டிருக்காங்க. நாம்ப அதை மறந்துட்டு, இந்த மாதிரிக் காரியங்களில் ஈடுபடலாமா? நம்ம கூடப் படிக்கிற பெண்ணைச் சகோதரியா நினைக்கணும்'' ரவியின் உபதேசம் எனக்கு மேலும் ஆத்திரத்தைக் கொடுத்தது.

''டேய், உனக்கு மட்டும் காதலி, எனக்கு மட்டும் சகோதரியா? ஊருக்குத்தான் உபதேசம். உனக்கும் எனக்கும் இல்லையடிங்கிறியா?'' என, அதற்குள் சரண்யா பிரின்ஸிபாலிடம் போய் ரிப்போர்ட் செய்ய, அவரே நேரில் வந்து என்னைப் பிடித்துக் கொண்டார். விசாரணை நடந்தது. எல்லோரும் எனக்கு எதிராகச் சாட்சி சொன்னார்கள். என்னைக் கல்லூரியை விட்டு வெளியேறச் சொல்லி விட்டார்கள். எனக்கு ஏகப்பட்ட அவமானம். தற்கொலை செய்து கொள்ளலாமா என்று கூட யோசித்தேன்.

சாட்சிக்காரன் காலில் விழுவதை விட சண்டைக்காரன் காலில் விழுவது மேல் என்று இந்த ரவியின் காலில் விழுந்தேன். இவன் அந்தச் சரண்யாவிடம் காலில் விழாத குறையாகக் கெஞ்சி மீண்டும் கல்லூரியில் நான் படிப்பைத் தொடர உதவி புரிந்தான்.

''என்னடா முழிச்சுக்கிட்டே கனவு காண்றியா?'' என்று ரவி என் முதுகில் தட்டிய பிறகுதான் எனது மனப்பறவை அந்தக் கல்லூரியிலிருந்து இந்தக் காட்டுப் பகுதிக்குப் பறந்து வந்தது.

''நமது கல்லூரி நாட்களை ஃபிளாஷ்பேக்கில் பார்த்துக் கொண்டிருந்தேண்டா.''

''அதெல்லாம் பழங்கதைடா. இப்ப என்னைக் கைது செய்யத்தானே வந்திருக்கே?'' அவனது கேள்வி என்னைச் சங்கடப்படுத்தியது.

''நீ கள்ளத்தனமாக் கள் இறக்கி விற்பதாகவும், அதனால் தங்கள் கள் சாராயக் கடைகளில் விற்பனை பெரிதும் பாதிக்கப்படுவதாகவும், இந்தத் தொகுதி எம். எல். ஏ. ரிப்போர்ட் செய்திருக்கிறார். மேலும், உடனே நடவடிக்கை எடுக்கும்படி என்னிடமும், சர்க்கிள் இன்ஸ்பெக்டரிடமும் போன் மூலம் சொல்லியிருக்கிறார். வேறு ஆளாக இருந்திருந்தால் கைது பண்ணி மாமியார் வீட்டுக்கு அனுப்பியிருப்பேன். ஆனால், நீ எனது நண்பன். கல்லூரி நாட்களில் எனக்கு நிறைய நல்லது செஞ்சிருக்கிறே. அதனால் உன்னை நான் கைது செய்யப் போவதில்லை. மாறாக நீ இதே தொழிலைச் செய்ய, நான் இந்த ஸ்டேஷனில் இருக்கும் வரை உனக்குப் பாதுகாப்புக் கொடுக்கிறேன்.''

''டேய் குமார், இந்தத் தொகுதி எம்.எல்.ஏ. ஒரு மோசமான பேர்வழி. ஒரு காலத்தில் விறகு வெட்டிப் பிழைத்துக் கொண்டிருந்தவன். எப்படியோ எம். எல். ஏ. ஆகிவிட்டான்! ஆளும் கட்சி எம். எல். ஏ. என்ற தைரியத்தில், மேற்குத் தொடர்ச்சி மலை ஃபாரஸ்டில் இருந்த சந்தன மரங்களையெல்லாம் வெட்டி விற்றுக் கோடீஸ்வரன் ஆகிவிட்டான். இவன் மீது நடவடிக்கை எடுக்க முயன்ற எத்தனையோ போலீஸ் அதிகாரிகளுக்கு வேலை பறிபோயிருக்கிறது. பலர் தண்ணியில்லாத காட்டுக்கு 'நாடு கடத்தப்'பட்டிருக்கிறார்கள். இவனைப் பகைச்சுக்கிட்டு உன் உத்தியோகத்துக்கு ஊறு தேடிக்காதே'' என்று எனக்காக அவன் கவலைப்பட்டான்.

''ரவி! இந்த எம். எல். ஏ. யைப் பத்தி உனக்கு இவ்வளவுதான் தெரியும். எனக்கு இன்னும் தெரியும்! இவன் நடத்துற சாராயக் கடைகளிலெல்லாம் முக்கால்வாசி கள்ளச் சாராயம்; சமீபத்தில் சந்தனக் கட்டைகளை வெளிநாடுகளுக்குக் கடத்துவதாகவும் போலீஸ் இலாக்காவுக்குத் தகவல் கிடைச்சிருக்கு. இதையெல்லாம் கண்டுக்கக் கூடாதுன்னு மேல் இடத்து உத்திரவு. ஆனால் மத்திய சி. பி. ஐ. க்குத் தகவல் போயிருக்கு. சீக்கிரம் உங்க தொகுதி எம். எல். ஏ. கம்பி எண்ணப் போறான். நீ தைரியமா கள் இறக்கு ராஜா!' பாதி சீரியஸாவும் பாதிச் சிரிப்புமாக நான் கூறியதைக் கேட்டு, போலீஸில் இப்படியும் ஒருத்தனா! என்பதைப் போல் என்னைப் பார்த்தான். என்னை அன்போடு வழியனுப்பி வைத்தான் ரவி.

நான் இப்போது தண்ணியில்லாத காட்டில் இருக்கிறேன். பாவம் அந்த ரவி! மூன்று மாதக் கடுங்காவல். சேலம் சிறையில் கம்பி எண்ணிக் கொண்டிருக்கிறான். அந்த எம். எல். ஏ. இப்போது வனத்துறை மந்திரியாகிவிட்டார்!

சின்னச் சின்ன கனவுகள்

7

"என்ன? என்ன இது?'' யாரிடம் கேட்பது என்று தெரியாமல் வார்த்தைகளை உதிர்த்துக் கொண்டே எழுந்தாள் இந்திரா.

பரிமளா அவள் கையைப் பிடித்து அழுத்தி உட்கார வைத்தாள்.

''ஒண்ணுமில்லே. உக்காருக்கா. ஓடறவங்க எல்லாம் சின்னப் புள்ளைங்க.''

இந்திரா சுற்றிலும் பார்க்க, பரிமளா சொன்னது சரிதான். அந்த முற்றத்தில் இருந்த சிறுவர், சிறுமியர் அனைவரும் மாயமாகி இருந்தார்கள். ஒரே ஒரு சிறுமி மட்டும், ஊனக்காலுடன் இருந்ததால் ஓட முடியாமல் இழுத்துக் கொண்டு, இழுத்துக் கொண்டு விரைவாகச் செல்ல, ''சீக்கிரமாப் போ, செல்லம்'' என்று யாரோ அதட்டினார்கள்.

சில விநாடிகளில் அந்த இடம் சகஜ நிலைக்குத் திரும்பி, பெரியவர்கள் அனைவரும் எதுவுமே நடக்கவில்லைபோல் வேலையில் ஈடுபட, இந்திரா பரிமளாவைப் பயக் கண்களால் பார்த்தாள்.

''ஏன் ஓடறாங்க?'' என்று கேட்டாள்.

''நீ வேலையை நிறுத்திட்டியே அக்கா. அது இப்படித்தான் மாசத்துக்கு ஒருக்கா ஓடுவாங்க. பெரிய ஆபீசருங்க யாராவது இன்ஸ்பெக்ஷனுக்கு வந்திருப்பாங்க. அதனால் ஓடறாங்க.''

''எங்கே போவாங்க?'' என்று தொடங்கியவள் வாயை மூடிக் கொண்டாள்.

சிறிது தூரத்தில் நான்கைந்து பாண்ட், ஷர்ட் அணிந்த ஆசாமிகளுடன் மாயகிருஷ்ணன் வந்து கொண்டிருந்ததைப் பார்த்தாள். முதலாளியை அவருடைய அறையில் பார்த்தபோது இருந்த கம்பீரம் இப்போது இல்லை. ஏறக்குறைய தரையைத் தொடுபவர்போல் குனிந்திருக்க, அதிகாரிகள் அவர் இருப்பதையே அறியாதவர்கள்போல் கையை ஆட்டி ஆட்டிப் பேசினார்கள். இங்கிலீஷில் சிரித்தார்கள்.

இந்திராவின் அருகில் நின்று அவள் வேலையைப் பார்த்தார்கள். இந்திரா வேலையை நிறுத்திவிட்டு, கூட்டத்திலிருந்து விலகிய மானைப் போல் பார்க்க, ''உனக்கு எவ்வளவும்மா கூலி இங்கே?'' என்று பாண்ட் அணிந்த, கோடு போட்ட சட்டை அணிந்த, கண்ணாடி அணிந்த சிவந்த பையன் கேட்டான்.

பதிலைப் பெறுவதற்காகக் கேள்வி கேட்டாற்போல் தெரியவில்லை. கண்ணாடியை மீறிய அவனது விழிகள் தப்பான இடங்களை ஒற்றி ஒற்றி எடுக்க, இந்திரா, ''எவ்வளவு வேலை செய்யறேனோ, அந்த அளவுக்குக் கூலி'' என்றாள்.

''ஒரு நாளைக்கு எவ்வளவு சம்பாதிப்பே?''

இந்திராவிற்கு நீரில் மூழ்கிப் போன மாதிரி இருந்தது. பரிமளா அவர்கள் இருப்பதே தெரியாததுபோல் தலைகுனிந்து வேலையில் ஈடுபட்டிருக்க, ''ஆறு ரூபாய்'' என்றாள் சன்னமாக.

''ஐஸீ.... '' என்றான். பக்கத்தில் திரும்பி, ''ஷீ ஈஸ் யங்'' என்றான்.

''ஷீ ஈஸ் ப்யூட்டிஃபுல். ஐ வில் ஒன் ஹர் ஆஸ் மை செக்ரட்டரி, டபுள் பர்ப்பஸ் யூஸ்...'' என்றான் இன்னொருவன்.

என்ன பேசிக் கொள்கிறார்கள்? பாண்டியன் அவர்களுடன் இருந்திருந்தால் பிற்பாடு விசாரித்துத் தெரிந்து கொள்ளலாம். 'பட்டாசுக் கம்பெனியில் எனக்கு டூட்டி' என்று போய்விட்டிருந்தான். அவர்கள் மறுபடி ஆங்கார உதைப்புகளுடன் சிரிக்க, 'என்னவோ தப்பாகப் பேசிக் கொள்

அபா

கிறார்கள்' என்று உணர்ந்து இந்திரா தலையைக் குனிந்து கொண்டாள்.

''அந்த அம்மா புதுசா வேலைக்குச் சேர்ந்திருக்கு'' என்றார் மாயகிருஷ்ணன்.

''வேலைக்குப் புதுசா?'' என்று கேட்டுவிட்டு ஆர்ப்பாட்டமாகச் சிரித்து அவர்கள் நடக்க, மாயகிருஷ்ணன் அவர்கள் பின்னால் விரிந்த உதடுகளுடன் சென்றார்.

இந்திராவால் நிம்மதியாக மூச்சுவிட முடிந்தது.

''அவங்க கண்ல கொள்ளிக்கட்டையைச் சொருக. என்ன சொல்லிட்டுப் போறாங்க்கா!''

''எனக்குத் தெரியலையே. கெடக்கு விடு. இந்தச் சின்னப் புள்ளைங்க எல்லாம் எங்கே ஓடுவாங்க?''

''பின்னால். அங்கேதான் ஏகப்பட்ட மரம் செடின்னு இருக்குதே.''

''சின்னப் புள்ளைங்க. வேலை செய்யக் கூடாதா?''

''கவுருமெண்ட்டு வேணாம்னு சொல்லுது. இதெல்லாம் கண் தொடைப்பு அக்கா. ஆபீஸருங்களுக்கெல்லாம் இங்கே புள்ளைங்க வேலை செய்யறது தெரியும். சும்மா பாக்கறுப்பல வருவோம். நீ மறைக்கிறுப்பல மறைச்சிடுன்னு முன்கூட்டியே சொல்லிடுவாங்க. அட, சின்னப் புள்ளைங்க வேலை செய்ஞ்சா என்னக்கா? சோத்துக்கில்லேன்னுதானே வேலைக்கு வருதுங்க. சின்னப் புள்ளங்களே வேலைக்கு வெச்சி சம்பளம் குடுக்கறதே





அவன்: ''குடிநீர் வசதி வேணும்னு அந்த அமைச்சரிடம் மனுக் கொடுத்தியே... என்ன ஆச்சு?

இவன்: ''பி.ஏ.வைக் கூப்பிட்டு உடனே எனக்கு ஒரு தம்ளர் தண்ணீர் கொண்டாந்து கொடுக்கச் சொல்லிட்டுப் போயிட்டார்!''

— உ.ராஜாஜி.

பெரிய விஷயமில்ல? ஒன் பையன் இப்ப என்ன செய்யறுங்கா? அவனைப் பத்தி நீ அடிக்கடி சொல்லிச் சொல்லி அவனை எனக்குப் பார்க்கணும் போல இருக்குது.''

''ஏன் கட்டிக்கப் போறியா அவனை?''

''இதானே வேணுங்கறது?''

''ராஜா மாதிரி இருப்பான் பரிமளா. இந்த நேரம் ஸ்கூல்ல இருப்பான் எம் பையன்'' என்ருள்.

நந்தகுமார் ஸ்கூல் வாசலில் நின்ருன். கையில் இரண்டு புத்தகங்கள். நேரே தெரிந்த சின்ன மைதானத்தில் வந்திருந்த பிள்ளைகள் எல்லாம் குழுமித் தமிழ்த் தாயை வாழ்த்திக் கொண்டிருந்தார்கள். பள்ளியில் சேர்ந்த நான்காவது நாளே லேட்டாக வந்தால் எச்.எம். என்ன சொல்லுவாரோ என்று பயமாக இருந்தது.

புற்றில் நுழையும் பாம்பு போல் உள்ளே நுழைந்தான். தமிழ்த் தாய் வாழ்த்து கண்கள் மூடின நிலையில் நடந்து கொண்டிருக்க, அந்தக் கடைசி வரிசையில் ஒரு காலியான இடம் என்று தேடிப் பிடித்து ஓடி நின்று கொண்டான். ஓடி வந்ததால் மூச்சிரைக்கக் கண்களை மூடி, குரலை எழுப்பாமல் உதடுகளை மட்டும் அசைத்து வாழ்த்துடன் சேர்ந்து கொண்டான்.

''டேய் நந்து, சசியோட ஷூவுக்குப் பாலிஷ் போட்டுடேன். அந்தக் குரங்கு சேத்தில மண்ணில புரட்டி எப்படியெல்லாம் ஷூவை அழுக்காக்கிட்டு வந்திருக்கு பாரு.''

நாளையிலிருந்து ஸ்கூலுக்குப் புறப்படும் நேரத்தில் அத்தை சொல்லும் வேலைகளைச் செய்வதில்லை என்று தீர்மானித்தான்.

வாழ்த்து முடிந்து பையன்களின் கசமுச தொடங்கியவுடன் கண்களைத் திறந்தான். எச்.எம். இன்னும் கொடி மேடையை விட்டு இறங்கவில்லை. அங்கிருந்தே பார்வையை அலையவிட்டார். பையிலிருந்து மூக்குப் பொடி டப்பியைத் திறந்து ஒரு சிட்டிகை எடுத்து, விரல்களை உதறி, சர்ரென்று இழுக்க, பக்கத்திலிருந்த மாணவன், ஏ,பி, என்று ஜெட் வரை சொல்லத் தொடங்கினன்.

எச்.எம். தும்மல் வரை போகாமல், ''அன்புள்ள மாணவர்களே....'' என்று சொல்லிக் கர்ச்சீஃபால் மூக்கைத் தீட்டிக் கொண்டார்.

''நம் பள்ளியின் ஆண்டு விழாவிற்கு இம் மாவட்டக் கலெக்டர் வந்து நம்மைக் கௌரவிக்கப் போகிருர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் பாட்டுப் போட்டி, பேச்சுப் போட்டி, விளையாட்டுப் போட்டி ஆகிய எல்லாப் போட்டிகளிலும் நீங்கள் எல்லோரும் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒவ்வொருவரும் பரிசு பெற முயல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்'' சொல்லிவிட்டு எச்.எம். இன்னொரு சிட்டிகைக்காகப் பையில் கைவிட, மாணவர்கள் படபடவென்று கைதட்டினர்கள். எச்.எம். கொடி மேடையை விட்டு இறங்கினர். மாணவர்கள் கலைந்து வகுப்புகளுக்குச் செல்லத் தொடங்க, சத்துணவு ஆயா மைதானத்தின் ஓர் ஓரத்தில் செங்கல் அடுப்புகளை உருவாக்கத் தொடங்கினள். நந்தகுமார் டிராயரை ஒருமுறை மேலேற்றிக் கொண்டு அவளைக் கடக்கும்போது, ''தம்பி, இங்கே வா'' என்ருள் ஆயா.

''என்ன ஆயா?''

''உன் பேரென்ன?''

''B. நந்தகுமார்.''

''பின்னல் டிராயர்ல தபால் பெட்டி வெச்சிருக்கே?''

நந்தகுமார் புரியாமல் ஒருமுறை பின்னல் திரும்பிப் பார்த்து, டிராயரின் கிழிசலைக் கவனித்து வெட்கத்துடன் சட்டையை இழுத்துவிட்டுக் கொண்டான்.

''புது டிராயர் தச்சிப் போட்டுக்கக் கூடாது?''

''பொங்கலுக்கு எங்கம்மா புதுத் துணி எடுப்பாங்க. அப்பப் போட்டுக்கறேன்.''

''இப்ப புதுத் துணி எடுக்கக் காசில்லையா?''

''ஆமா, ஆயா, நான் ஏழை. அப்பா வேறே இல்லே எனக்கு.''

''அப்பா இல்லேங்கறே. அம்மாவை உக்கார வச்சி, சோறு போடாமல் இப்படி பள்ளிக்கூடத்துக்கு வந்திருக்கியே. எங்கூட வரியா, உன்னை வேலையில சேர்த்துவுடறேன். இப்பவே புடிச்சி சம்பாதிக்கலாம். உனக்கு டவுசரு,சட்டை,உங்கம்மாவுக்குப்பொடவை அப்புறம் திங்கச் சோறு எல்லாம் கெடைக்கும்.''

வேலையா? அம்மா, நான் பெரிய ஆபீஸர் ஆக வேண்டும் என்ருளே?

''எனக்கு வேலெல்லாம் வேணும் ஆயா, நான் படிக்கப் போறேன்.''

''பெரியவங்க சொன்னு கேப்பியா, அதை வுட்டுடு. டேய்.... தம்பி.... நந்தகுமாரு....''

அவன் குரல் காதில் தேய நந்தகுமார் வகுப்பிற்கு ஓடினன்.

ஜெயகிருஷ்ணன் அவருடைய அறைச் சுவரில் பதிக்கப்பட்டிருந்த அலமாரியைத் திறந்தார். நீள் செவ்வகத்தில் காத்திருந்த வெள்ளி டப்பியிலிருந்து கட்டை விரல் பருமன், பதினைந்து செண்டி மீட்டர் நீளம் இருந்த சுருட்டை எடுத்து வாயில் பொருத்



"தூக்கத்துல முதல் ராத்திரிக் கனவு எங்கே முடியுதோ, அதே கனவோட தொடர்ச்சி அடுத்த நாள் ராத்திரித் தூக்கத்துல வருது டாக்டர்..."

"ஆச்சரியமா இருக்கே... என்ன தொழில் உங்களுக்கு?"

"பத்திரிகைல தொடர்கதை எழுதறேன்!"

— நடேஷ் ஷா.

திக் கொண்டார்.

ரத்தினம் உள்ளே நுழைந்தான். மந்திரியின் முன், கட்சித் தொண்டன் போல் நின்றான்.

"விசாரிச்சியாடா?" என்றார். காலையில் ஃபாக்டரியில் அவளைப் பார்த்தபோது பற்றிக் கொண்ட நெருப்பு கொழுந்துவிட்டுக் கொண்டிருக்க, பெருமூச்சுடன் கலந்த, 'விசாரிச்சியாடா?' கேள்வி!

"அந்தப் பொண்ணு பேரு இந்திராங்க."

"பேரு யாருக்குடா வேணும் மூதேவி?"

"அவங்க அண்ணன் வீட்ல வந்து தங்கியிருக்குதுங்க. வீட்ல அதும்போல ஒண்ணும் பிரியம் இருக்கறாப்பல தெரியலே. அண்ணங்காரன் ரொட்டிக்காரர் தெருவிலே ஸ்பேர் பார்ட்ஸ் கடை வெச்சிருக்கான். வீட்ல முரடன். வெளியில் பெட்டிப் பாம்பு. இந்தப் பொண்ணுக்கு ஒரே ஒரு மகன் மாத்திரம் இருக்கான். மானேஜ்மெண்ட் பள்ளிக்கூடத்தில சேர்த்திருக்காப்பல."

"கன்னுக்குட்டியை வுடுரா. பசுவைப் பத்திப் பேசு. படியுமா?"

"படியும் போலத்தான் தெரியுதுங்க. இன்னிக்குக் கூலியை இங்கே வந்து வாங்கிட்டுப் போகச் சொல்லியிருக்கேங்க."

"எப்படா.... எப்ப சொன்னே?"

"மத்தியானம் சாப்பாட்டு நேரத்தில் சொல்லிட்டேங்க. இப்ப வந்துகிட்டேயிருக்குங்க" என்றான்.

இந்திரா சாலையைக் கடந்து எதிரில் இருந்த முதலாளி காம்பவுண்டை நெருங்கினாள். பட்டாசு ஃபாக்டரிக்குப் போய்விட்டதாலோ என்னவோ, தினம் அழைத்துப் போக வரும் பாண்டியனைக் காணவில்லை. கூலியை முதலாளியிடம் வந்து வாங்கிக் கொண்டு போகுமாறு ஆள் வந்து சொல்லியிருக்க, உள்ளுக்குள் அவளுக்குப் பெருமிதமாய் இருந்தது.

கேட்டின் காக்கிச் சட்டை, கேள்வி இல்லாமல் கதவைத் திறந்துவிட்டான். கேட்டிலிருந்து முதலாளியின் அறை தெரிந்தது. கண்ணாடிச் சதுரத்திற்கு அப்பால் வெளிச்சத் தீவு. மாயகிருஷ்ணன் கையில் ஏதோ புத்தகம் தாங்கி உலாத்திக் கொண்டிருந்தார்.

அவள் கறுப்புப் பளிங்கில் தெரிந்த தனது உருவத்தைப் பார்த்துக் கொண்டு, நெற்றியில் வந்து புரண்ட ஒரு முடிக் கொத்தைப் பின்னால் தள்ளிவிட்டு, படியேறி முதலாளியின் அறை வாசலில் நிற்க, "வாம்மா" என்று குரல் அன்பு முலாமுடன் அவளை வரவேற்றது.

உள்ளே நுழைந்தாள்.

மாயகிருஷ்ணன் புத்தகத்தைப் படிப்பதை விட்டுவிட்டு மெத்தையில் போய் அமர்ந்தார்.

"உக்காரும்மா" என்று எதிர் மெத்தையைக் காண்பித்தார்.

"பரவாயில்லே முதலாளி" என்று சுவரோரமாக ஒண்டிக் கொண்டாள் இந்திரா.

"வாரக்கூலியா வாங்கிக்கறேன்னு சொல்லிட்டியாமே?"

"ஆமாங்க."

மாயகிருஷ்ணன் ஒரு நோட்டைப் பிரித்துப் பார்த்து, மனத்திற்குள் கணக்கைப் போட்டுப் பையிலிருந்து பணக் கற்றையை அள்ளி எடுத்து, இரண்டு நூறு ரூபாய்களை நீட்டினார்.

"இந்தா."

"இந்த வாரம் என் கணக்குல நாப்பது ரூவா ஆகியிருக்கிறதா சொன்னாங்க. நீங்க ஏதோ நிறையத் தரீங்களே...." என்றாள் இந்திரா.

சூழ்நிலையில் ஒவ்வாத விஷயங்கள் சில இருந்தாற்போல் பட்டது. அந்த மீசைக்காரன் இல்லை. அறையில் சுருட்டு நாற்றத்துடன் வேறு ஏதோ வாசனை. வெளியில் இருட்டு.

"எனக்கு சந்தோஷமாயிருந்ததுன்னு இப்படித்தான் கொடுப்பேன். வாங்கிக்க இந்திரா" என்று எழுந்து அவள் அருகில் வந்தார்.

"என் கூலி எனக்குப் போதுமுங்க...."

அந்த 'வாங்கிக்க இந்திரா'வில் அன்பு இல்லை. வேறு ஏதோ நிச்சயம் இருந்தது.

"கஷ்டப்படறவதானே நீ. காசு வந்து காலடியில் விழுது. வேணாங்கறியே. இன்னும் நெறைய தரேன். ஏழைங்க கஷ்டப்பட்டா எனக்கு ஆகாதும்மா. கொஞ்ச நேரம் உனக்கும் திருப்தி. எனக்கும் சந்தோஷம்."

மாயகிருஷ்ணன் மிக நெருக்கத்தில் வந்து நிற்க, அந்த விநோதமான பழ வாசனை அவரிடமிருந்துதான் வீசியது.

இந்த நேரத்தில் தனியாக வந்தது தப்பு என்று அப்போதுதான் இந்திராவிற்கு உறைத்தது.

சுவரோடு சுவராக ஒட்டி மெல்ல விலகினாள்.

"வேணாம் முதலாளி, நான் கூலியை அப்புறம் வாங்கிக்கறேன் முதலாளி."

"மயிலு, மயிலுன்னு சொல்றேன். கேக்க மாட்டேங்கறியே பாத்தியா...." நின்று கொண்டிருந்தவர் எப்போது பாய்ந்தார் என்று தெரியவில்லை. இந்திராவை அள்ளிக் கொண்டிருந்தார்.

"எத்தனை கோழிங்களைப் பார்த்திருக்கேன்.... ம்...." என்று லேசாகத் தள்ளாடிக் கொண்டே பிடியை இறுக்கி மெத்தையை நோக்கி நடந்தார்.

(தொடரும்)



இந்தியாவுக்கு கிரிக்கெட் தேவையா???

இந்தியாவில் கிரிக்கெட்டுக்குத் தரப்படும் முக்கியத்துவம் அநியாயம், அக்கிரமம்! முதல் பரிசு வாதம்!

'மாலை முழுவதும் விளையாட்டு' என்றுதான் பாரதியார் பாடினார். 'நாள் முழுவதும் விளையாட்டு' என்றல்ல. அப்படி நாள் முழுவதும் விளையாடப்படும் ஆட்டம் கிரிக்கெட் என்பதால்தான் அறிஞர் ஜார்ஜ்பெர்னாட்ஷா அவர்கள் 'பதினொரு முட்டாள்கள் ஆட, பதினோராயிரம் முட்டாள்கள் பார்க்கும் விளையாட்டு' என கேலியாகக் கிரிக்கெட்டைப் பற்றிக் குறிப்பிட்டார்.

கிரிக்கெட்டுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தைப் பார்த்தால் எரிச்சல்தான் ஏற்படுகிறது. மேட்ச் நடக்கும் நாட்களில் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் அலுவலகங்களுக்கு விடுமுறை அளித்தல்; மக்கள் தம்முடைய பணிகளையெல்லாம் தூர எறிந்துவிட்டு, மைதானத்திலும் தொலைக்காட்சிப் பெட்டி முன்னும் பழியாகக் கிடப்பது; எல்லாமே வருத்தத்தையளிக்கின்றன. கிரிக்கெட் வீரர்களுக்கு அளிக்கப்படும் ஊதியம், அபரிமிதமான பரிசுகள், மற்றும் பிரதமர், ஜனாதிபதி இவர்களால் அளிக்கப்படும் விருதுகள், இவையாவும் மற்ற எந்த விளையாட்டுப் பிரிவினருக்கும் கிடைப்பதில்லை.

ஒலிம்பிக், ஏஷியாட் போன்ற சர்வதேச விளையாட்டுகளில் தங்கப் பதக்கங்களை அள்ளிக் குவிக்கும் ரஷ்யா, அமெரிக்கா, சீனா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளில் கிரிக்கெட் என்ற சோம்பேறித்தனமான விளையாட்டு ஊக்குவிக்கப் படுவதில்லை. நாம்தான் கிரிக்கெட்டைக் கட்டிக் கொண்டு அழுகிறோம்.

வாசகர் தீர்ப்பு:

இந்தியாவில் கிரிக்கெட்டுக்குத் தரப்படும் முக்கியத்துவம்:

அநியாயம், அக்கிரமம்!	55%
நல்லதே, நியாயமே!	45%

முக்கியமாகக் கிரிக்கெட், நம் போன்ற சீதோஷ்ண நிலையுள்ள நாடுகளுக்கு ஏற்ற விளையாட்டே அல்ல. ஆங்கிலேயர்கள் வருடம் முழுவதும் குளிர் பிரதேசங்களில் வாழ்பவர்கள். சில நாட்களாவது வெயிலில் காயலாமே என்று ஆரம்பிக்கப்பட்ட ஆட்டம். அவர்கள் ஆட்சி செய்தபோது இந்தியாவுக்கும் வந்தது. இன்று அவர்கள் ஆட்சி போன பின்பும், நம்முடைய விளையாட்டுத் துறையை கிரிக்கெட் ஆட்சி செய்து வருகிறது.

நேர்முக வர்ணனையாளர்கள் மற்றும் செய்தித் தாள்களில் அளிக்கப்படும் புள்ளி விவரங்கள் தமாஷானவை. 'இன்னார் 335.5

ஓவர்கள் வீசி, 1272 ரன்கள் கொடுத்து 63 விக்கெட்களை வீழ்த்தி இதற்கு முன்பு 1928ல் அவர் செய்த சாதனையை முறியடித்தார்' என்றெல்லாம் பைசாவுக்கு உபயோகமில்லாத புள்ளி விவரங்களை வர்ணனையாளர்களும் பத்திரிகைகளும் சீரியஸாகச் சொல்லும்போது சிரிப்புத்தான் வருகிறது.

'பிலியர்ட்ஸ்'ல் இரண்டு முறை உலக சாம்பியன் பட்டம் பெற்றவரை கண்டு கொள்ளாத நம் பத்திரிகைகள் 'ரஞ்சி' மேட்சில் யாரோ ஒரு புதுமுகம் ஐம்பது ரன்கள் எடுத்துவிட்டாலே முழு அளவு போட்டோவைப் போட்டு அமர்க்களப்படுத்தி வருகின்றன.

கிரிக்கெட் மிகவும் காஸ்ட்லியான விளையாட்டு. அதை எல்லாப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் விளையாடச் செய்வது என்பது தேவையற்றது.

ஹாக்கி, கால்பந்து, கூடைப் பந்து போன்ற உடல் வியர்வை சிந்த ஆடப்படும் விளையாட்டுகளுக்குக் கிரிக்கெட்டுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தால், கிரிக்கெட்டில் கொட்டும் பணத்தில் கால் பகுதியை இவை பக்கம் திருப்பிவிட்டிருந்தால் நூற்றுக்கணக்கான பி.டி. உஷாக்கள் இந்தியாவில் தோன்றியிருப்பர்.

— பி. ஆர். ஸ்ரீநிவாஸன், வேலூர் (சேலம்)

இந்நாட்டில் அரசியலில் நிலவும் 'உலக மகா வெறித்தனங்கள்' போதாதென்று 'கிரிக்கெட் பக்தி'யும் சேர்ந்து கொண்டிருக்கிறது. நாளைக்குக் காவஸ்கர், கபில்தேவுக்குக் கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் கூட நடத்துவார்கள். இந்தப் பைத்தியங்களுக்கு வேப்பிலை அடிக்க, எந்த அரசாங்க முயற்சியும் பலிக்காது. 'கிரிக்கெட் கூடாது' என்று சொன்னால் நகர்ப்புறத்தில் அடுத்த தேர்தலில் செல்லாத ஓட்டுக் கூட விழாது! ஒரு ரூபாய்க்கு மூன்று படி அரிசி என்ற கோஷம் சற்று மாறி 'வருடத்திற்குக் குறைந்தது பத்து டெஸ்ட் மேட்சுகள்' வாக்குறுதிகூடப் பிறக்கலாம்; யார் கண்டது?

— ஸ்ரீதர் சாமா, சென்னை — 49.

இந்தியாவில் கிரிக்கெட்டுக்குத் தரப்படும் முக்கியத்துவம் சிறிதும் நியாயமற்றது. கிரிக்கெட் ஒரு வீர விளையாட்டல்ல. இதனால் மூளைக்கோ, உடல் வளர்ச்சிக்கோ சிறிதும் நன்மை இல்லை. ராணுவத்திற்கோ, போலீக்கோ இதிலிருந்து ஆட்களைத் தயார் செய்து சேர்க்க முடியாது. உலகெங்கும் பரவிய விளையாட்டாகவும் ஏற்க முடியாது. அதனால் தான், ஒலிம்பிக்ஸ், ஏஷியாட் போன்றவற்றில் இடம்பெறுவதில்லை.

— எஸ்.கே. பாலசுப்ரமணியன், முசிறி

'என்ன உடம்புக்கு?' என்று கேட்க வேண்டிய டாக்டர், 'என்ன ஸ்கோர்?' என்று கேட்டுக்கொண்டும், 'இன்று எந்த அளவிற்கு உற்பத்தி பெருகியது?' என்று கேட்க வேண்டிய தொழிற்சாலை அதிகாரி, 'என்ன ஸ்கோர், யார் பேட்டிங்?' என்று கேட்டுக் கொண்டும், 'நாளைக்கு என்ன படித்திட வேண்டும்?' என்று யோசித்திட வேண்டிய கல்லூரி மாணவர்கள் காவஸ்கரின் சாதனைகளை யோசித்துக்கொண்டும் இருக்கின்றனர் என்பது சர்வசத்தியமான நிஜம். 21ஆம் நூற்றாண்டை நோக்கி வெற்றி நடை போட வேண்டிய பாரத நாட்டிற்கு இந்த விளையாட்டு ஒரு சாபக் கேடு!

— ப. மூர்த்தி, பெங்களூர் — 21.

பொருளாதாரத்திலும், மற்ற எல்லாத் துறைகளிலும் நம் நாடு பின்தங்கியுள்ளது. கிரிக்கெட் நடக்கும் ஐந்து நாட்களிலும், நாம் டெலிவிஷன் முன்போ அல்லது, ரேடியோவில் நேரடி வர்ணனை கேட்டோ நேரத்தைச் செலவிடுகிறோம். இதனால் நிறைய man hours வீணாகிறது; உற்பத்தி குறைகிறது.

இந்த விளையாட்டுக்கு நாம் இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தும், நாம் முதல் இடத்தில் இல்லை. ஏனென்றால் இந்த விளையாட்டை ஒரு வியாபாரப் பொருளாக மாற்றி விட்டார்கள். ஆட்டக்காரர்களுக்கும் ஒரு Team Spirit இல்லை. இதில் அரசியல் வேறு சேர்ந்தால் கேட்க வேண்டுமா?

— பி. ராமமூர்த்தி, தாணா—4, மகாராஷ்டிரா.

நானோர் ஆசிரியர். கிரிக்கெட் சீசன் துவங்கி விட்டால், என் மாணவ மணிகளுக்குப் பள்ளிக்கூடம் ஒரு பிக்னிக் ஸ்பாட் மாதிரிதான்! நாங்கள் கற்பிப்பவை யாவும் விழலுக்கிறைத்த நீர்தான். வகுப்பறையில் ரகசியமாக டிரான்சிஸ்டரின் மெலிந்த ஒலியில் காமெண்டரி கேட்பதும், செய்திகளைப் பரிமாறிக் கொள்வதுமே மாணவ, மாணவிகளுக்கு முக்கியம். கண்டித்தால் லீவு போட்டு விட்டு வீட்டிலிருப்பார்கள் அல்லது உம்மணா மூஞ்சியுடன் கடனேயென்று விரிவுரையைக் கேட்பார்கள். கல்வியிற் சிறந்த தமிழ் நாட்டைக் கமெண்ட்ரியில் கட்டைமண்ணாகப் போகச் செய்யும் கிரிக்கெட்டுக்கு முக்கியத்துவம் தருவது அநியாயம்; அக்கிரமம்!

— ஆழ்வாரப்பன், குன்னூர் — 1.

இந்தியாவில் கிரிக்கெட்டுக்குத் தரப்படும் முக்கியத்துவம் நல்லதே, நியாயமே! முதல் பரிசு வாதம்!

பொதுவாக எந்த விளையாட்டிற்கும், ஒரு நாட்டில் முக்கியத்துவம் தரப்படுவதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன. 1. மக்களிடையே அந்த விளையாட்டுக்கு உள்ள ஆதர்வு; 2. உலக அளவில் அந்த விளையாட்டில் ஒரு நாட்டுக்கு இருக்கும் மதிப்பு.

இன்று மக்களின் பெரும் ஆதரவைப்

பெற்றுள்ள இந்திய விளையாட்டுக்களில், கிரிக்கெட் முதன்மையானது. சமீபத்தில் மஹாராஷ்டிர முதலமைச்சர் நிதிக்காக, இந்தியாவும் மேற்கிந்திய அணியும் விளையாடிய பொழுது, சுமார் 45,000 மக்கள் அதனைப் பார்த்து ரசித்தனர். இதன் மூலம் சேர்ந்த தொகை சுமார் ஐம்பது இலட்சங்கள் ஆகும். இது கிரிக்கெட்டுக்கு மக்களிடம் உள்ள ஆதரவைப் புலப்படுத்துகிறது. இதே ஆர்வத்தை நடந்து முடிந்த ஹாக்கி உலகப் போட்டியை அறிந்து கொள்ள மக்கள் காண்பித்தார்கள் என உறுதியாகக் கூற முடியாது. இதேபோன்றநிலைதான் டென்னிஸ்போன்ற விளையாட்டுக்களுக்கும் நம் நாட்டில் உள்ளது.

1983ல் புருடென்ஷியல் உலகக் கோப்பை, 1984ல் ஆசியக் கோப்பை, 1985ல் WCC கோப்பை, ரோத்மான்ஸ் கோப்பை, 1986ல் இங்கிலாந்துக்கு எதிரான சீரிஸ் வெற்றி, சமீபத்தில் சென்னையில் நிகழ்ந்த கிரிக்கெட் சரித்திரம் — இவை உலகக் கிரிக்கெட் அரங்கில் இந்திய அணிக்குப் பெரும் மதிப்பைக் கொடுத்துள்ளன.

இன்று உலகளவில் எந்த விளையாட்டிலும் ஓர் இந்தியர் முதன்மையான நிலையைப் பெற்றிருக்கவில்லை. ஆனால் கிரிக்கெட்டில் காவஸ்கர் உள்ளார். அவரது சாதனைகள் இன்னும் பல ஆண்டுகள் நிலைத்திருக்கும்.

இவ்வாறாக இன்று உலகளவில் ஓரளவாவது இந்திய நாட்டின் பெருமையைக் காப்பாற்றி வரும் கிரிக்கெட், எதிர்காலத்தில் இன்னமும் சிறப்பாக விளங்க, ஆரம்ப நிலைகளிலேயே வீரர்கள் கண்டெடுக்கப்பட வேண்டும். இந்த நிலையில் கிரிக்கெட்டுக்குத் தரப்படும் முக்கியத்துவம் அவர்களை ஊக்குவிக்கப் பெரிதும் உதவும் என்பதில் சந்தேகமில்லை.

கிரிக்கெட்டுக்குத் தரப்படும் முக்கியத்துவம் மற்ற விளையாட்டுக்களை அழித்துவிடும் என்ற வாதமும் தவறு. எனவே, மக்களின் ஆதரவையும் உலக விளையாட்டு அரங்கில் நன்மதிப்பையும் ஒருங்கே பெற்ற கிரிக்கெட்டுக்கு இந்தியாவில் தரப்படும் முக்கியத்துவம் நல்லதே; நியாயமே!

— பாலாஜ், சென்னை — 78

இன்று உலக அரங்கில், விளையாட்டுத் துறையில், இந்தியா தலை நிமிர்ந்து நிற்கிறது என்றால், அது கிரிக்கெட்டினால்தான். மற்ற விளையாட்டுக்களில், ஏன் நமது தேசிய விளையாட்டான ஹாக்கியில்கூட நம்மால் சிறப்பாக விளையாட முடியவில்லை. உலக ஹாக்கிக் கோப்பைக்கான போட்டியில் நாம் கடைசிக்குத் தள்ளப்பட்டோம். எல்லா விளையாட்டுத் துறைகளிலும் கால் வைத்து, எதிலும் முன்னேறாமல் இருப்பதைவிட, ஏற்கெனவே நம்நாட்டில் நன்கு வளர்ச்சியடைந்த கிரிக்கெட்டை இன்னும் முக்கியத்துவம் கொடுத்து, மேலும் உயரச் செய்வதே நல்லது.

— எஸ். சந்திரசேகரன்,
கோயம்புத்தூர் — 11

கிரிக்கெட் பாமரர் விளையாட்டு அல்ல; பணக்காரர் ஆட்டம் என்பது பழைய வாதம். இப்போது கிரிக்கெட் பட்டி, தொட்டிகளிலெல்லாம் விளையாடப்படுகிறது. கிரிக்கெட் செட் வாங்கச் சக்தி இல்லாதவர்கள் கூட ரப்பர் பந்தும் மட்டையும் வைத்து விளையாடுகிறார்கள். ஐந்தாறு வயதுச் சிறுவர்கள் கூட இப்போது கிரிக்கெட் பற்றிப் பேசும் அளவுக்குக் கிரிக்கெட் பரவிவிட்டது! இப்படிப்பட்ட ஆட்டத்துக்கு முக்கியத்துவம் தருவதில் என்ன தவறு? சமுதாயத்தைக் கெடுக்கும் சினிமாவுக்கும், அரசியலுக்கும் தேவையற்ற முக்கியத்துவம் தருவதைவிட, கிரிக்கெட்டுக்கு முக்கியத்துவம் தருவதில் தவறில்லை!

— சம்பத்குமாரி, திருச்சி — 4.

கால்பந்து, ஹாக்கி, கபாடி போன்ற ஆட்டங்கள் ஆடும்போது, எதிர் அணியினருடன் சிலசமயம் நேரடியாக மோதல் ஏற்படுவதுண்டு. ஆனால் கிரிக்கெட் ஆட்டத்தில் அத்தகைய பிரச்னை வருவதில்லை. இது ஜென்டில்மேன்ஸ் கேம் என்று பெயர் பெற்றது. மற்ற ஆட்டங்கள் யாவும் அதிக பட்சம் இரண்டு மணி நேரத்தில் முடிவுறுபவையாக உள்ளன. ஆனால் கிரிக்கெட் ஒரு நாள் முழுவதும் பார்த்து ரசித்துப் பொழுது போக்க வசதியாக உள்ளது.

— செ. அன்பு மதியழகன், திருச்சி — 12

"குளிர்ப்பிரதேசங்களில் வெயிலில் விளையாட அவசியம் இருந்தது. அதற்காக கிரிக்கெட்டைக் கண்டு பிடித்தார்கள், அதை நாம் கட்டிக் கொண்டு அழுவானேன்?" என்று கேட்பார்கள். அப்படிப் பார்த்தால் விளையாட்டு என்பதே வேலையற்ற பணக்காரர்கள் பொழுது போக்கக் கண்டு பிடித்த ஒன்றுதான். அதனால் இன்று, 'ஏழைகள் விளையாடுவானேன்?' என்று யாராவது கேட்க முடியுமா? மேலும் இந்தியாவிலும் வடமாநிலங்கள் பலவற்றிலும் குளிர்ப் பிரதேசங்கள் நிறையவே உண்டு.

— எஸ்.வி. ராஜசேகர், சென்னை — 17.

கிரிக்கெட் விளையாட்டில் ஒவ்வொரு பந்தும் மகிழ்ச்சியூட்டும் பந்தாக நமக்கு அமைகிறது. மட்டையாளர் ஒரு 'பவுண்டரி' அல்லது 'சிக்ஸர்' அடித்தால் நமது ஆனந்தத்துக்கு எல்லையேது? அதேபோல் ஒரு நல்ல பந்து வீச்சையும் ரசிக்கலாம்; சிறப்பான பந்து வீச்சை அடிக்காமல் தடுத்து நிறுத்துவதையும் கண்டு 'சபாஷ்' போடலாம். ஃபீல்டிங் திறனை, விக்கெட் கீப்பிங் ஆற்றலை எல்லாம் தனித்தனியே அனுபவித்து மகிழலாம். இவ்வாறு ஆட்டம் முழுவதும் ரசிக்கத் தக்கதாக அமைகிறது.

கிரிக்கெட்டில் ஐந்து நாட்கள் வீணாகிறது என்பார்கள். இதை ஒத்துக் கொள்ள முடியாது. மக்கள் ஓய்விற்காகவும், மனத் திருப்திக்காகவும் அவ்வப்போது ஒரு வாரமோ அல்லது மூன்று நான்கு நாட்களுக்கோ வேற்றிடங்களுக்கு, உறவினர் வீடுகளுக்குச் செல்வதில்லையா? இது மட்டும் எப்படித் தவறாகும்? விளையாட்டைப் பார்த்து முடித்தவுடன் புதிய உற்சாகத்தோடு வேலை பார்ப்பர்.

— இரா. மாறன், வடக்குக்காரைக்குறிச்சி

"தர்ப்பணம் பண்ண ஆளு இங்க யாரும் இல்ல. நீ போகலாம். நேக்கு டெய்லி பேப்பர்ஸ் படிக்க வேண்டியிருக்கு'' சங்கரய்யரின் வார்த்தைகள் அமிலங்கலந்ததாய் இருந்தன.

''அய்யா! என் தகப்பஞர் ரொம்ப வைதிகம்; அவருக்கு முதல் தர்ப்பணம் இது தான்; இந்தப் பள்ளப்பட்டியில வேற பிராமணுள் யாரும் இல்ல; கொஞ்சம் மனசு வைச்சு வரணும்; நான் எங்க வீட்டுக்குக் கூட கூப்பிடல்ல; நம்ம மஞ்சக் காணிப் பக்கத்தில உள்ள வலம்புரிப் பிள்ளையார் கோவில் குளத்துக்கு வந்தாப் போதும்...!'' சொல்லும் போது விழிகளில் நீர் முட்டிக் கொண்டு வந்தது.

''ஏன்யா! உனக்கு அறிவு இல்ல? முதல்ல மாதிரி இருந்த அல்பசல்பபாப்பான் இல்லேய்யா நான்; என் வீட்டைப் பாரு; அதைவிட, அந்தண்ட பக்கம் மாட்டியுள்ள போர்டைப் பாருங்காணும். என் மூத்த பிள்ளையாண்டான் நாராயணன்: எம். பி. பி. எஸ்., டாக்டர்ங்காணும் டாக்டர்... என்ஞல, உன் பிச்சைக்காச வாங்க முடியாது. நீர் போம்!'' — முகத்தை செய்திப் பேப்பரால் மூடிக் கொண்டார்.

ஆணி வேர் இழந்த ஆலமரம்



இருநாவுக்கரசு சோகம் கொப்புளிக்க, விழிநீர் கசிய இரு கைகளையும் ஏந்தி ஆண்டவன் சன்னிதானம் போல் நின்றிருந்தான்...

''கொஞ்சம் இப்டி... ஆ...! ஆங்... இப்ப இருமுங்க... ஆங்... இப்பல்லாம் மூக்கில ரத்தம் வர்றதா?'' — என்ற டாக்டரின் குரல் பக்கத்து அறையிலிருந்து வெளியில் வந்தது..

''இல்ல டாக்டர்! இப்போ ரத்தம் வர்ற தில்ல.''

''அப்படியா? ரொம்பச் சந்தோஷம். இனிமே நல்லாச் சாப்பிடுங்கோ'' — என்ருர் டாக்டர் நாராயணன்...

''இந்தாங்க டாக்டர்.''

''என்ன! இருநூறு ரூபாய் இருக்கு... நான் பேசினது நூத்தம்பதுதானே?''

''இருக்கட்டும் டாக்டர். நீங்க ஃபாரின் போய்ப் படிச்சவர்; ரெண்டே நாள்ல குணமாயிட்டேன். அதுக்குக் கோடி ரூவா தரலாம்; ஆனு இதுதான் என்ஞல முடிஞ்சது...''

''இந்தாங்க அம்பது... நீங்க கொடுத்ததே ரொம்ப அதிகம்...''

''பார்த்தியா! இப்போ என் மகன் ஓர் ஆள் கையைத் தொட்டா கொறஞ்சது அம்பது ரூவா பீஸ். உன் அல்பக் காச வாங்க என்னைக் குளக்கரைக்கு வரச் சொல்றே. ம்... நிலைமை அப்படி...'' சங்கரய்யர் பொருமினர்.

வெளியில் வந்த நாராயணன், கண்ணீர் மல்கக் கரைந்தபடி நிற்கும் இருநாவுக்கரசைப் பார்த்தார்...

''ஏம்பா, அவர்தான் கெஞ்சிக் கேட்குரு்ல. போயிட்டு வாங்களேன்'' சிபாரிசு போல் கூறினன்.

''உன் வேலையைப் பாருப்பா! நேக்கு தெரியும்...யோவ், போறியா, இல்ல கழுத்தைப் பிடிச்சுத் தள்ளட்டுமா?'' சங்கரய்யர் குதறினர்.

''அப்பா! பிராமணன்ங்கிறவன் அந்தக் குலத்திலப் பிறந்ததால பேரு அடைஞ்சிடற தில்ல; அவன் செய்ய வேண்டிய கடமைகளைச் செஞ்சாத்தான் பிராமணன் ஆகிருன். ப்ளீஸ் போயிட்டு வாங்கப்பா'' என்ருன் நாராயணன் பவ்வியமாக.

''தம்பி, என்னல எதுக்கு உங்களுக்குள்ள சண்டை? இருங்க, நான் போயிடறேன்'' இருநாவுக்கரசு பிள்ளை தோளில் கிடந்த துண்டை வாயில் அழுத்தியபடி மெல்ல நகர்ந்தார்.

''பிள்ளை! கொஞ்சம் இருங்க...'' என்று சொல்லி விட்டு உள்ளே சென்ற நாராயணன் சிறிதுநேரத்தில் வெளியில் வந்தபோது... கையில் தர்ப்பைக் கட்டு, பட்டை போட்ட நெற்றி, இடுப்பில் நாலுமுழ வேஷ்டி; அதைச் சுற்றிய சின்னக் காசித் துண்டுடன் காட்சியளித்தான்.


''வாங்க பிள்ளை போகலாம்...'' என்ற நாராயணன் இருநாவுக்கரசுடன் புறப்பட்டுப் போனன்.

— சுகந்தி நாராயணன்

தஞ்சை மா

அங்க
கெ
நற்ப

* கொள்ளிடக்கரை: தற்காலிகப் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.



முன்பு, 'நல்ல தண்ணீருக்கே ஐந்து கி.மீ. நடக்கணும்....' என்ற தலைப்பில் திருவாரூருக்கு அருகிலுள்ள ஆதிவிடங்கம் என்னும் ஹரிஜனக் குடியிருப்பின் அவல நிலை பற்றிக் கவர் ஸ்டோரியாகவே வெளியிட்டிருந்தோம். தஞ்சைக் கலெக்டரிடமும் முறையிட்டிருந்தோம். இப்போது அந்தக் குடியிருப்பின் நிலை என்ன? இந்த ரீ-விசிட்டில் அங்கே சென்று பார்த்தோம்; பேசினோம்.

''தண்ணீர் வராத கைப்பம்பு பற்றிக் கல்கியில் எழுதிய பிறகு, வாஷர், நட் எல்லாம் போட்டு அதைச் சீர் செய்துவிட்டார்கள். புதிதாக இரண்டு இடங்களில் புது பம்புகள் போட்டிருக்கிறார்கள். ஆனாலும் பிரச்னை முழுசாகத் தீர்ந்துவிட்டதெனச் சொல்லிவிட முடியாது. முன்பு ஒன்பதடி ஆழத்தில் பம்பு போட்டிருந்தார்கள். இப்போது பதினைந்தடி ஆழத்தில் போட்டிருக்கிறார்கள். இப்போது மழையும் பெய்து கொண்டிருப்பதால் குடிநீர்ப் பிரச்னை ஏதும் இல்லை. வெயில் காலத்தில் நிலத்தடி நீர் மட்டம் இறங்கும்போதுதான் பிரச்னையின் முழு வடிவமும் தெரியும். மற்ற இடங்களில் போடப்படுவதுபோல் நூறடி ஆழத்திற்கு மேற்பட்ட அடிகுழாய் போட்டால்தான் பிரச்னை தீரும்!'' என்றார் பாலசுப்பிர

* பூம்புகார் கண்ணகி சிலை




* நீலப்பாடி: புதிதாக வந்த பெஞ்சுகள்.





* ஆதிவிடங்கம்: புதிதா
அடிகுழாய்.

* நீலப்பாடி: புதிதாகப் பே



...ட்டம் — ரீ—விசிட்:

...ங்கே ...ஞ்சம் ...ணிகள்!



...டப்பட்டிருக்கும்

...ட மரப்பாலம்.



மணியம் என்ற இளைஞர்.

இன்னமும் அந்தக் காலனிக் குழந்தைகளுக்குச் சத்துணவுக் கூடமோ அல்லது குறைந்தபட்சம் பால்வாடியோகூடத் திறக்கப்படவில்லை. ரோடு வசதியும், 'பழைய குருடி கதவைத் திறடி' என்னும் கதைதான். நாம் அதுபற்றியெல்லாம் கவர் ஸ்டோரியாகவே வெளியிட்டிருந்தும்கூட அந்தத் தொகுதி எம்.எல்.ஏ. (அ.தி.மு.க.) இன்னும் அந்தப் பக்கம் எட்டிப் பார்க்கவில்லை என்பதுதான் வெட்கக்கேடு!

அடுத்து, திருவாரூரிலிருந்து பத்து கி.மீ. தூரத்திலுள்ள நீலப்பாடி அரசினர் உயர்நிலைப் பள்ளிக்குச் சென்றோம். முன்பு சென்றபோது பத்தாம் வகுப்பு மாணவர்களுக்குத் தவிர வேறு மாணவர்களுக்குப் பெஞ்சுகளே இல்லாமலிருந்தது. நாம் எழுதின பிறகு, புதிதாகப் பதினைந்து பெஞ்சுகளும் டெஸ்க்குகளும் வந்திருக்கின்றன. அதுவும் அரசு வாங்கித் தந்ததல்ல; பெற்றோர் கொடுத்த நன்கொடையில் வாங்கப்பட்டது என்றார்கள். புதிதாக வந்த பெஞ்சுகள் எட்டாம் வகுப்பு மாணவர்களுக்குச் சரியாகப் போய்விட, இன்னும் மற்றவர்கள் தரையில் உட்கார்ந்து படிக்கும் பரிதாப நிலைதான் நீடிக்கிறது.

இப்போது அந்த காலனியிலுள்ள தாய்—சேய் நல விடுதிக்கு ஸ்டாஃப் நர்ஸ்

• மாவட்ட வருவாய் அலுவலர் கிருஷ்ணமூர்த்தி.



நியமிக்கப்பட்டு, அங்குள்ள குவார்ட்டர்ஸிலேயே தங்கியிருக்கிறார் அவர். "கல்கி கட்டுரையால் எங்களுடைய பெரிய தொல்லைகளில் ஒன்று நீங்கிவிட்டது சார்!" என்றார் இளைஞர் வடிவழகன்.

அவரிடமே பாலம் பிரச்னை பற்றிக் கேட்டபோது, "சுமார் இரண்டாயிரம் ரூபாய் செலவில் புதிதாக இரண்டு இடங்களில் மரப் பாலம் அமைத்திருக்கிறார்கள். கல்கி எழுதின வேளை பிரச்னை தீர்ந்திடுச்சு சார்!" என்றார் உணர்ச்சிப் பெருக்குடன்.

பிறகு, தஞ்சை—தென்னாற்காடு மாவட்டங்களைப் பிரித்துக் கொண்டு ஓடும் கொள்ளிட நதி, கடலில் கலக்கும் இடத்திற்கு அருகிலுள்ள அளக்குடி கிராமத்திற்குச் சென்றோம். நேராக ஓடி வரும் கொள்ளிட நதி, அந்த இடத்திற்கு வந்ததும் திடீரென்று 'L' வடிவில் திரும்புவதால் அந்த இடத்திலுள்ள நதிக் கரை மிகவும் பலமானதாக இருக்க வேண்டும். இல்லையெனில் வெள்ளப் பெருக்கின்போது கரை உடைந்து, பக்கத்துக் கிராமங்கள் கபளீகரம் செய்யப்படும் அபாயம் இருக்கிறது. எனவே அந்தப் பகுதிக் கரையை மட்டும் கான்கிரீட் போட்டுப் பலப்படுத்தும் வேலை ஆரம்பிக்கப்பட்டது. அந்த வேலையில், முழுமையாகக் கான்கிரீட் போடப்படாமல், இரண்டு பக்கமும் போடப்பட்டு, நடுவில் மண்கரையாகவே இருப்பதையும், அதற்கு வெறும் சவுக்குக் கட்டைகளையும், பனை ஓலைகளையும் கொண்டு தடுப்புச் சுவர் அமைத்திருந்தாலும் அந்த வேலை கூட முழுமையாக முடிக்கப்படாமலிருந்ததையும் சுட்டிக்காட்டி, 'பயந்து பயந்து வாழும் பத்து கிராமத்து மக்கள்' என்ற தலைப்பில் விவரமாக எழுதியிருந்தோம். கலெக்டரிடமும் அந்த அபாயம் பற்றி எடுத்துக் கூறியிருந்தோம்.

இந்த ரீ—விசிட்டில் பார்த்தபோது, பாதியில் நின்றிருந்த சவுக்குக் கட்டைகளாலும் பனை ஓலைகளாலும் தடுப்புச் சுவர் அமைக்



"டைரக்டர் சார், என்னை நாளைக்குப் பெண் பார்க்க வர்றாங்களாம். எப்படி வெட்கப்படறதுன்னு கொஞ்சம் சொல்லிக் கொடுங்க... ப்ளீஸ்..."

— சத்யா.

கும் பணி முடிவுற்றிருந்தது. எ[illegible]தைந்தாயிரத்தில் ஒரு தற்காலிகத் திட்டம் தட்டி, அந்த மண் கரையின் அகலம் இரண்டடி அதிகப்படுத்தப்பட்டிருந்தது. மண் அரிப்பைத் தடுப்பதற்காகப் புல்லும், நெய்வேலிக் காட்டாமணக்குச் செடிகளும் வளர்க்கப்பட்டிருக்கின்றன. இவற்றோடு மணல்மூட்டைகளைக் கொண்டும் கரையைப் பலப்படுத்தியிருந்தார்கள். நிரந்தரத் தீர்வுக்குக் கான்கிரீட்தான் வழி என்பதால் எண்பது லட்சம் செலவில் அதற்கான திட்டமும் தீட்டப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகச் சொன்னார்கள். சந்தோஷத்தோடு விடை பெற்றுக் கொண்டு பூம்புகாருக்குப் புறப்பட்டுச் சென்றோம்.

பூம்புகாருக்குள் நுழைந்தவுடனேயே நம் கண்ணில் பட்டது சிலம்பு வடிவிலான தங்கும் விடுதி. சென்ற விசிட்டைப் போல் இப்போது அங்கே பன்றிகளைப் பார்க்க முடியாவிட்டாலும், ஆடு, மாடுகள் வந்து போனதற்கான அடையாளங்கள் நிறைய இருந்தன. இப்போது நாம் அங்கே புதிதாகப் பார்த்தது 'இங்கே அசுத்தம் செய்யாதீர்கள், மீறினல் தண்டனைக்குள்ளாவீர்கள்!' என்று ஆங்காங்கே எழுதி வைக்கப்பட்டிருந்த போர்டுகள்தான்! விசாரித்தபோது, இந்த விடுதிச் சுவர்களே ஆட்டம் கண்ட நிலையில் இருப்பதால், முழுமையாகவே இடித்துவிட்டுப் புதிய மண்டபம் ஒன்று கட்டப் போவதாகச் சொல்லிக் கொண்டார்கள்.

கடற்கரையிலுள்ள கண்ணகி சிலையைப் பார்த்தோம். சென்றமுறை அதன் முகம் எப்படி விரிசலடைந்து கிடக்கிறது என்பதைப் படம் பிடித்து வெளியிட்ட பிறகு, உடனடியாக அந்த விரிசலை மறைக்க சிமெண்ட் பூசினார்களாம். ஆனாலும் விரிசல் மறையவில்லை! (பார்க்க படம்!)

அடுத்து திறந்த வெளி அரங்கத்திற்கு வந்தபோது, "திறந்த வெளி அரங்கம் வருஷத்தில் சில நாட்கள்தான் சார் பயன்படும்!" என்றார் ஒரு காவல்காரர்.

"இல்லையே, பார்த்தால் தினம் தினம் பயன்படுத்தப்படுவதாய்த் தெரிகிறதே?" என்றோம் நாம்.

"விழாச் சமயத்தில் இவற்றையெல்லாம் நன்றாகச் சுத்தப்படுத்தி விடுவோம் சார்!" என்றார் அவர்.

கலைக் கூடத்தில் சில இசைக் கருவிகளையும் இப்போது சேர்த்திருக்கிறார்கள். நன்றாகவும் இக்கூடத்தைப் பராமரிக்கிறார்கள். (அரசுக்கு இதற்காக மட்டும் ஒரு சபாஷ்!)

அப்புறம் கேண்டீன் விஷயம். காப்பி, டீ, பிஸ்கெட் மட்டும் விற்க அனுமதித்து டெண்டர் விட்டிருக்கிறார்களாம். சில வாரங்களில் அந்த கேண்டீன் ஆரம்பமாகிவிடுமென்றும் சொன்னார்கள்.

மறுபடியும் நாம் திருவாரூர்க் கோயிலுக்கு வந்து பஞ்சமுக வாத்தியம் வாசிக்கும் எழுபத்தியொரு வயதான சங்கரமூர்த்தியைச் சந்தித்தோம். இவரைப் பற்றி முன்பு கல்கியில் எழுதப்பட்ட பிறகு, இருபது ரூபாய் சம்பளம் ஏற்றப்பட்டிருக்கிறது. "இவருக்கும் இவரிடம் பஞ்சமுக வாத்தியம் கற்றுக் கொள்ள வரும் மாணவர்களுக்கும் உதவித் தொகை கொடுத்து ஊக்குவித்தால், இந்தக் கலை அழியாமல் பாதுகாக்கப்படுமே!" என்று கோயில் நிர்வாக அதிகாரியிடம் நாம் எடுத்துச் சொன்னபோது, அரசுக்குத் தெரியப்படுத்துவதாகச் சொன்னார் அவர்!

கடைசியாக இன்னும் சில இடங்களைப் பார்த்த பிறகு, நாம் தஞ்சை மாவட்டக் கலெக்டரைச் சந்திக்கச் சென்றோம். முன்பு சந்தித்த கலெக்டர் டி. ஆர். இராமசாமி இப்போது மாற்றலாகிவிடவே, இப்போது கலெக்டர் பொறுப்பைக் கவனித்துக் கொண்டுவரும் மாவட்ட வருவாய் அலுவலர் கே. ஆர். கிருஷ்ணமூர்த்தியைச் சந்தித்தோம். அவரும், "புது கலெக்டர் வந்தபின் வாருங்கள்!" என்று நம்மைத் தட்டிக் கழிக்காமல், தம்மோடு மூன்று நேர்முக உதவியாளர்களையும் மற்றும் சில ஆபீஸர்களையும் உடனிருக்கச் செய்து, நாம் சொன்னவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டார்.

பிறகு, கள்ளப் பெரம்பூர், வடுவூர் ஏரிகளில் மண்டிக் கிடந்த கோரைப் புற்களை அப்புறப்படுத்தி, புல்டோசர்களைக்கொண்டு அவை ஆழப்படுத்தப்பட்டது, நீடாமங்கலத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் மூன்று டாக்டர்கள் நியமிக்கப்பட்டுப் பணியாற்றிக் கொண்டிருப்பது, சும்மா கிடந்த குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள் இப்போது செயல்படத் துவங்கியுள்ளது.... என்று முன்பு நாம் எழுதிய — கலெக்டரிடம் எடுத்துச் சொன்ன குறைபாடுகளுக்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றி விவரித்தார்.

இன்னும் பல விஷயங்களுக்குத் தீர்வேதும் காணப்படவில்லை என்பதுதான் உண்மை என்றாலும் சில பிரச்னைகளுக்காவது முழுமையான தீர்வு காணப்பட்டிருப்பதற்காக அவருக்குக் கல்கியின் சார்பில் நன்றி கூறி, மற்ற பிரச்னைகளுக்கும் இனி தீர்வு காணும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவார்கள் என்ற நம்பிக்கையோடு விடை பெற்றுக் கொண்டு வந்தோம்.

— எஸ். சந்திரமௌலி

படங்கள்: எஸ். சோமசுந்தரம்



பட்டுக்கோட்டை பிரபாகர்

என்னைக் காணவில்லை

20

ஈஸ்வரனின் மோதிரத்தில் அந்தக் காலிப் பள்ளத்தையே பார்த்துக் கொண்டிருந்த பரத்தின் தாடையைத் துப்பாக்கியின் முனையால் தொட்டுத் தன் பக்கம் திருப்பினான் ஈஸ்வரன்.

''உன்னைச் சித்திரவதை செய்வேன் பரத். ரொம்ப வலிக்கும். சொல்லிடு. அசோக்கை எங்கே வச்சிருக்கே?''

பதில் சொல்லாமல் அவன் முகத்தையே பார்த்தான் பரத் — சுவரோடு சாய்ந்து அமர்ந்த நிலையில். நின்று கொண்டிருந்த ஈஸ்வரன் சட்டென்று பரத்தின் கைவிரல்களின் மேல், ஷூவின் குதிகால் பகுதியை வைத்து ஒரு திருகு திருக...

''அம்மா...'' என்றான் பரத். ''வேணாம், சொல்லிடறேன்!''

காலை எடுத்துக் கொண்டதும் கையை உதறிக் கொண்டு, பற்களைக் கடித்துக் கொண்டு வலியை விழுங்கினான் பரத்.

''அசோக்கை வெளிநாடு போயிருக்கிற என்னோட நண்பன் ஒருத்தன் வீட்டில் தனியா தங்க வச்சிருக்கேன்.''

''வெரிகுட். எங்கே இருக்கு அந்த வீடு?''

''சொல்றேன். நீயும் ஒரே ஒரு கேள்விக்குப் பதில் சொல்லிடு.''

''என்ன?''

''நாகராஜனுக்கும், உனக்கும் என்ன பகை?''

''ஒண்ணும் பகையில்லையே..''

''பின்னே எதுக்காக அவரைக் கொலை செஞ்சே?''

ஈஸ்வரன் அதிர்ச்சியடைந்தது முகத்தில் அப்பட்டமாகத் தெரிந்தது.

''சொல்லு. எனக்குத் தெரியும். நீதான் அவரைக் கொலை செஞ்சே.''

''இல்லை. நான் இல்லை.''

''நீ நாகராஜன் வீட்டுக்குப் போயிருக்கியா?''

''போனதில்லை.''

''உன் வாயிலே உண்மை வராதா?''

''அது இருக்கட்டும். நீ சொல்லு. விலாசம் சொல்லு.''

''சொல்லத்தானே போறேன். நீதான் கொலை செஞ்சேன்னு நான் எப்படிக் கண்டுபிடிச்சேன்னு தெரிஞ்சிக்கிற ஆர்வமே இல்லையா உனக்கு?''

''உளறாதே. என் பொறுமை



''பைசாக் கூட வரதட்சிணை வேண்டாம்னு சொன்ன அந்த வரனை வேண்டாம்னு சொல்லிட்டீங்களாமே? ஏன்?''

''பையனுக்கு, ஸ்டவ் கம்பெனியில் வேலையாமே!''

— ஆர். அப்துல் சலாம்.

யைச் சோதிக்காதே. நான் கொலை செய்யலே.''

''அந்த போட்டோ காட்டிக் கொடுத்துடுச்சி ஈஸ்வரன்.''

''எந்தப் போட்டோ?''

''அதோ அந்தச் சுவரிலே மாட்டியிருக்கிற போட்டோ'' என்று எதிர்ச் சுவரில், இல்லாத போட்டோவைப் பரத் சுட்டிக் காட்ட...

முட்டாள் ஈஸ்வரன், ''எந்தப் போட்டோ?'' என்று திரும்பிப் பார்க்க...

அந்தச் சில விநாடிகள் போதுமானதாக இருந்தது பரத்திற்கு. மின்சார வேகத்தில் அவன் மேல் பாய்ந்து துப்பாக்கி பிடித்த அவனது கையைப் பின்புறமாக மடக்கி, முழங்காலை உயர்த்தி, அவனது முதுகுத் தண்டில் முட்டுக் கொடுத்து, ''ட்ராப் த கன். இல்லேன்னா உன் விரலாலேயே ட்ரிக்கரை அழுத்த வச்சிடுவேன். இப்போ சரியா உன் பின் மண்டையை நோக்கிக் குறி இருக்கு. மூளை சிதறிடும்... கமான்.''

கையை மேலும் மடக்க... ஈஸ்வரன் விரல்களை விரித்துத் துப்பாக்கியை விடுவிக்க... அது தரையைத் தொடுமுன் காட்ச் பிடித்தான் பரத்...

''இப்போ என் முறை ஈஸ்வரன்'' என்று துப்பாக்கியை இடுப்பில் செருகிக் கொண்டு வயிற்றில் உதைத்து, முகத்தில் குத்தி அவனை நிலைகுலைய வைத்து, ''சொல்லு, நீதானே நாகராஜனைக் கொன்னது?'' என்றான்.

''ஆ... ஆமாம்...''

''ஏன் கொன்னே?''

ஈஸ்வரனின் விழிகள் உடனே சிவந்து, ''பழி! பழி! அது இன்னும் பாக்கி இருக்கு'' என்றான்.

''எந்திரி. எனக்கு நிறைய வேலை இருக்கு. ஒத்துக்கிட்ட வரைக்கும் இப்போ போதும். மீச்சத்தை விரிவாக் கேட்டுக்கறேன்.''

பரத் அவனைத் துப்பாக்கி முனையில் நடத்தி அந்த உள்ளறைக்குள் அனுப்பிக் கதவைச் சாத்தினான். நேராய் போனுக்குச் சென்றான். ரிசீவரை எடுத்து 1,0,0 சுழற்றி விட்டு உடனே வைத்தான்.

இது என்ன இடம் என்பதே தெரியாமல் எப்படிச் சொல்லி வரவழைப்பது? கதவு எண், தெருப் பெயர் தெரிந்து கொண்டு பிறகுதான் போன் செய்ய முடியும்.

பரத் வாசல்கதவைத்திறந்துவெளிப்பட்ட அடுத்த விநாடி அவன் மண்டையில் இறங்கியது அந்தத் தடி!

எதிர்பார்க்கவே இல்லை இந்தத் தாக்குதலை. நெற்றியோரம் பொத்துக் கொள்ள... தடுமாறின பரத் உள்ளே தள்ளப்பட்டான்... இடுப்பில் இருந்த துப்பாக்கி உருவப்பட்டது.

''ஜன்னல் வழியா எல்லாம் பார்த்துக்கிட்டுதான் இருந்தேன் பிரதர். தயாரா நின்னேன்'' என்று சிரித்தான் டாக்சி ஓட்டி வந்த ஈஸ்வரனின் தோஸ்த்.

பரத்தின் நெற்றியில் ரத்தப் பெருக்கு சற்று அதிகமாகிப் புருவம் தொட்டு, இமை மேல் தவழ்ந்து கண்ணுக்குக் குறுக்காக வழிய... பரத் நினைவை உதறி... மயக்க நிலைக்குச் சென்று கொண்டிருந்தான்.

அவன் உள்ளறையின் கதவைத் திறந்து, ''ஈஸ்வரன், வெளியே வா, நான்தான்'' என்றதும், ஈஸ்வரன் வந்து சிரித்து, ''சரியான நேரத்துக்கு வந்தேப்பா'' என்றான்.

''அதெல்லாம் இருக்கட்டும். இவன் கிட்டேர்ந்து தகவல் வாங்கணும்னியே, வாங்கிட்டியா?''

''இல்லே. சொல்ல மாட்டேங்கிறான்.''

''என்ன செய்யப் போறே?''

''இவன் போலீஸ் ஆதரவுள்ள ஆசாமி. என்னை மிரட்டிக் கொலையை வேற ஒத்துக்க வச்சிட்டான். இந்த இடம் தெரிஞ்சு போச்சு. அதனால் இனிமே இவனை உயிரோட விட்டு வைக்கிறது ஆபத்து.''

''அப்போ தீர்த்துடலாமா?''

''இங்கே வச்சித் தீர்க்கிறது சரியில்லே. நான் ஓர் இடம் வச்சிருக்கேன். ஒரு ரயில்வே லைன். வெளிச்சம் அதிகமில்லாத திருப்பம் ஒண்ணு இருக்கு அங்கே. அந்த இடத்துக்கு எல்லா வண்டியும் ரொம்ப வேகமாத்தான் வரும். ஒரு ஃப்ளை ஓவரைத் தாண்டி வர்றப்போ வேகத்தைக் குறைக்கவே முடியாது. ஐயா இப்போ மயக்கத்திலே இருக்கார். கொண்டு போய்ச் சுத்தமாப் படுக்க வச்சிடலாம். அடையாளத்துக்கு மூஞ்சி கூட மிஞ்சாது.''

''நல்ல யோசனை.''

''போய் உன் வண்டியை எடுத்துட்டு வா.''

''இதோ'' அவன் போக...

ஈஸ்வரன் காத்திருக்க, பரத் ஒரு மயக்கத்தில் கை, கால்களைப் பரப்பிக் கொண்டு, முகத்தில் ரத்த நதிகளுடன் கிடந்தான்.

''இந்த இடத்திலேதான் இந்தச் சீட்டு கிடந்தது'' என்றாள் சுசீலா.

முருகேசன் யோசனையாக அந்தப் பிரதேசத்தைப் பார்வையிட்டான்.

சுசீலா தூரத்துச் சாலையை நோக்கி நடந்தாள். கையில் வைத்திருந்த டார்ச் லைட்டை அவ்வப்போது தரையில் அடித்துப் பார்த்துக் கொண்டே நடந்தவள், ''சார், இங்கே வாங்க'' என்றாள்.

''என்ன?'' என்று வந்தான.

''இதோ பாருங்க ரோஜா இதழ்!''

''இதுக்கென்ன?''

''வரிசையா இதுமாதிரி மூணு இதழ் பார்த்துட்டேன். வரவேற்பில் ரோஜாப்பூ கொடுத்தாங்க. அதைக் கையிலேயே வச்சிருந்தார் பரத்.''

''நல்லவேளை. காத்து இல்லே. இந்த இதழ்களைப் பரத்தான் பிச்சிப் போட்டுட்டே போயிருக்கணும் அந்த ஆசாமியைத் தொடர்றப்போ. வாங்க இதை ஃபாலோ செய்யலாம். நான் பைக்கை எடுத்து நிதானமா ஓட்டிக்கிட்டே வர்றேன்.''.

முருகேசன் சொன்னபடி பைக்கில் முதல் கியரில் மெதுவாக வண்டியை உருட்ட... அதன் வெளிச்ச விசிறலில் சுசீலா, ''இதோ ஒண்ணு. அதோ ஒண்ணு'' என்று சொல்லிக் கொண்டே நடந்தாள்.

பரத் துப்பாக்கி முனையில் காரில் ஏற்றப்பட்ட இடம் வந்தார்கள். ஈர மண் பகுதியில் கார் டயர்கள், சைக்கிள் டயர்களின் அச்சுக்களுக்கு மத்தியில் 'T. M. X. 52...' என்கிற விரல் எழுத்துக்களைப் பார்த்தார்கள்.

''ச்சே! பாதி எழுதின்ப்போலே... அவசரமா கடத்தப்பட்டிருக்கணும்...''

''இதை வச்சி எதுவும் செய்ய முடியாதா?''

''நிறைய செய்யலாம். சரி. வாங்க மேடம், ஏறுங்க. உங்களைப் பரத் வீட்ல விட்டுட்டு நான் கண்ட்ரோல் ரூமுக்குப் போறேன். டிராஃபிக் போலீசோட உதவி உடனடியா வேணும். ட்ரேஸ் பண்றது கொஞ்சம் சிரமம்தான். ஆனால் இப்போ செய்ய வேண்டியது அது ஒண்ணுதான்.''

''நானும் வர்றேனே...

''வேணாம். நீங்க வீட்டிலேயே இருங்க. பரத் எந்த நேரமும் வீடு திரும்பலாம். இல்லேன்னா போன் செய்யலாம். நான் ஒரு மணி நேரத்திற்கு ஒரு தடவை உங்களை போன்ல கூப்பிடறேன்...''

''சரி.''

பைக் விரைந்தது.

சுசீலா வீட்டில் கதலைச் சாத்திக் கொண்டு, சோபாவில் முழங்கால்களைக் கட்டிக் கொண்டு டெலிபோனையே பார்த்துக் கொண்டு காத்திருக்க...

வயர்லெசில் செய்தி திசையெங்கும் பறந்தது.

டிராஃபிக் சார்ஜெண்டுகள் 'T.M.X. 52' என்று துவங்கும் வண்டிகளை நிறுத்தி விசாரிக்குமாறு பணிக்கப்பட்டார்கள். டாக்ஸி ஸ்டாண்டுகளுக்கு ஆட்கள் விரைந்தனர். முருகேசன் ஒரு டீ அடித்துவிட்டுச் சுறுசுறுப்பாக யோசனை செய்து கொண்டிருக்க...

மயக்க நிலையில் இருந்த பரத் அந்த இருட்டான பகுதியில் ஃப்ளை ஓவருக்கு அருகில் தண்டவாளத்தில் கிடத்தப்பட்டான். அந்தப் பக்கம், ஒரு வளைவு. அந்த வளைவில் ஒரு ரயில் திரும்பி இந்தப் பாலத்துக்கு அடியில் நேராகும்போது... கடைசி விநாடியில்தான் குறுக்கே ஆள் கிடப்பதை உணர முடியும். அதன் பிறகு எத்தனை ப்ரேக் அடித்தாலும், ஏழெட்டு சக்கரங்களாவது ஏறி முடிந்திருக்கும்.

''நின்னு பார்ப்போமா?'' என்றான் டிரைவர்.

''வேணாம். போய்டலாம்'' என்றான் ஈஸ்வரன்.


தண்டவாளம் அமைந்திருந்த சரிவில் இருந்து கற்களில் ஏறி, மேட்டுக்கு வந்து தூரத்தில் வந்து கொண்டிருக்கும் ரயிலைப் பார்த்தார்கள்.

''நாளைக்குப் பாவம் ரயில்வே மந்திரி வருத்தச் செய்தி சொல்லணும்'' என்ற ஈஸ்வரன் டாக்சியை நோக்கி நடந்தான்: ''வா போயிடலாம்.''

''சரி. அசோக்கை எப்படிக் கண்டுபிடிக்கப் போறே?''

''பரத் உயிருக்குப் பயந்து ஒரே ஓர் உண்மை மட்டும் சொல்லியிருக்கான்.''





''என்ன அது?''

''வெளிநாடு போயிருக்கிற அவனோட நண்பன் வீட்டிலே தங்க வச்சிருக்கேன்னு சொன்னான். ஸோ, பரத்தோட நண்பர்கள் யாருன்னு தெரிஞ்சி, அதிலே வெளிநாடு போயிருக்கிறது யாருன்னு தெரிஞ்சுக் கிட்டாப் போதும்.''

''அதை எப்படி கண்டுபிடிப்பே?''

''ரொம்ப சுலபம். நாளைக்கு அவனோட. அடக்கத்துக்கு வர்ற கும்பல்கிட்டே சாமர்த்தியமா பேச்சுக் கொடுத்தாப் போதும்.''

இருவரும் டாக்ஸியில் ஏறிப் புறப்பட்டுச் சென்றார்கள்.

பரத் இன்னும் மயக்கம் கலையாமல் தண்டவாளத்தில் தலை வைத்துக் கால்களை அடுத்த தண்டவாளத்தின்மேல் போட்டுக் கொண்டு படுத்துக் கிடக்க...

தூரத்தில் அந்த ரயில் பாலத்தை நோக்கி பெருமூச்சுகளுடன் விரைந்து கொண்டிருந்தது. அதன் ஓட்டத்தின் அதிர்வுகளில் தண்டவாளங்கள் அதிர...

அந்த அதிர்வு பரத்தின் மண்டையில் தட்டித் தட்டித் தட்ட.....

லேசாகக் கண் விழித்துப் பார்க்க...

ரயில் பாலத்தின் முகப்பை நெருங்கியிருந்தது.

அதிர்வும், இஞ்சினின் சத்தமுமாகச் சேர்ந்து பரத்தின் மயக்கத்தை அடித்துத் துரத்தி... உடனடியாக அபாயத்தை உணர்த்தியதும்... உடம்பின் அனைத்துச் சக்திகளையும் ஒன்று திரட்டி ஒரே குதியில் தண்டவாளத்தை. விட்டுத் தூரப் போய் விழுந்தான்.

சில வினாடிகள் தாமதமாயிருந்தாலும் ரயில் கட்டாயம் மிக்ஸியின் வேலையைச் செய்திருக்கும். அனைத்துப் பெட்டிகளும் அவனைக் கடந்து போன பின்னரும், பதற்றம் அடங்காமல் இருந்தான். நெற்றியைத் தொட்டுப் பார்த்தான். காயத்தில் சொத சொதவென்று ரத்தம் இருந்தாலும், மேற்கொண்டு ரத்தம் வரவில்லை.

கைக்குட்டையை எடுத்துக் காயத்தின் மேல் பட்டையாக மடித்து வைத்து, பின் தலையில் முடிச்சுப் போட்டுக் கொண்டு.... மெதுவாக எழுந்து நின்றான். இன்னும் லேசான மயக்கம் இருந்தது.

மெதுவாக மேலே ஏறிச் சாலைக்கு வந்தான். கொஞ்ச தூரம் நடந்ததும் ஒரு போஸ்ட் ஆபீஸ் தெரிந்தது.. நுழைந்து லோக்கல் காலுக்கு அனுமதி கேட்டு வீட்டுக்குச் சுழற்றினான்.

''ஹலோ'' என்றாள் சுசிலா.

''சுசி... சுசி... நான்தான். நிறைய நடந்து போச்சு. நான் இப்போ ஸேஃப். ஆனா ஒரு சின்ன காயம்.. மயக்கமா இருக்கு. ஒரு போஸ்ட் ஆபீஸ்லேர்ந்து பேசறேன். இடம் சொல்றேன். வண்டி எடுத்துக் கிட்டு வர்றியா?'' என்று சொல்லிவிட்டு பெஞ்சில் உட்கார்ந்து, சுவரில் சாய்ந்து, கண்களை மூடிக் கொண்டான்.

அடுத்த அரைமணி நேரத்தில் முருகேசனும், சுசிலாவும் ஒரு டாக்ஸியில் வந்து, அவனை அழைத்துக்கொண்டு,ஒருபிரைவேட் நர்சிங் ஹோமில் ஊசிகளும், மண்டையில் பாண்டேஜூம் போட்டுக் கொண்டு... நேராய் வீடு வந்து...

''பரத், நல்லா தூங்கு. எதுவானாலும் காலைல பேசிக்கலாம்'' என்றான் முருகேசன்.

''ம்கூம். இது அர்ஜெண்ட். நாகராஜனைக் கொன்னவன் பேரு ஈஸ்வரன். சுசி, நீ உடனே இன்ஸ்பெக்டர் நாதனை இங்கே வரச் சொல்லு'' என்று கூறிவிட்டுத் தன் பாண்ட் பாக்கெட்டில் இருந்து அந்தப் பொட்டலம் எடுத்து. ''முருகேஷ், இதிலே கிழிக்கப்பட்ட ஒரு கடிதத்தோட துண்டுகள் இருக்கு. இன்ஸ்பெக்டர் நாதன் வர்றதுக்குள்ளே இதைச் சரியாப் பொருத்தி அமைக்கணும்'' என்றான்.

''ஓக்கே. நான் செய்யறேன். அவர் வரட்டும். அதுவரைக்கும் நீ கொஞ்சம் தூங்கு.'' என்ற முருகேசன் மேஜையில் அந்தத் துண்டுகளைப் பரப்பி வைத்துக் கொண்டு கிழிசலை வைத்துச் சேர்க்க ஆரம்பித்தான். சுசிலா போனில் இன்ஸ்பெக்டரை வரச் சொல்லித் தகவல் தந்துவிட்டு அவளும் உதவ ஆரம்பித்தாள்.

நாற்பது நிமிடங்களில் அவர்களால் அந்தக் கடிதத்தைப் படிக்க முடிந்தது.

'அண்ணா அசோக் தன் அப்பாவைச் சந்திக்கச் சரியாய் இரவு 9 மணிக்குப் பங்களாவுக்குப் போகிறான். நம் திட்டப்படி காரியத்தை அதற்கும் முன்னதாக முடித்துவிடு. கொலைப் பழியில் அசோக் மாட்டிக் கொள்வது நிச்சயம். இந்தக் கடிதத்தைப் படித்து விட்டுக் கிழித்துவிடு. — பிரேமா'

— என்றிருந்தது.

(தொடரும்)

''நேத்து பெண்பார்க்கப்போன இடத்தில் டிபன் எல்லாம் எப்படி?''

''அதையேன் கேட்கிறே, பெண் வீட்டுக்காரங்க ரொம்ப சிக்கனம், உ—பன்னோட சரி.''

— கீழை. அ. கதிர்வேல்.





* திருவாரூரிலுள்ள சிலைகள்: லாக்கரின் வெளித்தோற்றம்.

லாக்கரில் தெய்வங்கள்! வெளியில் முணுமுணுப்புகள்!

தஞ்சை மாவட்டத்தைச் சுற்றியுள்ள கிராமங்களிலிருக்கும் பாதுகாப்புக் குறைந்த கோயில் சிலைகளையெல்லாம், மொத்தமாய்க் கொண்டு வந்து பாதுகாப்பதற்காக, திருவாரூர் தியாகராஜ சுவாமி கோயிலின் வெளிப் பிராகாரத்தில் சுமார் பதின்மூன்று லட்சம் செலவில் ஒரு கட்டடம் கட்டியுள்ளார்கள். இதற்குள் சுமார் மூவாயிரம் சிலைகளை வைக்க முடியும்.


இந்த லாக்கர் பற்றிய முணுமுணுப்பு இந்தக் கட்டடம் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும்போதே இருந்தது என்பதை கல்கியில் முன்பே வெளியிட்டிருந்தோம். இப்போது நிலைமை எப்படி? இதோ நமது ரீ—விசிட் ரிப்போர்ட்.....

"முதலாவதாய் பூஜை புனஸ்காரம் இல்லாமல், கோயில்களிலிருந்து சிலைகளைக் கொண்டு வந்து இப்படி லாக்கரில் வைக்கலாமா?

இந்தக் கேள்விக்கு கோயிலின் நிர்வாக அதிகாரி ஸ்ரீதரன் சொல்கிறார்:

"தஞ்சாவூர் மாவட்டம் முழுமையிலுமாய் பூஜைக்கு வழியில்லாத — பாதுகாப்பு இல்லாத கோயில்களிலிருக்கும் சாமி சிலைகள் ஏற்கெனவே கொண்டு வந்து ஆங்காங்கேயுள்ள பாதுகாப்பான கோயில்களில் வைக்கப்பட்டுள்ளன. இப்போது, சிக்கல் கோயிலில் சுமார் இருநூற்றைம்பது சிலைகள் உள்ளன. திவரூர் கோயிலில் நூறு இருக்கின்றன. திருவாரூரிலேயே சுமார் முந்நூறு இருக்கின்றன. இதுபோன்று ஆங்காங்கே இருப்பவற்றைத் திருவாரூர் லாக்கரிலேயே வைப்பதுதான் திட்டம். இதில் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவெனில், இவையெல்லாம் உற்சவ மூர்த்திகள். இவை அந்தந்தக் கோயில்களிலேயே இருந்தாலும்கூட தினப்படி பூஜை நடக்காது. ஆனாலும், இங்கே லாக்கரில் தினசரி ஒரு தடவை தீபாராதனை காட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.


இன்னொரு சந்தேகம், இதுபோல வைக்கப்பட்டால், சிலைகளுக்கு மெட்டல் கான்ஸர் வரும். இந்த அற்புதமான புராதனச் சிலைகள் அழியும் என்பது. இதற்குக் கோயிலின் தக்கார் தென்கோவன் (நான் இ.க. காரண



* ஸ்ரீதரன்



* தென்கோவன்



"நர்ஸைக் கல்யாணம் செய்து கொண்டது தப்பாப் போச்சு."

"ஏன்?"

"காப்பியை அவுன்ஸ் கிளாசில் அளந்து கொடுக்கிறா!"

— சொ. மு. முத்து.

இருந்தவன். இப்போ ஆஸ்திகனாயிட்டேன்.)

மெட்டல் கான்ஸர் வராதிருக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தொல்பொருள் ஆய்வு இலாகாவுடன் இணைந்து எல்லாச் சிலைகளுக்கும் 'ரொடேஷன்' முறையில் ரசாயன மருந்துகள் உபயோகித்து, மெட்டல் கான்ஸர் வராதிருக்கச் செய்வோம்" என்றார்.

மற்றொரு கேள்வி, இப்படி மொத்தமாய் எல்லாவற்றையும் ஒரே இடத்தில் கொண்டு வந்து வைத்துவிட்டால், திருடர்களுக்கு வேலை சுலபமாகிவிடும் என்கிறார்களே? இதற்கு ஸ்ரீதரனின் பதில்: "நான்கு பக்கச் சுவர்களும் இரண்டரை அடி தடிமனானவை. இதிலே அரை அடிக்கு கான்கிரீட் போடப்பட்டிருக்கிறது. குறுக்காகப் பலமான இரும்புக் கம்பிகள் உள்ளன. தமிழ்நாடு கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷன் நிறுவனம் தான் இந்தப் பதினைந்துக்குப் பதினைந்து (மீட்டரில்) கட்டடத்தைக் கட்டியுள்ளது. தரையும் மேல்தளமும் பெயர்த்தெடுக்க முடியாதபடி உள்ளன. இரட்டைக் கதவுகள், மூன்று பூட்டுகள். இவற்றைத் திறக்க ஆறு சாவிகள் வேண்டும். இவை மூன்று பேரிடம் இருக்கும். (எக்ஸிகியூடிவ் ஆபீஸர், உதவி கலெக்டர் ரேங்கில் ஓர் அதிகாரி; மற்றும் லோக்கல் பிரமுகர் ஒருவர்.) இதையும் மீறி என்ன சார் நடக்கும்?"

லாக்கரைப் போய்ப் பார்த்தோம். துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாரா. கூட வந்த எக்ஸிகியூட்டிவ் ஆபீஸர் பூட்டில் சாவியை வைத்ததுமே உய்ங்.... உய்ங்.... என்று சைரன் அலறி, டியூட்டி முடிந்து தூங்கிக் கொண்டிருந்த சில போலீஸ்காரர்களைப் பதறிக் கொண்டு எழச் செய்தது. அதை ஆஃப் செய்துவிட்டு கதவுகளைத் திறந்து கொண்டு உள்ளே போனோம். மனுஷன் ஒரு மணி நேரம் உள்ளே மாட்டிக் கொண்டால் மூச்சுத் திணறிச் சாக வேண்டியதுதான். ஹால் போல இருந்ததில் சுற்றிலும் அலமாரிகள். உள்ளேயே, ரொம்பக் காஸ்ட்லியானவற்றை வைக்க இன்னொரு அறை.

பார்த்துவிட்டு வெளியே வந்ததும் நம் மனத்தில் பட்டவை:

* சைரனுக்குப் போகிற மின்சார ஒயரை, பி.வி.சி. பைப்பில் கொண்டு போயிருக்கிறார்கள். இதைச் சுவருக்குள் கொண்டு போயிருக்க வேண்டாமா? வருகிற திருடன் ஒயரைக் 'கட்' பண்ணுவது சுலபமான விஷயமில்லையா?

* தினமும் பூஜைக்காக ஒரு தடவை லாக்கர் திறக்கப்படும் என்னும்போது, அது பாதுகாப்புக்குக் குந்தகமான விஷயமில்லையா? சாவிகள் வைத்திருக்கிற மூன்று பேரும் தினம் தினம் கோயிலுக்கு வர முடியுமா? அவர்கள் வர முடியாது போனால், வேறு யார் மூலமாவது சாவி அனுப்புவதோ, கோயிலிலேயே சாவிகளைக் கொடுத்து வைப்பதோ ஆபத்து இல்லையா?

* அந்தச் சிலைகளை உற்சவத்தின்போது அந்தந்த ஊர்களுக்கு போலீஸ் பாதுகாப்புடன் அனுப்பப் போகிறார்களாம். சில மலை விழுங்கி ஆசாமிகள் சிலையையே மாற்றி விடுவது இதிலொன்றும் சாத்தியமில்லாத விஷயமில்லையே?

* சிலைகளைப் பாதுகாப்பாக வைக்க வேண்டும் என்ற அடிப்படை நோக்கத்தைப் பழுது சொல்ல முடியாது என்றாலும் அவற்றை அவற்றுக்கு உரிய இடத்தில் வைத்துத் திறம்படப் பாதுகாப்பதுதான் முறை. இந்தப் புதிய திட்டத்தினால் அந்தந்த ஊர் மக்களுக்கு தங்கள் தங்கள் கோயிலின் சாந்நித்தியம் பாதிக்கப்படுவது போலவும் எதையோ இழந்து விட்டது போலவும் எண்ணம் ஏற்பட வழியுண்டு. மதங்கள் விஷயத்தில் மரபுகளை மீறுவது நல்லதல்ல. ஹிந்து மதத்தைத் தான் இப்படி இஷ்டத்துக்கு வளைக்கிறார்கள் என்ற பேச்சுக்கும் இடமளிக்கிறது.

— நமது நிருபர்கள்

தகுதியிருந்தால் தாம்பூலம்

இருபத்தி ஓராம் நூற்றாண்டு —

மேட்ரிமோனியல் பகுதியில் இப்படியொரு வித்தியாசமான விளம்பரம் வெளியாகியிருந்தது.

பதினெட்டே வயது நிரம்பிய பட்டதாரியான ஓர் அழகிய பெண்ணுக்கு எல்லா வகையிலும் பொருத்தமுள்ள மணமகன் தேவை. அன்பளிப்பு ரூபாய் இரண்டு லட்சம். நேர்முகத் தேர்வு மூலமே மணமகன் தேர்ந்தெடுக்கப்படுவார். விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும். தபால் பெட்டி எண்: 1234.

சென்னை மாநகரவாசிகளின் பெரும்பாலோர் கவனத்தை இது சூறையாடியது. அங்கங்கே வரதட்சணையைப் பற்றிப் பட்டிமன்றம் நடந்து கொண்டிருக்கும்போது, இப்படியொரு விளம்பரமா என்று பெண்ணைத் தேடி அலையும் தாய்மார்கள் பிரமித்துப் போயினர்!

பளீர் என்று விழுந்த அறையில் அந்தப் பத்து வயதுச் சிறுவனின் கன்னம் அந்தி நேரத்து வானமாய்ச் சிவந்தது. "ராஸ்கல்! தண்ணிய சிந்தாம கொண்டுட்டு வரத் தெரியாத பேமானி. தோலே உரிச்சிடுவேன்! எந்த வேலையிலும் பயம் இருக்கணும். போடா தூர!"

பல கோடிகளுக்கு அதிபதியான டாக்டர் குருமூர்த்திதான் வேலைக்காரச் சிறுவனை இப்படி அதட்டிக்கொண்டிருந்தார். அவனுக்குப் பயத்தில் கைகால்கள் வெடவெடவென்று நடுங்கின.

'ஹெரால்ட்ராபின்'ஸில் கண்களைப் பதித்திருந்த சாருலதா இதைக் கவனிக்காமலில்லை. மிடறு விழுங்கினாள். அப்பாவின் முரட்டு சுபாவமும், கண்டிப்பான போக்கும் அவளைத் திகைக்க வைத்தது. 'அடேயப்பா! இப்படியும் ஒரு மனிதனா?' என்று நினைத்துக் கொண்டாள். அன்றுவரை தன் காதல் விவகாரத்தை அவரிடம் எப்படி ஆரம்பிப்பது என்று மாதக் கணக்காய் யோசித்துக் கொண்டிருந்தவள் மிகவும் பேதலித்துப் போனாள்.

அவர் அதிகமாகப் பேசமாட்டார். யாரையும் எளிதில் நம்பிவிட மாட்டார். இது மட்டுமில்லை, அவர் பேச்சுக்கு யாரும் பதில் பேசக் கூடாது. அவர் போட்டதுதான் சட்டம். அத்திப்பூத்தாற்போல் என்றைக்கோ ஒருநாள் அடையாறில் உள்ள தன் சொந்த பங்களாவுக்கு விஜயம் செய்யும் அவர் இப்போது ஒரு முக்கிய வேலையாக வந்துள்ளார், சாருலதாவின் 'திருமணத்தைச் சீக்கிரம் நடத்தி விடுவதென.

கிட்டத்தட்ட ஆயிரம் கடிதங்கள் வந்திருந்தன. டாக்டர் குருமூர்த்தி அவற்றைக் கொண்டு வந்து மேஜை மீது குவித்தார். மகளை அழைத்தார்.

"சாரு இங்கே வாம்மா."

அவள் வந்து மௌனமாய் நின்றாள்.

"பார்த்தியா எவ்வளவு கடிதங்கள் வந்திருக்கு!" என்றார் உற்சாகமாய். "இதுல ஜெனுயினா பத்துக் கடிதத்தைப் பொறுக்கி வை. நான் வந்து பார்க்கறேன். இதுக்கு மட்டும் உனக்கு ஒரு வாரம் அவகாசம் தர்றேன்."

"அப்பா....."

"இதப் பார் காதல் கீதல்னு ஆரம்பிக்காதே! ஐ ஹேட் தட். சொன்னதைச் செய்! இன்னும் நிறையக் கடிதங்கள் வரும். அதையும் பார்த்து வை."

அதற்கு மேல் அவள் வாயைத் திறக்கவில்லை. மேற்கொண்டு பேசினால் என்ன நடக்கும் என்பது அவளுக்கும் தெரியும். அமைதியாய் அவரைப் போர்டிகோ வரை தொடர்ந்தாள்.

"டிஸ்ட்ரிபியூட்டர் மாசிலாமணி வீட்டு வரைக்கும் போயிட்டு வரேன். நான் சொன்னதை மனசுல கவனம் வெச்சுக்க. டிரைவர் வண்டியை எடுப்பா" பொசுக்கென்று கார் கதவைத் திறந்துக் கொண்டு உள்ளே பாய்ந்தார்.

சாருலதா தேர்ந்தெடுத்த பத்துப் பேரும் மிடுக்காக உடை உடுத்திக் கொண்டு கூடத்தில் தயாராய்க் காத்திருந்தனர். எல்லோருக்கும் நெஞ்சில் ஒருபக்கம் ஆதங்கமாகவும் இன்னொரு பக்கம் அச்சமாகவும் இருந்தது. குருமூர்த்தி அமர்ந்திருந்த அறையையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டனர்.

"பிரகாஷ் ப்ளீஸ் கம் இன்."

உள்ளிருந்து கணீரென்று குரல் கேட்டதும் பிரகாஷ் எழுந்து சென்றான். அவனை வரவேற்றுக் கைகொடுத்தார் குருமூர்த்தி. ஒருமுறை அவனை 'ஏற இறங்கப் பார்த்துவிட்டு ஆரம்பித்தார்.

"உட்காருங்க, பெண் பார்க்க வர்றது இதுதான் முதல் தடவையா?"

"இல்லே, நான்காவது."

டாக்டர் மோவாயைத் தடவினார். "ஓ...!"

அவன் அனுப்பி வைத்திருந்த பயோடேட்டாவைக் கவனமாய்ப் புரட்டிப் பார்த்தார். "ரைட், இதுக்கு முன்னே பார்த்த இடங்களெல்லாம் உங்களுக்கு ஏன் அமையாம போச்சுன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?"

மதுமனே

''ஷ்யூர். அது வந்து.... அழகிருக்கும், படிப்பிருக்காது; படிப்பிருக்கும் அழகிருக்காது; எல்லாம் இருக்கும், ஆனா அந்தஸ்து இருக்காது.''

''ஜஸ்ட், இப்ப நீங்க எதுக்கு முக்கியத்துவம் கொடுத்து இங்கே வந்திருக்கீங்க.''

அவன் ஒருகணம் தடைபட்டான். பிறகு மெள்ளச் சொன்னான்.

''நான் எதிர்பார்த்த எல்லா அம்சங்களும் இருக்குன்னுதான்.''

''ஓ.கே. நான் இப்ப ஒரு முக்கியமான கேள்வி கேட்கப் போறேன்.''

''கேளுங்க சார்.''

''திடீர்னு உங்களுக்கு வேலை போயிடுச்சுன்னு வைச்சுக்குங்க. என் பெண்ணை எப்படிக் காப்பாத்துவீங்க?''

''என்ன சார் இது? இவ்வளவு பணம் நீங்க அன்பளிப்பா தரும்போது அதை வைச்சு அவங்களை நான் காப்பாத்த் முடியாதா என்ன?''

''அதாவது உங்க சொந்த முயற்சியால எதுவும் செய்ய முடியாதுன்னு சொல்றீங்க. அப்படித்தானே?''

''சா.....ர் நீங்க.....''

''கடைசியா ஒரு கேள்வி'' என்று அவனை ஸ்தூலமாய்ப் பார்த்தார். ''உங்களுக்கு நீச்சல் தெரியுமா?'' அசடு வழிந்தான் பிரகாஷ்.

பெண்ணுக்கு பாடத் தெரியுமா என்று கேட்பது போய் இப்போது ஆணுக்கு நீந்தத் தெரியுமா என்று கேட்கும் காலம் வந்துவிட்டதா!

'தெரியாது' என்ற பதிலைச் சொல்ல அவன் மனம் ஒப்புக் கொள்ளவில்லை. நிலைமையை அனுசரித்து திவ்யமாய் புளுகினான்.

''தெரியும்.''

''குட், வாங்க போகலாம்.''

பிரகாஷ் ஆவலாய் எழுந்தான். பெண்ணைக் காண்பிக்கத்தான் அழைக்கிறார் போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டு அவரைப் பின்தொடர்ந்தவன் சரேலென்று அதிர்ந்து போனான். காரணம் அவனை அவர் அழைத்துச் சென்ற இடம் வீட்டுக்குப் பின்னே உள்ள ஆழமான சின்னதொரு நீச்சல் குளம்.

''ம்! சட்டையைக் கழட்டிட்டுப் பிரமாதமா ஒரு டைவ் அடிங்கப் பார்க்கலாம்.''

''சார்.''

''என்ன ஆழம் போறுதா?''

''அதில்லை சார், எனக்கு ஜலதோஷம்





பிடிச்சிருக்கு.''

''கவலைப்படாதீங்க. நானொரு டாக்டர். உங்களுக்கு எதுவும் ஆகாம பார்த்துக்கிறேன்.''

அதற்குமேல் அவன் சால்ஜாப்பு பலிக்கவில்லை. உண்மையைச் சொல்லிவிட்டான். ''சார், கோவிச்சுக்காதீங்க. எனக்கு நீச்சல் வராது. பொய் சொல்லிட்டேன்.''

அவர் இயல்பாய்ச் சிரித்தார். அதில் கோபம் இழையோடியிருந்தது.

''ஆரம்பத்திலேயே பொய்யா ஆக வாழ்க்கையில வழுக்கி விழுந்துட்டா எழுந்திரிக்கத் தெரியாது. தண்ணில் தவறி விழுந்துட்டாலும் நீந்தத் தெரியாது. ஐயாம் ஸாரி மிஸ்டர் பிரகாஷ். என் பெண்ணைப் பார்க்க நீங்கதகுதியை இழக்கறீங்க.யு ஆர் டிஸ்க்வாலிபைட். யு கென் கோ.''

இரண்டாவதாக சதீஷ் அழைக்கப்பட்டான்.

மெதுவ்வாய் நடந்து வந்து அவருக்கொரு வணக்கம் சொல்லிவிட்டு உட்கார்ந்தான்.

''உங்களுக்கு வயசு என்ன ஆகிறது மிஸ்டர் சதீஷ்.''

''இருபத்தெட்டு.''

''ஐஸீ. இதுக்குள்ளவே இவ்வளவு முடி கொட்டிப் போயிருக்கே, இந்த போட்டோல இருக்கிறது நீங்கதானே?'' அவனுடைய கடிதத்துடன் இணைக்கப்பட்டிருந்த புகைப்படத்தை எடுத்து அவனுக்குக் காண்பித்தார் குருமூர்த்தி.

''ஆமாம் சார்.''

''இந்தப் போட்டோவுக்கும் உங்களுக்கும் ரொம்ப வித்தியாசம் இருக்கே.''

அவன் ஒருகணம் நிதானித்தான். பிறகு குரலை சற்று தாழ்த்திக் கொண்டு தயங்கித் தயங்கிச் சொன்னான். ''சார் இது அஞ்சு வருஷத்துக்கு முன்னால எடுத்தது.''

குருமூர்த்தி அவனை ஆழமாய்ப் பார்த்தார். ''நான் சமீபத்திய போட்டோவைத் தானே கேட்டிருந்தேன்?''

''சார் அது வந்து....''

''மிஸ்டர்சதீஷ்.ஆரம்பத்திலேயேஎன்னை முட்டாளாக்கணும்னு திட்டமிட்டிருக்கீங்க. இப்பவே இப்படிச் செய்ற நீங்க, நாளைக்கு எதுக்கும் துணிவீங்க, ஐநோ, ஐயாம் ஸாரி. நீங்க என் மகளை பார்க்கிறதுக்கு இல்லை. யு ஆர் நாட் செலக்டட். நீங்க போகலாம்.''

''ஷா ஜகான் தாஜ்மகால் கட்டினார்! ராஜராஜ சோழன் பெரிய கோயிலைக் கட்டினார்; நம்ம ராஜா என்ன கட்டறார்?''

''கப்பம் கட்டறாரே!''

— கேழ். அ. கதிர்வேல்.



டாக்டர் குருமூர்த்தி நம்பிக்கை இழந்தார். 'ஏன் வருகிற பையன்கள் எல்லோரும் இப்படி உதவாக்கரையாக இருக்கிறார்கள்?' என்று அவருக்குக் கவலையாக இருந்தது. சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்ற வைத்தார். கடைசியாக ஒரு பெயரை அழைத்தார்.

''புவனச் சந்தர்.''

இருபத்திரெண்டே வயதில் ஒருவன் ஸ்மார்ட்டாய் உள்ளே பிரவேசித்தான். இரு கைகளைக் கூப்பி அடக்கமாக நமஸ்கரித்து விட்டு அவரெதிரே உட்கார்ந்தான். முதல் பார்வையிலேயே குருமூர்த்திக்கு அவன் மீது நல்ல அபிப்ராயம் ஏற்பட்டது.

'இவனிடம் நல்ல மேனர்ஸ் இருக்கிறது' என்று நினைத்துக்கொண்டார். அவனுடைய பயோடேட்டாவைப் புரட்டிப் பார்த்து விட்டு ஆரம்பித்தார்.

''கார் ஓட்டத் தெரியுமா?''

''தெரியும்.''

''வாங்க.''

போர்டிகோவில் டொயோட்டா பளபளத்தது. கதவைத் திறந்துக் கொண்டு புவனச் சந்தர் டிரைவர் சீட்டில் அமர, குருமூர்த்தி அவன் பக்கத்தில் அமர்ந்தார்.

''ம் ஸ்டார்ட் பண்ணுங்க.''

ஸ்டார்ட் செய்தான். கார் சற்று முன்னுக்குச் சென்றதும் இடது பக்கமாய் போகச் சொல்லி சைகை காண்பித்தார்.

''இப்படிப் போங்க.''

புவனச் சந்தர் காரை அலுங்காமல் குலுங்காமல் ஓட்டினான். அறுபதுக்கு மேல் வேகத்தைக் கூட்டவில்லை. அவரது திருஷ்டி பூராவும் அவன் மீதே இருந்தது. அங்கங்கே கார் சிக்னலில் நிற்கும்போதெல்லாம் அவன் அனுசரிக்கும் முறைகளைக் கண்ணும் கருத்துமாய்க் கவனித்து வந்தார். அது அவருக்குத் திருப்தி தராமல் இல்லை. அரை மணி நேரத் தொடர்ச்சியான ஓட்டத்திற்குப் பின், கார் நடு ரோட்டில் காலை வாரிவிட்டது. பதைத்துப் போனான் புவனச் சந்தர்.

குருமூர்த்தியின் உதடுகளில் ஆபத்தான புன்னகை அரும்பியது. ''வண்டியை ஓட்டும் போது 'ப்யூயல் கேஜை' கவனிக்கிறதில்லையா? தூரப் பயணத்துல, அதுவும் இரவு நேரத்துல என் பெண்ணை அழைச்சுட்டுப் போகும்போது இப்படி ஆச்சுன்னா என்ன பண்ணுவீங்க?''

அவன் அப்போதுதான் உஷாரானான். ப்யூயல் கேஜை கவனித்தான். முள் தலையைத் தொங்கப் போட்டிருந்தது. பதிலேதும் சொல்லாமல் இறங்கி டாங்கைத் திறந்தான். ஏ.ஸி. பம்பை அழுத்திப் பார்த்தான். பயனில்லை. கடைசிமுயற்சியாக டாங்கை மூடிவிட்டு பின்னாலே இருந்த பெட்ரோல் டாங்கின் மூடியைத் திறந்தான். வாயை வைத்து 'தம்' பிடித்துக் காற்றை ஊதினான். அதன்பிறகு கார் மீண்டும் உயிர் பெற்றது.

குருமூர்த்தி உண்மையிலேயே வியந்து போனார். 'இப்படியும் ஒரு வழியிருக்கிறதா?'

அருகாமையிலுள்ள பெட்ரோல் பங்க் வரை கார் சமாளித்தது.

புதுக் கவிதைப் போட்டி—7

21.12.86 கல்கி இதழில் கலைநயம் மிக்க அட்டைப்படம் ஒன்று இடம்பெறுகிறது. பிளஸ் டூ மற்றும் கல்லூரி மாணவர்கள் 21.12.86 கல்கி அட்டைப்படத்துக்குப் பொருத்தமாக ஒரு புதுக்கவிதை எழுதி அனுப்புங்கள். அட்டைப்படக் கட்டுரைக்கும் உங்கள் கவிதைக்கும் தொடர்பு இருக்க அவசியமில்லை. கற்பனையைத் தட்டிவிட்டால் அட்டைப் படமே உங்களிடம் நிறைய கற்பனையைத் தோற்றுவிக்கும்.

* 'போஸ்ட் கார்டின் ஒரு பக்கத்தில் எட்டு — பத்து வரிகளுக்குள் உங்கள் கவிதையை அடக்குங்கள்.
* கார்டின் மறுபக்கம் கல்லூரி அல்லது பள்ளி முத்திரையைப் பெற வேண்டும்.
* உங்கள் பெயரையும் விலாசத்தையும் தெளிவாகக் குறிப்பிடுங்கள்.
* விலாசப் பகுதியில் புதுக் கவிதைப் போட்டி —7 என்று மறவாமல் குறிப்பிடுங்கள்.
* கவிதைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி: 29:12.86.

முதல் பரிசு: ரூ. 100/—

இரண்டாம் பரிசு: ரூ. 25/— தவிர ஆறு மாதங்களுக்குக் கல்கி இலவசம்.

தவிர, பிரசுரமாகும் அனைத்துக் கவிதைகளுக்கும் சன்மானம் உண்டு.

பங்களாவிற்கு வந்தபிறகும் புவனச் சந்தருக்கு வியர்த்துக் கொண்டிருந்தது. குருமூர்த்தி ஏர்கண்டிஷனை ஆன் செய்தார். அறைக்கு குளிர்ந்த பானம் வந்தது.

''ரிலாக்ஸ் எ லிட்டில்.''

கொஞ்ச நேரத்திற்குப் பிறகு எல்லோரிடமும் கேட்ட அதே கேள்வியை அவனிடமும் கேட்டார்.

''திடீர்னு உங்களுக்கு வேலை போயிடுச்சுன்னு என்ன பண்ணுவீங்க? எப்படி என் மகளை காப்பாத்துவீங்க?''

அவன் பதில் சொல்லத் தயங்கவில்லை. ''உழைப்பேன்'' என்றான். ''எனக்குநிறையக் கை வேலைகள் தெரியும்.''

அவனுக்கு வியர்ப்பது நின்றிருந்தது:

''கமான் லெட்ஸ் தேவ் டின்னர்.'' அவனை டைனிங் ஹாலுக்கு அழைத்துச் சென்று உற்சாகமாய்க் குரல் கொடுத்தார்.

''சாரு வாம்மா.''

அடுத்த நிமிடம் சாருலதா அன்ன நடை போட்டுக் கொண்டு வந்து அவனெதிரே நின்று இரு கைகளையும் கூப்பி அடக்கமாய் நமஸ்கரித்தாள்.

அவளுடைய சிரம் தாழ்ந்திருக்க, அவன் அவளை உரித்துத் தின்று விடுவதுபோல ஏற இறங்கப் பார்த்தான். சங்க கால இலக்கணத் தன்மையுடன் அழகுகள் இழைந்திருக்கப் பார்வையை திசை திருப்ப முடியாமல் தத்தளித்துப் போனான்.

சாப்பாட்டு மேஜையில் எல்லா வகையறுக்களும் தயாராக இருந்தன. அவனும் குருமூர்த்தியும் எதிரெதிரே உட்கார்ந்து கொள்ள சாருலதா வேண்டா வெறுப்பாய் உணவைப் பரிமாறினாள்.

''ஹௌ ஈஸ் மை டாட்டர்?''

பட்டவர்த்தனமாய்க் கேட்டார் குருமூர்த்தி.

''பியூட்டிஃபுல்.''

அவர் பூரிப்படைந்தார். முகத்தில் நிறைவு தெரிந்தது. ''மை டாட்டர் ஈஸ் ஓவர். கண் இமை போல வைச்சுக் காப்பாத்தக் கூடிய திறமையுள்ள ஒருத்தனை என் மகளுக்கு வாழ்க்கைத் துணைவனாகத் தேர்ந்தெடுத்துட்டேன். இதுக்கு மேலே ஒரு தகப்பன் செய்யக் கூடியது ஒண்ணுமில்லை. உங்க அபிப்ராயம்?''

அவன் பதிலேதும் சொல்லாமல் மௌனிதாய் முறுவலித்தான்.

ஓரிரு நிமிடங்களுக்குப் பிறகு ஓரமாய் ஒதுங்கி நின்றிருந்த சாருலதாவை மீண்டும் அழைத்தார். அவள் வந்தாள். அப்பாவும், புவனச்சந்தரும் வீட்டுக்குப் பின்னே இருந்த தோட்டத்தை நோக்கி நடக்கப் பின்தொடர்ந்தாள். குருமூர்த்தி வாசலிலேயே நின்று கொண்டார்.

''நீயும் இவரும் அஞ்சு நிமிஷத்துக்குப் ப்ரீயா கலந்து பேசிட்டு வாங்க. உங்களுக்கும் ஒரு ஐடியா வரணும். நான் இங்கேயே நிற்கறேன். ம். போயிட்டு வாங்க.''

''அப்பா....''

''பேசப்படாது. சொன்னதைச் செய். 'டன்'னு 'டன்.'''

அவள் அதற்கு மேல் பேசவில்லை. அவனுடன் தயங்கித் தயங்கி நடந்தாள். கொஞ்ச தூரம் நடந்து சென்றதும் இருவரும் அவர் காதில் விழாதவாறு பேசிக் கொண்டனர்.

''சாரு'' என்றான் புவனச் சந்தர். ''எப்படியோ நம்ம காதல் சக்ஸஸ் ஆயிடிச்சில்லே?''

''எல்லாம் உங்க சாமர்த்தியம்.''

''இல்லை,- உன்னோட சாமர்த்தியம். ஏற்கெனவே நீ உங்கப்பாவைப் பத்தி ஒண்ணு விடாமல் சொன்னதால்தான் அவருக்கேத்த மாதிரி என்னை நான் தயார் படுத்திக்க முடிஞ்சுது. எனவே இந்த முயற்சில உனக்கும் பங்குண்டு.''

''கல்யாணத்தை அடுத்த மாசமே வைச்சுக்கிடலாம்னு சொல்லுங்க.''

''அவ்வளவு அவசரமா?''

''ச்சீ!''

''உங்கப்பா, பார்க்கலைன்னு ஒரு கிஸ் கொடேன்.''

''ஐயையோ, அஞ்சு நிமிஷம் ஆயிப்போச்சு, சமர்த்தா திரும்புங்க.''

மோகம் என்பது இதுதானோ?

7

உஷா சுப்பிரமணியன்

அந்தக் கோயில் மண்டபத்திலே மொத்தம் இருபது பேர்களே இருந்தனர். நாகம்மாப் பாட்டி, பேரன் சகிதம் மெல்லச் சாய்ந்து, சாய்ந்து நடந்துவர, ஏற்கெனவே அமர்ந்திருந்த பலரும் எழுந்து நின்றார்கள்.

"நீங்களெல்லாம் ஏன் எழுந்துக்கறேள்?" என்றவாறு பாட்டி தன் ஸ்தூல சரீரத்தைப் பேரன் உதவியுடன் சற்றே உயரமாகப் படி போல் அமைந்திருந்த கருங்கல் மீது சாய்த்துக் கொண்டாள்.

"ஞானம், கிருஷ்ணனோட அம்மா வந்திருக்காங்க. வா நமஸ்காரம் செய்துவிட்டு வரலாம்" பிராகாரத்தைச் சுற்றிக் கொண்டிருந்த சுந்தரம் ஞானத்தை அழைத்தார். மேல் சட்டையில்லாத அவர் உடம்பில் சந்தனமும், திருநீறும் பளபளத்தது. தோளில் இருக்க வேண்டிய துண்டு இடுப்பில் கட்டியிருந்தும் அவர் தோற்றத்தில் ராஜ கம்பீரம் தெரிந்தது. பளபளவென மஞ்சள் பூசிக் குளித்து நெற்றியில் குங்குமமும் உடலில் கவரிங் நகைகளும், சாதாப் புடைவையுமாக இருந்தாலும், ஞானத்தையும் அவரையும் சேர்த்துப் பார்த்தால் ஒரு தேஜஸ் தெரிந்தது.

"அம்மா, நமஸ்காரம் செய்யறேன்" சுந்தரம் மூதாட்டியின் காலைத் தொட்டு ஒற்றிக் கொண்டார். ஞானம் குனியுமுன் நாகம்மாள் தடுத்தாள். "பகவான் சந்நிதியிலே அவனுக்குப் பண்ணுங்கோ போறும். தம்பதி சமேதரா சிவன், பார்வதி மாதிரி உங்களைப் பார்த்தால் மனசு சந்தோஷமா இருக்கு. என்னப்பா, சுந்தரம் என் பேரன் ஸ்கூலிலே நன்றாகப் படிக்கிறானா?"

"சந்திரசேகரனுக்கென்ன நல்ல பிள்ளை, அற்புதமாப் படிக்கிறான் மாமி."

"அந்த ஒரு வாக்கு போறும்பா. பௌராணிகர் கதை சொன்னப்புறம், நீயும் நாலு பாட்டுப் பாடு. உன் குரலைக் கேட்டு எத்தனை வருஷமாச்சு. நல்ல பேச்சையும், சங்கீதத்தையும் கேட்டுக் கொண்டு கண் முழிச்சா ரொம்பப் புண்ணியம். நீ என்னடி சொல்றே, ஞானம்?"

"நம்ம ஊர்ப் பக்கங்களிலே நாம் சிவராத்திரின்னு நடு ஜாமம் வரைக்குமாச்சும் கோயில்லே கழிக்கிறோம். மெட்ராஸ்ல ராத்திரி முழுக்க மூணு ஷோ தியேட்டர்ல படம் போடறான். படத்துக்குப் படமாச்சு, சிவராத்திரிக்குக் கண் முழியுமாச்சு."

"சிவ, சிவா.... பகவான் காரியத்துக்குக் கூடவா சினிமா?"

"இல்லீங்க மாமி, அங்கேயும் ராப்பூராப் பக்திப் படம்தான் போடுவாங்களாம்."

"சினிமா பக்தியெல்லாம் தெரியாதாக்கும். நடு நடுவிலே, உடம்பிலே துணியில்லாத மேனகை ஆட்டம், தேவலோகத்து டூயட் பாட்டு எல்லாம் காண்பிப்பா. இந்த சினிமா வந்துதான் லோகத்திலே ஜனங்களுக்கு கடவுள் பக்தி, பெரியவா, சின்னவா மட்டு மரியாதை எல்லாமே போயிடுத்து...." ஔவையார் படத்துக்குப் பிறகு சினிமாவே பார்த்திராத பாட்டி தன் 'லாஜிக்'கை நீள, நெடுக்கச் சொல்ல, பின்னால் நின்ற சந்திரசேகரன் புன்னகை புரிந்தான்.

ஞானம் ஏதாவது பதில் சொல்லிப் பாட்டியை மேலும் கிளறப் போகிறாளோ என்ற பயத்தில், சுந்தரம் பேச்சை மாற்றினார். "கிருஷ்ணன் லெட்டர் போட்டிருக்கான் மாமி. உங்களைக் குவெய்த்துக்கு வரச் சொல்லி எழுதியிருந்தானாம். நீங்க வர மறுத்துட்டீங்களாமே...."

"வயசுக் காலத்துலே என் கொண்டைக்கு எதுக்குடா பூ?"

"கிருஷ்ணன் புவனேஸ்வரியை சந்திரசேகரனோட விடுமுறைக்கு அனுப்பிச்சுக் கொடுக்கச் சொல்லி எழுதியிருக்கிறான்."

பாட்டி சிறிது நேரம் யோசித்தாள். "அந்தக் காலத்திலே எல்லாம் வயசுக்கு வந்துட்டா பெண்களை வெளியிடத்துக்கு அனுப்ப மாட்டா. இப்போ எல்லாம் மாறிவிட்டது. அவா ஸ்கூல், காலேஜுக்குப் போகல்லியா... கொழந்தை போயிட்டு வரட்டும். நீயும் கிருஷ்ணனும் அந்த நாள்லேருந்து இந்த நாள் வரைக்கும் கூடப் பொறந்தவாளாட்டம் பழகறேள். ஒம் பொண்ணு, புவனாக் குட்டி மேல் கிருஷ்ணனுக்கும் சுமதிக்கும் ரொம்ப ஆசை. எங்கண்ணே பட்டுடும்.... புவனாக் குட்டி படு துறுதுறுப்பு, சமத்து. சங்கீதத்திலே நல்ல வித்வத்து, நீ குழந்தைகளை மெட்ராஸ் வரைக்கும் போய் ஏத்தி விடுவியோல்லியோ?"

"ஆமாம் மாமி."


"ம்.... கொழந்தைகள் ரெண்டுக்கும் ரெண்டுங்கெட்டான் வயசு. நீ விவரமா எல்லாம் ஒம் பொண்ணுக்குச் சொல்லித் தந்து அனுப்புமடி ஞானம். நம்ம குடும்பங்களிலே இருக்காதுன்னாலும், ஏதும் தப்புத் தண்டா நடந்துடக் கூடாதுல்ல பாரு...."

சட்டென சந்திரசேகரனுக்குக் கோபம் வந்தது. சில சமயங்களில் பாட்டி ஏனிப்படி

நாசூக்கே இல்லாமல் பேசுகிறாள். அவனுக்கும், புவனாவுக்கும் நடுவில் என்ன தப்புத் தண்டா நடந்துவிட முடியும். பாட்டியின் பேச்சுக்கு மன்னிப்புக் கேட்பது போல் சுந்தரத்தை நிமிர்ந்து பார்த்தான். அவர் உள்ளே வரும் சிவப்புச் சால்வை போர்த்திய பௌராணிகருக்கு வணக்கம் சொல்லிக் கொண்டிருந்தார்.

பௌராணிகர் அற்புத நாட்டிலிருந்த பாபியான ஒரு வேடன் கதையுடன் துவங்கினார். ''ஒருநாள் வேடன் நாயை அழைத்துக் கொண்டு கானகம் சென்றான். அன்று மாக, பல்குண மாதங்களுக்கு இடையில் வரும் கிருஷ்ணபட்ச சதுர்த்தசி. வேட்டையாட எதுவும் கிடைக்காத அவன், தாகத்துடன், குளக்கரைப் புதரில் மறைந்து கண் விழித்திருந்தான். அருகிலிருந்த சிவலிங்கத்தை அவன் கவனிக்கவில்லை. ஆனால் புதரில் நுழையும்போது அவன் பக்கத்திலிருந்த மரத்தில் இடித்துவிட, அந்த வில்வ மரத்து இலைகள் லிங்கத்தின் மீது உதிர்ந்தன. வேடன் குளத்திலிருந்து கைநிறைய் நீர் எடுத்து வரும்போது சில துளிகள் லிங்கத்தின் மீதும் விழுந்தது. நீர் எடுக்கும்போது கீழே போட்டிருந்த பாணத்தை எடுக்க வேடன் மண்டியிட்டுக் குனிந்தபோது அது லிங்கத்துக்கு நமஸ்காரமாயிற்று. இப்படியாக வேடன் அர்ச்சனை, அபிஷேகம் நமஸ்காரம் முடித்துக் காலையில் வீடு திரும்பி, மனைவி கொடுத்த அன்னத்தைப் புசிக்க, அது பாரணையாயிற்று. சில காலத்திற்குப் பிறகு யமனுடைய சேவகர்கள் அவனைப் பாசத்தால் கட்டி இழுத்துச் சென்றபோது சிவகணங்கள், யமதூதர்களுடன் போரிட்டு அவனை விடுவித்தனர். இவ்வாறு அறியாமலே செய்த சிவபூஜையின் பலனை ஸர்வேஸ்வரர் தேவிக்குஎடுத்துரைத்ததாக பிரம்மா முனிஸ்ரேஷ்டர்களுக்குக் கூறினார்.'' தொடர்ந்து பௌராணிகர் வில்வ இலையால் அர்ச்சனை செய்வதன் மகிமையையும், விரத மகாத்மியத்தையும் சிவானுக்ரகம் பெற்று மறுவம்சத்தில் முசுகுந்த சக்ரவர்த்தியாகப் பிறந்த குரங்கின் கதையையும் சொன்னார்.

சந்திரசேகரன் இதே கதைகளையும், இதே சொற்பொழிவையும் வருடா வருடம் கேட்கிறான். ஒரு வார்த்தையில் கூட மாறுதலில்லை. வரவரக் கேட்கவே அலுப்பாக உள்ளது. அதோடு அவன் மனத்தில் ஒரு கேள்வியும் எழுந்தது. வாதப் பிரதிவாதங்களைக் கேட்டுப் பழகி விஞ்ஞான பூர்வமாக விஷயத்தை ஆய்வு செய்து ஏற்கச் செய்யும் கல்வியுடன், இத்தகைய கதைகள் எவ்வளவு முரண்படு



அருள்வாக்கு



மனிதனின் உடம்புக்கு ஆரோக்கியம் தருவது. புத்திக்குப் படிப்புத் தருவது. அவனுடைய தரித்திரத்தை நீக்கிச் செல்வச் சுபிட்சம் தருவது எல்லாவற்றையும்விட 'அவனைப் பகவானிடம் சேர்ப்பதே பேருபகாரம். நாமும் பகவானிடம் மனசைச் செலுத்தி, தியானம், பூஜை இவைகளை அநுஷ்டித்தால் தான் மற்றவர்களை இவற்றில் ஈடுபடுத்த நமக்கு யோக்கியதை உண்டாகும். அப்போது தான் நாம் செய்கிற பரோபகாரம் சக்தியோடு பலன் தரும்.

மனிதனையே தெய்வமாக நினைத்து அவனுக்குச் சேவை செய்வது சிலாக்கியம்தான். ஆனால் நாம் அப்படி நினைப்பதோடு நிற்காமல் அவனே உண்மையாகத் தன் தெய்விகத்தைக் கொஞ்சமாவது தெரிந்து கொள்ள நாம் ஆலயங்களை அவசியம் பேண வேண்டும்.

நல்லவனாவதற்குப் பக்தி தேவையில்லை என்று ஒரு வாதம். ஆனாலும் நடைமுறையில் பலவிதமான சுயநல ஆசைகளால் ஆட்டி வைக்கப்படுகிற ஜீவனைப் பரிசுத்தப்படுத்துவதற்கு பக்தியைப் போன்ற சாதனம் வேறு இல்லவே இல்லை. 'பகவான் என்று ஒருவன் சர்வ சாட்சியாகவும் சர்வ சக்தனாகவும் இருந்து கொண்டு நம் கர்மங்களுக்குப் பலன் தருகிறான்' என்கிற பயபக்தி உணர்சிதான் யுக யுகாந்தரமாக மனிதனைத் தர்ம மார்க்கத்தில் நிறுத்துவதற்குப் பெரிய ஊன்றுகோலாக இருந்து வந்திருக்கிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

கின்றன. "மகனே..... ஆண்டுக்கு ஒரு நாள் உன் மன உடல் அலைச்சல்களை நிறுத்தி, மனத்தைத் தியானத்தில் ஆழ்த்தினால் உன் உடலும், மனமும் சுத்தமாகும்" என்றால் இன்றைய தலைமுறையால் எளிதில் புரிந்து கொள்ள முடியும். மனப்பூர்வமாக நல்ல செயல்களைச் செய். செய்வதற்கு முயல் என்றால் அர்த்தமுள்ளது. கவனக்குறைவால் நடந்த அர்ச்சனை, அபிஷேகம் எப்படி மனிதனுக்கு முக்தியளிக்க முடியும்? சந்திரசேகர் மனத்தில் பல கேள்விகள் எழுந்தன. இவற்றிற்கெல்லாம் யாரிடம் பதில் கேட்பது?

பௌராணிகர் கதை முடிந்ததும்,. அபிஷேகம் ஆரத்தி நடந்து, சம்பாவனைத் தட்டு வந்தது. பாட்டி புடைவைத் தலைப்பிலிருந்து ஒற்றை ரூபாய் நாணயத்தை எடுத்துத் தட்டில் போட்டாள். மற்றபடி தட்டின் பத்து, இருபதாகப் பைசா நாணயங்களே இருந்தன. தொடர்ந்து சுந்தரம் மண்டபத்தில் ஏறி அமர்ந்தார். ஆர்மோனிய சுருதியைச் சேர்த்துக் கொண்டு, 'பித்தா பிறை சூடிய பெருமானே.....' என்று கணீர் என்ற குரலில் துவங்கினார். சேகர் மெய்மறந்து நின்றான். உயர்ந்த சுருதியில் அவர் குரல் மேல் ஸ்தாயியை எட்டும்போது அவன் உணர்வுகளில் ஒரு சமநிலை தோன்றி, மெய்சிலிர்த்துக் கண்ணீர் பெருகியது. இதுதான் இசை. சுற்றுப்புறம், கேள்வி, பதில், ஆசைகள், எதிர்பார்ப்புகள் அத்தனையும் ஓர் உயர் மட்டத்திற்கு எடுத்துச் செல்லும், பிரணவ மந்திரம். தொடர்ந்து சுந்தரம், சிவாஷ்டோத்தர சத நாமாவளியை இனிமையான ராகமாலிகையில் சிவாய நம, மஹேஸ்வராய நம, சம்பவே நம, பினாகினே நம என்று மெய்யுருகப் பாடினார்:

கச்சேரி முடியும்போது நடு ஜாமத்தைக் கடந்திருந்தது. இன்னும் சிலர் கோயில் பிராகாரத்திலேயே கூட்டமாக அமர்ந்து பஜனை செய்து கொண்டிருந்தனர். "மாமி, உங்க வீடு வரை வரட்டுமா...." சுந்தரம் நாகம்மாளைக் கேட்டார்.

"வேண்டாம்பா. உங்காத்துலே பெண் கொழந்தைகளைத் தனியா விட்டுட்டு வந்திருக்கே. எனக்குத்தான் துணைக்கு 'எம் பேரன் இருக்கானே...." என்றபடி, சந்திரசேகர் டார்ச் அடித்து வழிகாட்டப் பாட்டி தொடர்ந்தாள்.

"என்ன ஞானம், பேசாமல் வர்றே, இன்னிக்கு நான் பாடினது உனக்குப் பிடிச்சிருந்ததா?" என்றே ஒருநாள் கிடைத்த தனிமையில் சுந்தரம் நெகிழ்ச்சியுடன் கேட்டார். மனம் விட்டுப் பாடும்போது அவர் மனம் முழுவதிலும் ஓர் ஆன்ம லயிப்பு ஏற்படும். உலகம் முழுவதையும் அன்பால் அணை. நீயே அதில் ஒன்றாகக் கல, என்பது போலப் பல புரியாத உணர்வுகள் அவர் நெஞ்சை நிரப்பும். சாதாரண உலகிலிருந்து அவர் சில மணி நேரமாவது ஒரு மேம்பட்ட அனுபவத்தை உணர்வார். பொதுவாகச் சிவராத்திரி நாட்களில் அவர் குடும்பத்தினர் அனைவருடனும் சேர்ந்து கோயிலுக்கு வருவார். நடு இரவுக்குப் பிறகு வீடு திரும்பி அனைவரும் விடியும்

வரை தாயக்கட்டம் விளையாடுவார்கள். ஸ்தோத்ரப் பாடல்களைச் சேர்ந்து பாடுவார்கள். சிவராத்திரி இரவு ஒரு குடும்பப் பண்டிகை போன்ற நிறைவைத் தரும். இன்று பெண்களைக் கோவிலுக்கு அழைத்து வர முடியாத தடை ஏற்படவே, ஞானத்தை மட்டும் உடன் அழைத்து வந்திருந்தார். அவள் இப்படி மௌனமாக நடந்து வருவது அவருக்கு வருத்தத்தை அளித்தது.

''என்ன ஞானம்....''

''என்ன, என்ன.... அந்தக் கெழவி கிட்டப் புவனாவைச் சேகரோட ஊருக்கு அனுப்பறதா ஏன் சொன்னீங்க?''

''ஏன், சொன்னால் என்ன தப்பு? அவ போகப் பணம் அனுப்பறதே அவங்க பிள்ளை தானே....''

''யார் வேணா அனுப்பட்டும். வயசுக்கு வந்த பெண்ணை நான் எங்கேயும் அனுப்பப் போறதில்லே.''

''அனுப்பினாத் தப்பில்லே ஞானம். அவ்வளவு வயசானவங்க கிருஷ்ணன் அம்மாவே காலம் மாறிடிச்சுன்னு சொல்றாங்க, நீ இப்படிப் பேசறயே....''

''ஆமா.... அவங்க பேசுவாங்க. எழுபது வயசிலே, தாலியறுத்து முப்பது வருஷமாயும் மூணு காரட் வைரத் தோட்டைக் காதிலே யிருந்து அவுக்க மனசு வராதவங்க பேசுவாங்க. பிள்ளை வெளிநாட்டிலேயிருந்து ரூபா, ரூபாயா சம்பாதிச்சு அனுப்பினா மடியிலே வாங்கி முடிச்சு வச்சிக்கிட்டு என்ன வேணாப் பேசுவாங்க.''

''என்ன ஞானம் சம்பந்தமே இல்லாம பேசறே, அவங்க பணக்காரங்களாக இருக்கிறதுக்கும், புவனா ஊருக்குப் போறதுக்கும் என்ன சம்பந்தம்? அவங்க என்னிக்காச்சும் நம்மகிட்டே அவங்க பணத்தைக் காட்டியிருக்காங்களா?''

''எதுவேணா சொல்லுங்க. புவனா எங்கேயும் போகப் போற இல்லே. இனிமே, இது பத்திப் பேசினீங்க, எனக்குக் கோபம் வரும். ஆமா....''

''புவனா உன் மகள் மட்டுமில்லே. என் மகளும்தான். நான் அவளுக்குக் கிடைக்கிற வாய்ப்பை நழுவ விடப் போறதில்லே. நான் அவளை அனுப்பப் போகிறேன்'' சுந்தரம் சற்றே கோபத்துடன் சொன்னார்.

''அனுப்பிடுவீங்களா கேட்கறேன். அவ ஊரிலே இருந்தாத்தானே அனுப்புவீங்க. நான் அவளைக் கூட்டிட்டுப் போறேன்.''

''எங்கே போறே?''

''எங்கியோ போறேன். பெண்டாட்டி பசங்க, நல்லா வாழணும், நாலு நகை, நட்டு செஞ்சு போட்டுக்கணும், கௌரவமா நாலு பேர் மதிக்கிறாப்பல இருக்கணுங்கற சிந்தனை வீட்டை நடத்தற ஆம்பிள்ளைக்கு இல்லேன்னா, பொம்பிளைதான் தலையெடுத்தாகணும். மழை பெஞ்சா வீட்டுக்குள்ளாறதான் வெள்ளம் வர்றது. அதை ரிப்பேர் பண்ண வழியைக் காணோம். என்னவோ பெரிய பொண்ணு, பொண்ணுங்கறீங்களே, அவளுக்கு இந்தப் பதிமூணு வருசத்திலே ஒரு



''ஏன்யா கணக்குப் பிள்ளே, 'பையனுக்குக் கணக்குச் சொல்லித் தாய்யா'ன்னா பத்து ரூபாயிலே அஞ்சு ரூபாயைக் கணக்கிலே காட்டாதேங்கறியே....! உம்?''

— சத்யா

பட்டுப் பாவாடை எடுக்க உங்களால முடிஞ்சுதா. நாளைக்குக் கல்யாணம்னா எங்கே போய்க் கப்பரை ஏந்தறது. இல்லே ஒங்க அக்காதான் தம்பியாச்சேன்னு 'உங்க பெண்ணைச் சும்மா கட்டுவாளா?''

''ஞானம், நடு இரவிலே அக்கம்பக்கம் கேட்கறாப்பல இப்படிக் குரலெடுத்துக் கத்தாதே. என் வசதி, வாழ்வெல்லாம் இவ்வளவுதான்னு தெரிஞ்சுதானே என்னைக் கட்டிக்கிட்டே. இருபது வருசம் வாழ்ந்திட்டு இமா்னு இப்பத்தான் எனக்கு வக்கில்லேன்னு தெரிஞ்சுதா?''

''எங்காலம்தான் போச்சு. எம் பொண்ணையும் என்னை மாதிரி சாவ விடமாட்டேன். நான் புவனாவைப் பட்டணத்துக்கு அழைச்சிட்டுப் போறேன். அவள் மகா நாட்டிலே பாட்டுப் பாடப் போறா.''

''யாரைக் கேட்டு இந்த முடிவு எடுத்தே, நீ? ரெண்டு பேரும் தனியாப் பட்டணம் போகறீங்களா?''

''ஏன், 'ஊர் உலகத்திலே பொம்பிளைங்களே இல்லேயா? தமிழரசன் சம்சாரம் எங்கூட வர்றாங்க.''

''அடேடே.... சம்சாரமா.... ஊரான் பெண்டாட்டியை இழுத்திட்டு ஓடிக் குடித்தனம் நடத்தினா அவ சம்சாரமாகிவிடுவாளா? அது போகட்டும், அது அவள் பாடு. நீ இனிமேயும் புவனாவை இந்தக் கூட்டங்களிலே பாட வைக்கப் போறதில்லே.''

''நீங்க என்ன வேணாச் சொல்லுங்க. நான் போகத்தான் போவேன். அச்சாரமும் வாங்கிட்டேன்.''

''அச்சாரத்தைத் திருப்பி அனுப்பு. நம்ம குடும்பத்துப் பெண்கள் மேடையேற மாட்டாங்க. அதுவும் அரசியல் மேடை....''

''எம் பொண்ணு ஏறுவா.... அதை நீங்க தடை செஞ்சா, பெண்டாட்டியையும், பெண்ணையும் மறந்துட வேண்டியதுதான்.''

அதிர்ச்சியின் உச்ச நிலையில் செயலற்று நின்றார் சுந்தரம்.

(தொடரும்)

லட்சியங்களும், கொள்கைகளும்



"சுறுசுறுப்புக்குப் பெயர்போன, அமைச்சர் இளங்குமரனின் வீடு. டிபன் முடித்துக் கொண்டு, டைனிங் ஹாலை விட்டு வந்தவர், நேரே வரவேற்பறையை ஒட்டிப் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டிருந்த அலுவலக அறைக்குள் நுழைந்தார். அவரைப் பார்த்ததும் எழுந்து நின்ற உதவியாளன் ஹரியிடம்,

"என்னப்பா ஹரி, இன்னிக்கான புரோக்ராமை எல்லாம் ரெடி பண்ணிட்டியா?" என்று கேட்டார்!

"ரெடி பண்ணிட்டேன் சார்!" என்றவன், ஃபைலை புரட்டி ஒரு குறிப்பை, அவரிடம் கொடுக்க, "எங்கே படி, பார்க்கலாம்!" என்றார்.

"காலை 9.30 க்கு தொகுதிக்குச் சென்று, ஜனங்களின் குறைகளைக் கேட்டறிதல்; 11.30 மணிக்குச் சிலை திறப்பு விழா; 2.15 மணிக்கு முக்கியமான ஃபைல்களைப் பார்த்தல்; மாலை 5.30 மணிக்கு பொதுக் கூட்டம்!" ஒரே மூச்சில் படித்து முடித்தான் ஹரி.

சே! என்ன வாழ்க்கை இது? மெஷினைக் கூட 'ஆஃப்' செய்தால் ஓய்வெடுத்துக் கொள்ளும்! ஆனால், அதைவிட கேவலமான அவல நிலையல்லவா தனது நிலை என்று தன்னைத்தானே, நொந்துகொண்டவரின் சிந்தனையை, காலிங் பெல் அலைக்கழித்தது!


"சார்! உங்களைப் பார்க்க யாரோ ரெண்டு வி.ஐ.பிங்க வந்திருக்காங்க, உள்ளே அனுப்பட்டுமா?" என்ற ஹரியிடம்,

"அனுப்பி வை" என்ற அமைச்சர் இளங்குமரன் தனது மணிக்கட்டைப் பார்க்க, மணி காலை 9.05 ஐக் காட்டியது.

"வணக்கம் சார்" என்றபடி கூப்பிய கரங்

களுடன் அந்த இரண்டு வி.ஐ.பி.க்களும் உள்ளே நுழைந்தனர்!

"உட்காருங்க, யார் நீங்க? என்னைத் தேடி எதுக்கு வந்திருக்கீங்க?" என்ற அமைச்சர் இளங்குமரனிடம், வந்திருந்த இருவரில்



ஆர். அப்துல்சலாம்

ஒருவர், மற்றொருவரை, ""இவர் மிஸ்டர் சுந்தரேசன்! பிரபல தொழிலதிபர்!" என்று அறிமுகப்படுத்திவிட்டு, "நான் நம்ம கட்சிக்கு, மாவட்டப் பிரதிநிதியாக இருக்கிறேன்!" என்று தன்னையும் அறிமுகப்படுத்திக் கொண்டார்.

"ஆமாம், வந்த காரியம் என்ன? அதைச் சொல்லுங்க!"

"எங்க மாவட்டத்துல, கெமிக்கல் தொழிற்சாலை ஒண்ணு ஆரம்பிக்கலாம்னு இருக்கிறோம்."

"அதனால் அந்த மாவட்டத்தின் சுற்றுப்புற சூழ்நிலை கெடும்னு உங்களுக்குத் தெரியாதா? அனாவசியமாக, ஜனங்க கஷ்டப்படுவாங்களே? இந்நிலைமையிலே, உங்க மாவட்டத்துக்கு ஒரு கெமிக்கல் தொழிற்சாலை அவசியம்தானா?"

"அவசியம் இருக்கிறதாலேதான் சொல்றேன்! இவரு நம்ம தலைவருக்கு ரொம்பவும் வேண்டியவரு! கெமிக்கல் தொழிற்சாலை எங்க மாவட்டத்திலே நிறுவக் கூடாதுன்னு, ஏற்கெனவே ஊருக்குள் பலத்த எதிர்ப்பு வேறு இருக்கு."

"அதனாலே?"

"நீங்க மட்டும் கொஞ்சம் மனசு வைச்சீங்கன்னா, இந்தத் தொழிலதிபர் சுந்தரேசனுக்கு ஒரு சான்லை தரலாம்! நம்ம கட்சிக்கும் 'நிதி' கிடைக்கும்! எல்லாவற்றுக்கும் மேலாக, உங்களுக்கும்...."

"ஹரி! இவங்க ரெண்டு பேரையும், வெளியே தள்ளிக் கதவைச் சாத்து!" என்று அமைச்சர் இளங்குமரன் ஓங்கிய குரலில் கத்திய அடுத்த வினாடியே, அந்த இரண்டு சீட்டுகளும் காலியாகி விட்டிருந்தன!

இந்த விஷயத்திலே, அமைச்சர் இளங்குமரன் மிகவும் கண்டிப்பானவராகவே இருந்தார். தேர்தலுக்கு முன்பாகவே தமது மனச்சாட்சிக்கு முன் அவர் எடுத்துக் கொண்ட உறுதி மொழியே அதற்குக் காரணமாக இருந்தது. எக்காரணம் கொண்டும், இந்த 'லஞ்ச—லாவண்ய' அரக்கனைத் தம்மிடம் அண்ட விடுவதில்லை என்றும், ஜனங்களின் குறைகளைக் கேட்டறிந்து, அக்குறைகளை நிவர்த்தி செய்வதே தமது தலையாய கடமை என்றும் உறுதிமொழி எடுத்துக் கொண்டிருந்தார்! இந்த லஞ்ச—லாவண்யத்தைத் தம்மால் ஒழிக்க முடியாவிட்டால் கூட, என்ன வந்தாலும் சரி, அந்தச் 'சதி' வேலையில் தாமே சிக்குவதில்லை என்ற முடிவுடனேயே, அவர் செயல்பட்டுக் கொண்டு வந்தார்! இதனால் அவருக்கு, அந்தக் கட்சி மேலிடத்திற்குள்ளும், வெளியிலும் நாளுக்கு நாள் 'எதிர்ப்பு' வளர்ந்து கொண்டு வந்தது தான் மிச்சம்! இந்த எதிர்ப்புகளுக்கு எல்லாம் அவர் கொஞ்சம்கூட அசைந்து கொடுப்பதாகத் தெரியவில்லை!

கொஞ்ச நேரத்திற்கு முன் நடந்த சம்பவம் பற்றி ஒன்றும் கண்டு கொள்ளாதவர் போல, இட்டமிட்டபடி தனது அன்றைய முதல் வேலையாகத் தனது தொகுதிக்குச் செல்ல ஆயத்தமானார்!

அமைச்சர் இளங்குமரனின் வீட்டிற்கு சென்ற அதே இரண்டு பேர், இப்போது கட்சி மேலிடத்தின் முன்பாகக் கைகளைக் கட்டிக் கொண்டு பவ்வியமாக நின்று கொண்டிருக்க, அந்த மாவட்டப் பிரதிநிதி மட்டும் தனது வாயை திறந்தான்!

"தலைவரே! நீங்க அனுப்பியதாகச் சொல்லியும்கூட அந்த அமைச்சர் இளங்குமரன், எங்களை அடிச்சு விரட்டாத குறையாக அனுப்பி விட்டார்!"

"ஓ..... அவனுக்கு என்னையே எதிர்க்கிற அளவுக்குத் துணிச்சல் வந்துவிட்டதா?"

"நம்ம கட்சி வளர்ச்சி நிதிக்கு, உதவி கிடைக்கும்னு சொல்லியும் முடியவே முடியாதுன்னு மறுத்துவிட்டார் தலைவரே!"

"சரி, நீங்கள் போகலாம்! அவனை நான்

கவனித்துக் கொள்கிறேன்!'' என்ற தலைவர் இன்டர்காமில் ஏதோ சொல்ல, அடுத்த நாளே, அந்தக் கட்சியின் ரகசிய ஆலோசனைக் கூட்டம் கூடியது!

''இந்த இளங்குமரனால் எங்களுக்கெல்லாம் கெட்ட பெயர்! வெளியிலே, தலை காட்ட முடியலை!''

''அரிச்சந்திரனைக இருக்கிறதா நினைக்கிற இவனெல்லாம், வினைகத் தேர்தல்லே நின்னு, ஜெயிச்சு, எதுக்குப் பதவிக்கு வரணும்?''

''இந்த இளங்குமரன் வந்ததிலிருந்து நம்ம கட்சி வளர்ச்சி நிதி தடைபட்டுப் போய் விட்டது! தாமாக முன் வந்து, கட்சி வளர்ச்சி நிதிக்கு கொடுப்பவர்கள் கூட இப்போது தயங்குகிறார்கள்!''

''பொதுவாக, ஜனங்க மத்தியிலே தனக்குன்னு ஒரு இமேஜை வேறு வளர்த்துக்கிட்டு வர்ற இந்த இளங்குமரனின் விஷயத்திலே இன்னிக்கு, நீங்க ஒரு முடிவை எடுத்தே ஆகணும்!''

ரகசிய ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் பலரும் இளங்குமரனின் மீது தங்களுக்கிருந்த வெறுப்பை, கட்சி மேலிடத்தின் முன்பாகக் கொட்டித் தீர்த்துக் கொண்டனர்!

தலைவர் பேச ஆரம்பித்தார்!

''நமது கட்சிக்குத் தூண்களாக இருந்து, பாடுபடுகிற உறுப்பினர்களே! உங்களுடைய கஷ்டம் எனக்குப் புரிகிறது! ஆனால் நம்மிடமிருந்து பதவிப் பிச்சையைப் பெற்றுக் கொண்டு, நமக்கெதிராகச் செயல்பட்டு வரும் அந்த இளங்குமரனுக்கு இது புரியவில்லையே?''

''உடனடியாக இளங்குமரனை மந்திரி பதவியிலிருந்து நீக்குவதே சரியான தண்டனை! அதனைத் தலைவர் அறிவிக்க வேண்டும்!'' என்று ஓர் உறுப்பினர் குறுக்கிட,

''அவசரப்படாதீர்கள்! அந்த இளங்குமரனுக்கு இப்ப, ஜனங்க மத்தியிலே ஒரு நல்ல பெயர் இருந்துக்கிட்டு இருக்கு! உடனடியாகப் பதவியிலிருந்து நீக்கிவிட்டால், ஜனங்க மத்தியிலே நமக்கு எதிர்ப்பு வளருமே தவிர, பிரச்னை இத்துடன் முடிந்து போகாது!''

''அதுக்காக, அப்ப அந்த இளங்குமரனை என்ன செய்யலாம்னுதான் உத்தேசித்திருக்கீங்க?'' என்ற மற்றோர் உறுப்பினரிடம், தனது திட்டத்தை விவரிக்க, அதை எல்லா உறுப்பினர்களும் ஆமோதித்துச் சம்மதம் தெரிவிக்க, , கட்சி மேலிடத்தின் ரகசிய ஆலோசனைக் கூட்டம் அத்துடன் முடிவடைந்தது!

மறுநாள் —

தொழில் துறை அமைச்சர் இளங்குமரன் கட்சிப் பணிக்காகத் தமது அமைச்சர் பதவியிலிருந்து விலக்கப்பட்டிருந்த செய்தி அவரின் திறமை பற்றிய கட்சித் தலைவரின் புகழுரைகளோடு எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியாகியிருந்தது.

தழுவாத கைகள்

சுந்தரராஜன் படமென்றாலே துணுக்குத் தோரணம்தான்.

இன்டர்வெல் வரை காமெடி துணுக்ஸ்.


எட்டுப் பிள்ளைக்குத் தகப்பனாய் விஜய்காந்த். அனாவசியச் சண்டைக் காட்சிகளில் மட்டும் ஹேர் ஸ்டைல் மாறிப் போக, மற்ற நேரத்தில் வித்தியாசமான நடு வகிடு, கொஞ்சம் நரை, நெற்றியில் சிவப்புத் தீற்றல் என்று ஜமாய்க்கிறார். எல்லாக் குழந்தைகளும் தூங்கிவிட்டதென்று டேப் ரிகார்டரில் பாட்டு வைத்து மனைவி அம்பிகாவுக்கு மூடு கொண்டு வர முயல, நடுவில் ஒரு பையன் எழுந்து உட்கார்ந்து, 'இன்னொரு தடவை டேப் பாடிச்சு, நாங்கள்லாம் பக்கத்து வீட்லதான் போய்ப் படுத்துக்கணும்' என்று வெடிப்பது ஒரு சிரிப்பு. அப்புறம் விள்ளாமல் தோசை சாப்பிடுவது, வேறு வீட்டுப் பையனுக்கு அலங்காரம் செய்து விடுவது, எண்ணெய்க் குளியலில் அசடு வழிவது என்று பிட் பிட்டாகச் சிரிப்பு. கதை இழை என்பது மட்டும் மிஸ்ஸிங். இளையராஜாவின் தயவில் இரண்டு ஸீனுக்கு ஒரு முறை இனிமையான பாடல்கள். அம்பிகாவுக்கு பிளட் கான்ஸர் என்று (எக்ஸ்ரே பார்த்து!) டாக்டர் சொன்னதோடு இடைவேளை. சமர்த்தாய் நாம் எழுந்து வந்துவிட பத்து நிமிஷ அவகாசம்.



போதாத காலம், இன்டர்வெல்லுக்கு அப்புறமும் உட்கார்ந்தால், வரிசையாய்ச் சோக துணுக்ஸ். கால் விளங்காத பையன், 'அம்மா நான் உன் கூடவே இருக்கேன்மா' என்று உருகும்போது மட்டும் இரண்டு சொட்டுக் கண்ணீர் நம் கண்களில். கதையும் இல்லாமல், அதை வளர்க்கும் வாய்ப்பும் இல்லாமல், துண்டு துண்டாக ஃப்ளாஷ்பேக்; போட்டு மறுபடியும் பாடல்கள். அதிலும், 'பூங்குயில் . பொன்மாலையில்' பாடல் பொருந்தாத இடத்தில் சம்பந்தமில்லாத வரிகளுடன். கடைசிக் காட்சி மெலோ டிராமாவின் உச்சம்.

விஜய்காந்தையும், இளையராஜாவையும் விலக்கிப் பார்த்தால், திசை தெரியாமல் ஓடும் தெளிவில்லாத ஓடை. ஒளியும், ஒலியுமுக்காக எடுத்த படம்.

— ஜெயமன்மதன்



மாட்டுடன் முகமது அலி

மாட்டின் கண்ணில் எம்.ஜி.ஆர்.!

மாவட்ட ரீ—விசிட் திட்டப்படி, நாங்கள் திருவாரூர் போய் இறங்கின போது, அங்கே பரபரப்பாய்ப் பேசப்பட்ட விஷயம் மாட்டின் கண்ணில் எம். ஜி..ஆர். தெரிவது தான்! இது ஏற்கெனவே கேள்விப்பட்டிருந்த செய்திதான் என்றாலும் எம்.ஜி. ஆரைப் பார்த்து ரொம்ப நாளாகியிருக்கவே மாட்டின் கண்ணில் தெரியும் எம். ஜி. 'ஆரை யாவது பார்க்கலாமே என்ற ஆர்வம் நமக்கும் பீறிட்டது. கோவிலுக்குப் போகிற வழியில் பார்க்கிற்கு அந்தண்டையில் உள்ள காலி மனையில் கூட்டத்தைச் சமாளிக்கக் கட்டைகள் நட்டு, கீற்றுக் கதவு போட்டு, நடுவே கொட்டகையில் மாட்டைக் காட்சிக்கு வைத்திருந்தார்கள்.

''போய் என் சூட்கேஸைக் கொண்டா! நீ போய் நாலு மணிக்கு சொல்லு'' என்று மற்றவர்களை அதட்டிக் கொண்டிருந்த இளைஞரிடம், ''ஏங்க! நீங்கதான் மாட்டுக்குச் சொந்தக்காரரா!'' என்று கேட்டோம்.

''இல்லீங்க. ஹாஜா முயினுதீன் என்கிற நம்ம ஃபிரண்டுது; எங்களுக்குத் திட்டச்சேரிங்க. என் பேரு முகமது அலி; நான்தான் மாட்டுக்கு ஃபுல் இன்சார்ஜ்... என்ன! சூட்கேஸ் கொண்டார இத்தினி நேரமா? மவரலே''

ஒரு பக்கமாய்ப் புல் மேய்ந்து கொண்டிருந்தது, மூக்கணாங்கயிறு போட்ட அந்த மாடு. கொம்பு பயமுறுத்துகிற மாதிரி இல்லே. தவறிப் போய்க் கறுப்பு பெயிண்ட் மீது கவிழ்ந்துவிட்ட வெள்ளை பெயிண்ட் போன்ற நிறம்.

மாடு அந்தப் பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டிருந்தது. திடீரென முகமது அலி ''தலைவரே! இந்தப் பக்கம் திரும்புங்க தலைவரே!'' என்றார். நாம் தலைவராகப் பதவி உயர்வு பெறச் 'சாத்தியமில்லாததால், 'ஏதாவது அ. தி. மு. க. லோக்கல் தலைவர் வந்திருக்கிறாரோ?' என்று சுற்றிலும் பார்த்தோம். யாரையும் காணோம்! மறுபடியும் தலைவரைத் திரும்பச் சொன்ன போதுதான் புரிந்தது. அவர் மாட்டிடம்தான் பேசுகிறார் என்று.

ஒருவழியாய்த் திரும்பினார் தலைவர். இடது கண்ணை உற்றுப் பார்த்தபோது, கறுப்புக் கோழிமுட்டை சைஸ் கண்ணில், முக்கால் பகுதிக்குச் சாம்பல் நிறத்தில், ஏதோ ஓவல் ஷேப்பில் இருக்கிறது. கண்ணில் பூ விழுந்து விட்டதன் விளைவாம். அதன் நடுவே அ. தி. மு. க. காரர்கள் மோதிரங்களில் இருக்குமே அந்த சைஸில் எம்.ஜி. ஆர். உருவம். சிவந்த முகம், வெள்ளைத் தொப்பி, கறுப்புக் கண்ணாடி, வெள்ளைச் சட்டை! '' அட்டகாசமாய்த் தலைவர் தெரி

கிறார் பாருங்கள்'' என்றார் முகமது அலி.

இயற்கையாக, யதேச்சையாக ஏற்பட்டு விட்ட உருவ ஒற்றுமையா? அல்லது பிழைப் புக்காக இவர்கள் மாட்டின் கண்ணில் ஏதேனும் செய்திருக்கிறார்களா? நம்மால் உறுதியாகக் கூற முடியவில்லை.

''தலைவரை தெல்லை எலெக்ஷனுக்குக் கூட அனுப்பலாம்னு இருந்தேங்க.

''எதற்கு? ஆர். எம். வீக்கு ஆதரவாப் பிரசாரம் செய்யவா?''

''ஆமா அப்புறம் அனுப்பலீங்க.''

அனுப்பியிருந்தால், மாட்டுக்கு நன்றி தெரிவித்து போஸ்டர் போட்டிருப்பார் தளோ என்னவோ!

''மாட்டுக்கு என்ன போடறீங்க?''

''தலைவர் சுத்தமான புல்தாங்க சாப்பிடு வாரு. வைக்கோல் கூட ஒண்ணுக்கு ரெண்டு தடவை டெஸ்ட் பண்ணித்தான் போட றோம். தீவனமெல்லாம் ஒரே கடையில வாங்கறதில்லே. தலைவருக்கு வேண்டாத வங்க யாராவது ஏதானும் செஞ்சிட்டா?''

''டிக்கெட்டெல்லாம் போட்டிருக்காப் பல இருக்கு!''

''ஆமாங்க! கூட்டம் தாளலே. டிக்கெட் போட்டா என்னன்னு தோணிச்சு. போட் டுட்டம். தினம் ஆயிரம் பேர் போல வந்து பார்க்கறாங்க. இதுக்கு முன்னால நாகைல இருந்த போது ரெண்டு லட்சம் பேர் வரை சும்மாத்தான் பார்த்தாங்க. காசு வாங்கலே. வந்து பார்க்கிறவங்க எல்லாம் 'எங்க ஊருக்கு வாங்க'ன்னு கூப்பிடறாங்க.''

''அப்ப ஒரு டூர் புரோகிராம் போட்டுட வேண்டியதுதானே?''

''அதற்கு தலைவரோட ஆசிவேணும்சார்!'' (இந்தத் தடவை தலைவர் என்று அவர் குறிப் பிட்டது எம். ஜி. ஆரை!)

''மெட்ராஸுக்குக் கூட்டிட்டுப் போய்த் தலைவர்கிட்ட காட்டறதுதானே?''

''ராமாவரம் போய் நாலு நாள் முயற்சி செய்தும் தலைவரைப் பார்க்க முடியலே. தலைவரோட பி. ஏ. விஷயத்தைக் கேட்டுக் கிட்டுத் 'தலைவர்கிட்டே சொல்லறேன்: ஊருக்குப்போங்க'ன்னுசொன்னாரு.திருப்பி வந்துட்டம்.''

''மெட்ராஸுக்குக் கொண்டாந்து சுற் றுலாப் பொருட்காட்சி சமயத்தில் ஸ்டால் போட்டால் நல்ல கலெக்ஷன் ஆகுமே!''

''தலைவரைக் காட்டிப் பணம் பண்றது தப்புங்க. இப்பக் கூட வசூல்ல, செலவு போகபாக்கியைச்சத்துணவுத்திட்டத்துக்குத் தான் தர்றதா இருக்கோம்!''

புறப்படும் போது, எம். ஜி. ஆர். தெரி யாத இன்னொரு கண்ணை உற்றுப் பார்த் தேன்.

''என்ன சார் பார்க்கறீங்க?''

''ஜெயலலிதா தெரியறாங்களான்னு!''

— ஜாவலி

படம்: சோமு

13

ராஜாஜி வாழ்க்கை வரலாறு — III
ராஜ்மோகன் காந்தி



• சரத் சந்திரபோஸ்

ஆனந்த சுதந்திரம்

சரத் சந்திரபோஸ் ராஜாஜிக்கு எதிரான ஓர் இயக்கத்தையே ஊக்குவித்திருந்த போதிலும் ஆகஸ்டு 14 ஆம் தேதி ராஜாஜி பயணப்பட்ட விமானம் கல்கத்தா விமான நிலையத்தில் தரை தட்டிய போது ஒரு பெருங் கூட்டம் அந்த விமானத்தைச் சூழ்ந்து கொண்டு "ஜெய் ஹிந்த்" முழக்கம் செய்து ராஜாஜியை வரவேற்றது. நகரை நோக்கிக் கார் செல்லும் போது வழியில் பல இடங்களில் கூட்டம் சேர்ந்து வாழ்த்தொலிகளை எழுப்பின. ஆனால் விமான நிலைய வெளி வாசலிலும் ஷாம் பஜாரிலும் சிறுசிறு கூட்டங்களாக இளைஞர்கள் நின்று கறுப்புக் கொடி காட்டினர். "ராஜாஜி! திரும்பிப் போ!" என்று எழுதப்பட்டிருந்த அட்டைகளைத் தூக்கிப் பிடித்து ஆட்டிக் காண்பித்தனர். சுபாஷ் சந்திரபோஸுடன் கருத்து மாறுபட்டிருந்த நிலையில் அவரது திட்டத்தை வர்ணிக்க 1939 இல் ராஜாஜி "ஓட்டைப் படகு" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தியிருந்தார். அதை இப்போது சில ஆசாமிகள் ராஜாஜிக்கு எதிராகப் பிரயோகித்துக் கூச்சலிட்டனர். இவற்றைப் பொருட்படுத்தாமல் ராஜாஜி ஏறியிருந்த கார் போய்க் கொண்டிருந்தது.

1912 ஆம் ஆண்டு வரை பிரிட்டிஷ் மன்னரின் பிரதிநிதிகளாக இங்கிருந்து இந்தியாவை ஆண்ட கவர்னர் ஜெனரல்களும் வைஸ்ராய்களும் கல்கத்தாவில் அரசாங்க மாளிகையில்தான் வசித்தார்கள். அங்கிருந்த படிதான் அரசோச்சினார்கள். அதே மாளிகைக்குள்தான் இப்போது ஸி. ஆர்., ஓய்வு பெற இருக்கும் கவர்னர் பர்ரோஸ் உடன் வர, பிரவேசித்தார். 1912 முதல் அம்மாளிகை வங்க கவர்னர்களின் இருப்பிடமாயிற்று. இப்போது — ஆகஸ்டு 14 — நள்ளிரவு வரை பர்ரோஸின் விருந்தினராக ராஜாஜி இருப்பார். அதன் பிறகு விடியற்காலையில் பர்ரோஸ் விடைபெறும் வரை ராஜாஜியின் விருந்தினராக பர்ரோஸ் அங்கு தங்கியிருப்பார். அதிகாலை எட்டு மணிக்கு அம்மாளிகையின் உச்சியில் யூனியன் ஜாக் கொடி கீழே இறக்கப்பட்டு, அதனிடத்தில் மூவர்ண தேசியக் கொடி ராஜாஜியால் ஏற்றுவிக்கப் பட்டுப் பட்டொளி வீசிப் பறக்கும். ஆகஸ்டு 15 வெள்ளிக்கிழமை தொடங்கும் நள்ளிரவு நேரத்தில் அந்த அரசாங்க மாளிகையின் சிம்மாசன அறையில் (தர்பார்) ஸி. ஆர். பதவிப் பிரமாணம் ஏற்றார். இதற்குள் அந்த அரசாங்க மாளிகையின் வெளிப்புறத்தில் இருளில் பெரும் கூட்டங்கள் சேர்ந்து 'ஜெய் ஹிந்த்' என்றும் 'வந்தே மாதரம்' என்றும் 'காந்திஜிக்கு ஜே' என்றும் கோஷித்துக் கொண்டிருந்தன.

இருள் கவிந்த வானத்தை வாண வேடிக்கைகள் ஒளிமயமாக்கின. கடந்த ஓராண்டு காலமாகக் கல்கத்தா தெருக்கள் ஊரடங்கு உத்தரவு காரணமாக இரவு நேரங்களில் வெறிச்சோடிக் கிடந்தன. இப்போது அச்சட்டம் அடியோடு புறக்கணிக்கப்பட்டது. யாரும் அதைப் பற்றிக் கவலைப்படக் காணோம்! லாரிகள், மோட்டார் கார்கள், டாக்ஸிகள், சைக்கிள்கள், டிராம் வண்டிகள் முதலிய எல்லாவித வாகனங்களிலிருந்தும்

சந்தோஷ ஆரவாரம் கிளம்பியது. மகிழ்ச்சி மணிகள் ஒலித்தன. கங்கை நதியில் சென்ற நீராவிப் படகுகள் 'ஸைரன்'களை ஒலிக்கச் செய்தன. மாணவர்கள் டார்ச் விளக்குகளை ஏந்தி ஊர்வலமாகச் சென்றனர். விடியும் நேரத்தில் ஒரு பிரும்மாண்டக் கூட்டம் அரசாங்க மாளிகையின் சுற்றுச் சுவர்க் கதவுகள் மீது அலைமோதியது. சீக்கிரமே கேட்கள் திறந்து விடப்பட்டன. கூட்டத்தினர் வெள்ளமாக உள்ளே பாய்ந்தனர். ஒரு கடல் விமானத்தில் பர்ரோஸை யும் அவர் மனைவியையும் ஏற்றி அனுப்பி விட்டுத் திரும்பிய ஸி. ஆர்., எட்டு மணி அடிக்க முப்பது வினாடிகள் இருந்த போது, அரசாங்க மாளிகையின் புல்வெளியில் இன்றைய தினத்துக்காக நிறுவப்பட்டிருந்த விசேஷ மேடையில் ஏறினார். வில்லியம் கோட்டையில் பதினேழு பீரங்கிகள் ஒன்றன் பின் ஒன்றாக ஒலித்து மரியாதை செலுத்தக் காத்திருந்தன. முதல் பீரங்கிச் சத்தம் கேட்டதுமே ஸி. ஆர். கொடிக் கயிற்றை இழுத்து தேசியக் கொடியைப் பறக்க விட்டார். அவ்வளவுதான், மகிழ்ச்சி ஆரவாரம் அந்த அரசாங்க மாளிகையையும் சுற்று வட்டாரத்தையும் தொடர்ந்து பலமணி நேரத்துக்கு மூழ்கடித்தது! ஒருவழியாக இந்தியாவுக்கும் இந்தியர்களுக்குமே உடைமையாகி விட்ட அந்த அரசாங்க மாளிகைத் தோட்டத்துக்குள் அன்று குறைந்த பட்சமாக இரண்டு லட்சம் மக்கள் புகுந்தார்கள்! அவர்களில் பலர் மாளிகைக்குள்ளேயும் நுழைந்தார்கள். விலை மதிக்க முடியாத ஓவியங்களைத் தொட்டுப் பார்த்தார்கள்; சொகுசு சோபாக்கள் மீது ஏறித் துவைத்து ஆனந்தக் கூத்தாடினார்கள்! பிரிட்டிஷ் அதிகாரிகளுடன் கைகுலுக்கினார்கள்; அந்த அதிகாரிகளும் பதிலுக்கு 'ஜெய் ஹிந்த்' என்று வாழ்த்தினார்கள்.

ஆனந்தக் களியாட்டம் போட்ட கூட்டத்தினருக்குத் தோட்டத்தில் உருவாகியிருந்த மேடை மீது நின்று வாழ்த்துக் கூறிவிட்டு விடைபெற்றார் ஸி. ஆர். சற்று நேரத்துக்குப் பிறகு கூட்டம் 'ராஜாஜிக்கு ஜே' என்று திரும்பத் திரும்ப முழங்கிய போது அவர் மீண்டும் ஒருமுறை அந்த மாளிகையின் ஒரு மாடத்துக்கு வந்து அவர்களின் வாழ்த்துக்களை ஏற்க வேண்டி நேர்ந்தது. காவல் அதிகாரிகள் மாளிகைக்குள்ளே நுழைய முயன்ற கூட்டத்தினரைப் பாதுகாப்புக் கருதித் தடுத்து நிறுத்த முயன்றபோது ஸி. ஆர்., 'தடுக்க வேண்டாம்' என்று உத்தரவிட்டார். "எல்லோரையும் உள்ளே அனுமதியுங்கள். இன்று ஒருநாள் அவர்கள் மகிழ்ச்சி முழுமையானதாக இருக்கட்டும்." மாலை நெருங்கும் வரை அரசாங்க மாளிகையின் எல்லாக் கதவுகளும் திறந்தபடியே இருந்தன.

இதே நேரத்தில் இந்தியா பிளவுபட்டதால் ஏற்பட்ட துன்பமானது மகிழ்ச்சியில் மிதந்த மனங்களைத் துளைத்துக் கொண்டும் இருந்தது. சுதந்திர தினத்தன்று மேற்கு வங்கச் சட்டசபையில் பேசிய ஸி. ஆர்., இந்தியா என்றும் பாகிஸ்தான் என்றும் பிரித்து வைக்கிற வேலிக் கம்பிகள் சீக்கிரமே உருகிப் போகும் என்றும் மீண்டும் இரு தேசங்களும் நெருங்கி வந்து நிரந்தரமான, புத்திசாலித்தனமான ஒரு பிணைப்பை ஏற்படுத்திக் கொள்ளும் என்றும் தாம் நம்புவதாகத் தெரிவித்தார். வங்கத்தை ஸி. ஆர். தமது நண்பனாக்கிக் கொள்ள முடியுமா என்பதே அதைவிட முக்கியமான கேள்வியாக இருந்தது. அதற்கான முழுமுயற்சியையும் மேற்கொள்வார் ஸி. ஆர். என்பது நிச்சயம். "வங்கம், இந்திய மாகாணங்களிலேயே எல்லாவிதங்களிலும் முதலிடத்தைப் பெற வேண்டும்; அதற்காக நாம் உழைப்போம். இம்முயற்சியில் நாம் வெற்றி பெற வேண்டும் என்று உங்களுடன் சேர்ந்து நானும் பிரார்த்திக்கிறேன். இந்தப் பணியில் எனக்கும் சிறிய பங்கு இருக்குமானால் எனது அந்திம கால வாழ்க்கை அர்த்தமுடையதாக விளங்கி நான் பெருமைப்பட, தக்க காரணத்தை அளிக்கும்" என்று தமது உரையில் கூறினார் ஸி. ஆர்.

மறுநாள் ஸி. ஆர். மகாத்மாவைச் சென்று பார்த்தார். இப்போது கிழக்குப் பாகிஸ்தானிலுள்ள நவகாளிக்குச் செல்ல காந்தி எண்ணியிருந்தார். ஆனால் கல்கத்தா முஸ்லிம்களுக்கு என்ன நேருமோ என்ற அச்சம் அவரை அந்நகரிலேயே இருக்கச் செய்தது. இப்போது ஷுரவர்த்திக்குப் பதிலாக மேற்கு வங்கத்தில் பிரஃபுல்ல கோஷும் கிழக்கு வங்கத்தில் நஜிமுத்தீனும் முதல் மந்திரி பொறுப்பேற்றிருந்தார்கள். மகாத்மா, ஷுரவர்த்தியும் தாமும் பெல்லிய கட்டா பகுதியில் ஒரே வீட்டில் வசிக்க வேண்டும் என்று யோசனை தெரிவித்தார். ஷுரவர்த்தி ஒப்புக் கொண்டார். அந்த வட்டாரத்தில் முஸ்லிம்கள் தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தார்கள். அங்கே ஒரு வீடு அவர்களுக்கு ஒதுக்கப்பட்டது. அதை நெருங்கிய போது, "காந்தி! திரும்பிப் போ!" என்ற கோஷத்தைச் சுமார் இருநூறு ஹிந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் எழுப்பினர். ஆயினும் ஆகஸ்டு 15 ஆம் தேதி அமைதி திரும்பியது.

(தொடரும்)

தமிழாக்கம்: கி. ராஜேந்திரன்

சொல்லின் செல்வர்

இராமாயணத்தில் ஆஞ்சநேயரை "சொல்லின் செல்வர்" என்று குறிப்பிட்டிருக்கிறது. ஆனால் தற்காலத்தில் சொற்பொழிவாற்றுகின்ற எங்களைப் போன்றவர்களுக்கும் "சொல்லின் செல்வர்" என்ற பட்டம் அளிக்கப்படுகின்றது. ஒருக்கால் நாங்கள் சொல்ல (சொற்பொழிவாற்ற) ஆரம்பித்ததும் கேட்க வந்தவர்கள் எழுந்து செல்ல ஆரம்பித்து விடுவதால் "சொல்லின் செல்வர்" என்று பட்டம் அளிக்கப்படுகிறதோ?"

நாகை முகுந்தன் சொற்பொழிவிலிருந்து கேட்டவர்: பீ. வாசுதேவன்.

யாரை நினைத்தால் பாவமாய் இருக்கிறது?

நீங்கள் கேட்டவை — தராசு

* த. சத்தியநாராயணன், அயன்புரம்.

? **அநியாயம் என்று எதைக் கூறுவீர்கள்?**

! கோர்பசேவுக்கு மகத்தான வரவேற்பை அரசு புதுதில்லியில் அளித்துக்கொண்டிருந்த போது ஆப்கன் விடுதலை வீரர்கள் சிலர், ஆப்கானிஸ்தானத்தில் ருஷ்ய ஆக்கிரமிப்பு இன்னமும் நீடிப்பதை எதிர்த்துச் செங் கோட்டை எதிரே குரல் எழுப்பிக் கொண்டிருந்தார்கள். இப்படி எதிர்ப்புக் குரல் எழுப்புவது ஜனநாயகத்தில் சகஜமான விஷயம். போலீஸார் அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து, வரம்பு மீறாமல் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் போலீஸார் சாத்துவிக முறையில் எதிர்ப்புக் குரல் எழுப்பிக் கொண்டிருந்த அவர்கள் மீது குண்டாந்தடி பிரயோகித்தார்கள்! டெண்ட்டுக்குள்ளே தள்ளி, மேலும் அடித்து நொறுக்கினார்கள். இதைவிடப் பரிதாபம் என்னவெனில் போலீஸார் இப்படி அடிப்பதைப் பார்த்து விட்டு மக்களில் சிலரும் சேர்ந்து கொண்டு அடித்தார்கள். அதைப் போலீஸார் தடுத்து நிறுத்தவில்லை! கோர்பசேவ் வந்தது, நடந்த பேச்சு வார்த்தைகள், கையெழுத்தான உடன்பாடு எல்லாவற்றாலும் தலைநிமிர்ந்த நாம், இந்தக் காட்டுமிராண்டித் தனத்தால் மீண்டும் தலைகுனிந்து போனோம்.

* க. இளங்கோ, நந்தியநல்லூர்.

? **அமைச்சர்களின் இன்றைய நிலை என்ன?**

! தமிழக அமைச்சர்களைத்தானே கேட்கிறீர்கள்? அடிவயிற்றில் நெருப்பு!

* வண்ணை கணேசன், சென்னை — 11.

? **நம்மைச் சிந்திக்க வைப்பவன், சிரிக்கச் செய்பவன் — யார் திறமைசாலி?**

! இரண்டையும் சேர்த்துச் செய்பவன்.

* பி. ஏ. மாடக்கண்ணு, பாப்பாங்குளம்.

? **உங்கள் அலுவலகத்தில் வேலை கேட்டு வந்தால் என்ன வேலை கொடுப்பீர்கள்? (பயப்படாதீர்கள், ஒரு கேள்விக்குத்தான்).**

! மானேஜிங் டைரக்டர் பதவி! (அதிர்ச்சி அடையாதீர்கள், சும்மா ஒரு பதிலுக்குத் தான்.)

* மேஜர்தாசன், ஈரோடு — 10.

? **கிரைம் நாவல் மூலமாகவும் இலக்கியத்தைத் தரமுடியும் என்று ராஜேஷ்குமார் கூறியிருக்கிறாரே?**

! நிச்சயமாகத் தர முடியும். ஆனால் இன்று ராஜேஷ் குமார் அளிப்பது போன்ற கிரைம் நாவல்களால் அதைச் சாதிக்க முடியாது. மேல் நாடுகளில் சமுதாயப் பிரச்னையோடு எழுதப்பட்ட சில கிரைம் நாவல்கள் பேரிலக்கியங்களாகப் போற்றப்படுவது மட்டுமல்ல, மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, சட்டத் திருத்தங்களுக்கே கூட வழி ஏற்படுத்தியுள்ளன! **Death of a Salesman, In Cold Blood** போன்ற நாவல்களின் தரத்தை எட்ட நமக்கு இன்னும் எத்தனை காலமாகுமோ!

* பொன் ஆறு, இராமநாதபுரம்.

? **தலைவர்களின் வருகையையொட்டி நடக்கும் செலவினங்களுக்கு மத்திய அரசு பொறுப்பேற்குமா, மாநில அரசு ஏற்குமா?**

! இரு தரப்பினருக்கும் அவரவர் பங்குக்குச் செலவு உண்டு. ஆனால் கடைசியில் எல்லாமே ஒன்றாகச் சேர்ந்து மக்கள் தலையில்தான் விடியும்!

* எச். எம். ஏ. அஷ்ரப், தோப்புத்துறை.

? **ஷார்ஜாவில் இந்திய அணியின் நிலைமை எப்படி?**

! தோல்வி அடைந்தது மட்டுமல்ல, அசிங்கப்படுத்தி விட்டார்கள். தொடக்கத்தில் வேணுமானால் சற்று நிதானம் காட்டலாம்; போகப் போக வெற்றியை மனத்தில் கொண்டு பந்துகளைத் துணிந்து அடித்திருக்க வேண்டாமா? அப்போது அவுட்டாகி இருந்தால் கூட அது கௌரவமான தோல்வியாக இருந்திருக்கும்.

* ஆர். மைதீன் பாட்சா, வல்லம்.

? **இன்றைய அரசியல்வாதிகள் சுயசரிதம் எழுதினால்?**

! நாவலாக அமையும் — அதுவும் ஹெரால்ட் ராபின்ஸ் டைப்!

* எல். ஆர். சுந்தரராஜன், சென்னை.*

? **கோர்பசேவ் விஜயத்தினால் கடன் தானே?**

! இரண்டாயிரம் கோடி! அதற்கு வட்டி! கடன் பெறுவதில் தப்பில்லே. அந்தக் கடனே மேலும் செல்வத்தை உருவாக்கும் விதமாகப் பயன்படுத்தாமல் போனுல்தான் ஆபத்து. திருப்பித்தர முடியாமல் போனுல் நாடு தன்மானம் இழந்துவிடும். எதிர்காலச் சந்ததி யினர் நம்மைச் சபிப்பார்கள்.

*** இராமலிங்க், தக்கலே.**

? நாட்டைக் கதிகலங்க வைக்கும் அபாயம் எது?

! பாகிஸ்தானின் அணுகுண்டு, பயங்கர வாதிகளின் போக்கு; ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளைவிக்கும் ஹிந்தித் திணிப்பு போன்ற பல விஷயங்களேயும் விட நமது பிரதமர் தமது சொந்தப் பாதுகாப்பைத் துச்சமாக மதித்து நடந்து கொள்வது உண்மையிலேயே கதிகலங்க வைக்கிறது. ஜோர்டான் மன்னர் ஒரு மெர்ஸிடஸ் கார் பரிசளித்தாராம்; அதைச் சோதிக்க ஆசையாம்; பைலட்டுகள், பாடிகார்டுகளேயெல்லாம் முந்திக் கொண்டு ஸ்பீட் எடுத்து வெகுதூரம் போயே போய் விட்டார் ராஜீவ்! ஒரு போலீஸ்காரன் அவரை மடக்கி, "பிரதமர் வரும் நேரம் இது; எப்படி உன்னே யார் அனுமதித்தார்கள்? இந்தப் பக்கம் திரும்பிப் போ!" என்று அதட்ட, உத்தரவுக்குக் கீழ்ப் படிந்து சுற்றி வளேத்துக் கொண்டு மீண்டும் பைலட் வண்டிகளுக்குப் பின்னுல் சாதுவாக வந்து சேர்ந்திருக்கிருர், ராஜீவ். இந்த நிகழ்ச்சியில் ராஜீவின் அசட்டுத்தனமும் அந்தப் போலீஸ்காரரின் கடமை உணர்வும் ஒருங்கே பளிச்சிடுகின்றன. பிரதமர், சமீபத்திய நிகழ்ச்சிகளே மறக்கலாமா? இப்படி ஆபத்துக்குத் தம்மை ஆளாக்கிக் கொள்ளலாமா? தப்பித் தவறி ஏதாவது நேர்ந்தால் பிரதமரின் பாதுகாப்பாளர்கள் அல்லவா பழி சுமக்க நேரிடும்!

*** கா. சேட்டு முகமது, விருத்தாசலம்.**

? உங்களுக்குத் தற்போது யாரை நினேத்தால் பாவமாய் இருக்கிறது?

! தமது பேட்டியில் போலீஸாரைப் பற்றித் தாம்கூறியதைக்கல்கிதிரித்துவெளியிட்டிருப்பதாக நெகமம் கந்தசாமி நமக்குக் கடிதம் எழுதியிருந்தார். நமது நிருபர்கள் தாங்கள் எழுதியதில் உறுதியாக இருந்த போதிலும் பத்திரிகை தர்மம் கருதி அவர் கடிதத்தை வெளியிட்டோம். இப்போது அவரும் தாமரைக்கனியும் அ. தி. மு. க. கட்சியை விட்டே நீக்கப்பட்டிருக்கிருர்கள். பாவமாகத்தான் இருக்கிறது.

*** ராமகிருஷ்ணன், சென்னே.**

? மறைந்த வைத்திய சுப்பிரமணிய அய்யரைப் பற்றி?

! ராஜா சர் முத்தையா செட்டியாருக்குப் பிரதம காரியதரிசியாக, அக்குடும்பத்துக்கே வலக்கரமாக இருந்ததால், அவர் மகன் எம். ஏ. எம். ராமசாமியைக் குழந்தைப் பருவம் முதல் தூக்கி வளர்த்ததால், வைத்திய சுப்பிரமணியத்தின் மறைவை முன்னிட்டு எம். ஏ. எம். வந்திருந்தது வியப்பளிக்கவில்லே. வைத்திய சுப்பிரமணிய அய்யரின் ஆழ்ந்த பக்திக்குப் பாத்திரரான சிருங்கேரி பெரியவர், (சந்நியாசிகள் துக்கம் கொண்டாடக் கூடாது என்ற போதிலும்), "நான் மடாதிபதியாக வரவில்லே, சகோதரனுக வந்திருக்கிறேன்" என்று கூறிக் கொண்டு வந்தது நெஞ்சை நெகிழச் செய்தது. அதுமட்டுமல்ல, அங்கு கூடியிருந்தவர்களில் பலர் அடித்தள மக்கள் என்பது வைத்திய சுப்பிரமணிய அய்யரின் கொடை உள்ளத்துக்கு எடுத்துக் காட்டு. பீச்சோடு வாக்கிங் போகும் போது, "உடுக்கத் துணியில்லே" என்று யாராவது குப்பத்து மனிதர் சொன்னுல், மறுநாள் புதிய வேஷ்டி புடைவைகள் அடங்கிய மூட்டையை ஓர் உதவியாளர் சுமந்து வர, வாக்கிங் போவார் வைத்திய சுப்பிரமணிய அய்யர்! இப்படி அவர் செய்த பல தர்மங்கள் பகட்டுக்காக இல்லாததால் வெளியே தெரியவரவே இல்லே.

*** ரூ. 10 பரிசு பெறுபவர்:**
எல். ஆர். சுந்தரராஜன்,
D — 25, பட்டினப்பாக்கம் காலனி,
சென்னே — 28.


* 3000 கோடி



* கொடை உள்ளம்




* அசட்டுத் தனம்



* ஐயோ, பாவம்



* கிரைம் இலக்கியம்?



தமிழோசை சங்கர மூர்த்தி:

நாதஸ்வர முழக்கத்துடன் சார்லஸ்-டயானா திருமணம்!



* சங்கரமூர்த்தி

நியூ உட்லண்ட்ஸ் ஹோட்டலில் ஒரு கூடம் அமர்க்களப்பட்டது. லண்டன் பி.பி.சி. யின் தமிழோசைத் தயாரிப்பாளர் சங்கர மூர்த்தி தமிழோசை கேட்கும் தமிழன்பர் களை நேரில் சந்தித்து உரையாட வந்திருந் தார். நேயர்கள் பலர் சங்கர மூர்த்தியிடம் நிகழ்ச்சிகளுக்குப் பாராட்டுக்களையும், புதிய ஆலோசனைகளையும் வாரி வழங்கிக் கொண் டிருந்தனர்; இன்னொருபுறம் அவரது ஆட்டோ கிராப் கேட்டுக் காத்திருக்கும் ரசிகர் கூட்டம்! சங்கரண்ணா! சங்கரண்ணா! என்று பாசக் குரல்கள்.

சங்கரமூர்த்தி தென்காசிக்காரர். வயது ஐம்பத்தைந்து. பொருளாதாரமும் அரசிய லும் படித்துப் பட்டம் பெற்ற சங்கர மூர்த்தி வினோபாஜியின்பால் ஏற்பட்ட ஈடுபாடு காரணமாய் 'சர்வோதயம்' என்று ஒரு பத் திரிகை நடத்தினார். அகில இந்திய ரேடியோ வில் அறிவிப்பாளராய் ஆறு ஆண்டுகள் பணியாற்றினார். சிறு கதை எழுத்தாளரும் கூட. ஐம்பது சிறுகதைகளுள் முதல் கதை

பி.பி.சி. தமிழோசை பற்றி...

* இரண்டாம் உலகப் போரின்போது சிங்கப்பூர் வட்டாரத்தில் சண்டையிட்ட பிரிட்டிஷ் ராணுவத்தில் இருந்த தமிழர் களுக்குச் செய்தி தெரிவிக்கும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்டது பி.பி.சி.யில் தமிழ் நிகழ்ச்சி. அப்போது வியாழக்கிழமை களில் பதினைந்து நிமிடச் செய்திகளுடன் சரி.

* 'தமிழோசை' என்று நாமகரணம் சூட்டப்பட்டது 52ல். அப்போது வாரத் துக்கு இரண்டு நாட்கள்.

* இப்போது திங்கள் முதல் வெள்ளி வரை தினம் அரை மணி நேரம் லண்ட னிலிருந்து பி.பி.சி.யின் தமிழோசை முழங்குகிறது. நேரம் இரவு ஒன்பதே முக்கால் முதல் பத்தேகால் வரை. (31, 41, 49 மீ சிற்றலை வரிசை)

* இப்போது செய்திகள் தவிர, பேட்டி கள், அறிவியல் மற்றும் இலக்கிய சம்பந்த மான நிகழ்ச்சிகளும் ஒலிபரப்பாகின் றன.

* பி.பி.சி. ஆங்கிலம் தவிர முப்பத் தாறு மொழிகளில் நிகழ்ச்சிகளை ஒலி பரப்புகிறது. இதில் தமிழ், வங்காளி, இந்தி, உருது, நேபாளி, பர்மிய மொழி களும் அடக்கம்.

* பி.பி.சி. தமிழோசையில் இதுவரை 'சவம்' என்கிற வார்த்தையே பயன் படுத்தப்பட்டதில்லை.

யான 'மறு விருந்து' வெளியானது 'கல்கி'யில். 'கோழி மிதித்த குஞ்சு' என்ற சிறுகதை வெளியானபோது, அமரர் கல்கி, "நிறையச் சிறுகதை எழுதுங்கள்" என்று கடிதம் அனுப்பியது இவருக்கு நல்ல டானிக்காய் அமைந்தது.

பி.பி.சி.யில் இவருக்கு ஏற்பட்ட மறக்க முடியாத ஓர் அனுபவம்: 1969ம் வருஷம். உலகில் முதன்முதலாக இதயமாற்று அறுவைச் சிகிச்சையை வெற்றிகரமாய் நடத்தி முடித்தார் டாக்டர் கிறிஸ்டியன் பெர்னார்டு. நடந்தது தென்னாப்பிரிக்காவில். லண்டனுக்கு அவர் வந்தபோது, பி.பி.சி. அவரைப் பேட்டிக்காக அணுகியது. டாக்டருக்கோ பி.பி.சி. யைக் கண்டால் வெறுப்பு. அலட்சியப்படுத்தினார்.

எப்படியாவது அவரைப் பேட்டி கண்டுவிட வேண்டும் என்று சங்கர மூர்த்திக்கு ஆவல். அவர் தங்கியிருந்த ஓட்டலைத் தெரிந்து கொண்டு, கேமரா, மற்ற சாதனங்களுடன் போய் அவர் அறைக்கு எதிரில் இருந்த சோபாவில் காத்திருந்தார். மணி ஒன்பது, பத்து, பன்னிரெண்டு ஆகியும் டாக்டர் வரவில்லை. கண்ணயர்ந்துவிட்டார். ஒரு மணி சுமாருக்கு யாரோ இவரைத் தட்டி எழுப்ப, கண் விழித்துப் பார்த்தால் டாக்டர் கிறிஸ்டியன் பெர்னார்டு!

பி.பி.சி. பெயர் பொறித்த கேமராவைப் பார்த்ததுமே, "எதற்காக வந்தீர்கள்? பேட்டி ஒன்றும் நான் தருவதாய் இல்லை, போகலாம்" என்று சொல்லிவிட்டுத் தம் அறையினுள் போய்விட்டார் டாக்டர். சங்கர மூர்த்தி இருந்த இடத்தை விட்டு நகரவில்லை. பத்து நிமிஷம் கழித்து இவர் போய்விட்டாரா என்று அறிய, கதவைத் திறந்து பார்த்தார் பெர்னார்டு. இவர் அங்கேயே இருப்பது கண்டு அவருக்கு லேசான ஆச்சரியம்!

"ஒரு விநாடி உங்கள் கையை நான் தொடலாமா?" என்றார் சங்கர மூர்த்தி. பெர்னார்டின் கைகளைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டார். முத்தம் கொடுத்தார். தொடர்ந்து சொன்னார்: "நான் பி.பி.சி.யில் வேலை பார்க்கிற இந்தியன். மகாத்மா காந்தியின் நாட்டுக்காரன். அவர்கூட தென் ஆப்பிரிக்காவில் கறுப்பர்கள்பால் வெள்ளையர்களின் இதயங்களை மாற்ற பெரு முயற்சி செய்தார். வெற்றி கிடைக்கவில்லை. ஆனால் ஒரு கறுப்பரின் இதயத்தை நீங்கள் சாகக் கிடந்த ஒரு வெள்ளையருக்குப் பொருத்தி புனர்வாழ்வளித்தீர்கள். இதயத்தை மருத்துவ ரீதியாய் மாற்றிவிட்டீர்கள்! இது என்னைப் புல்லரிக்க வைக்கிறது."

இந்த வார்த்தைகளால் திக்குமுக்காடிப் போனார் டாக்டர் பெர்னார்டு: பேட்டி கொடுத்தும் விட்டார். அந்தக் கால் மணி நேரப் பேட்டி, பி.பி.சி.யில் சங்கர மூர்த்தியின் மதிப்பைப் பல மடங்கு உயர்த்தியது!

சார்லஸ்—டயானா திருமணத்தின்போது சங்கர மூர்த்தி அது குறித்துத் தாமே ஒரு பாட்டு எழுதினார். அச்சமயம் லண்டன் வந்திருந்த சீர்காழியை அதைப் பாடும்படி கேட்டுப் பதிவு செய்தார். பின்னர் நாதஸ்வர இசையையும் அத்துடன் இணைத்து ஒலிபரப்பினார்! இவ்வாறு மங்கள வாத்ய முழக்கத்துடன் சார்லஸ்—டயானா திருமணம் ஒலிபரப்பப்பட்டது. நேயர்களின் பாராட்டுக் கடிதங்கள் குவிந்தன.



• பி.பி.ஸி. தமிழோசை இயங்கும் மாளிகை

* நிகழ்ச்சியின்போது அன்றையத் தேதியை ஒன்றாம் நாள், இரண்டாம் நாள்.... என்று குறிப்பிடுவார்கள். ஆனால் பத்தாம் தேதி, பதினொராம் தேதி என்றுதான் சொல்வார்கள்! பத்தாம் நாள் பதினொராம் நாள் என்பவை அமங்கலமாய் ஒலிக்குமே!

* தினமும் அன்றைய அரசியல் சூழ்நிலைக்குத் தக்கபடி ஒரு குறளைச் சொல்லுகிறது பி.பி.சி. தமிழோசை.

* நமக்கே தெரியாத பலபுதிய, அழகான தமிழாக்கச் சொற்களை பி.பி.சி. தமிழோசை பயன்படுத்துகிறது. உதாரணம்: செவ்வி (பேட்டி), கரந்தடிப் படை (கொரில்லாப் படை) அரசின் குரல் தரவல்ல அதிகாரி (Government spokesman)

* லண்டன் செல்லும் நம் ஊர்ப் பிரமுகர்கள் தமிழோசையில் பேட்டி அளித்தால், 25 பவுண்டு (சுமார் 500 ரூபாய்) சன்மானம் கிடைக்கும்!

சந்திப்பு, செய்தித் தொகுப்பு:

மௌஷ்மி

"யானை படுத்தால் குதிரை மட்டம்! சினிமா நடிகர்கள் மார்க்கெட் படுத்தால்..."

* மந்திரி பதவி இழந்தவர்களின் நிலை வருத்தத்திற்குரியதுதான் என்றாலும் இப்போதாவது மக்களை எண்ணுகிறார்களே என்று சந்தோஷமாக இருக்கிறது.

சென்னை — 93, எஸ். சம்பத்குமார்.

* சில பிரச்னைகளுக்கு விட்டுக் கொடுத்தால்தான் காரியம் கைகூடும் என்பதை வலியுறுத்தி, ஈழப் போராளிகளைச் சிந்திக்கத் தூண்டிய தலையங்கம், தமிழக மக்கள் ஒவ்வொருவரின் எண்ணங்களையும் பிரதிபலிப்பதாக அமைந்திருந்தது.

நெல்லிக்குப்பம், ஜெ. முகம்மது பாரூக்.

* தூர்தர்ஷன் இயக்குனர் பேட்டி கண்டேன். டி.வி. நமது சிறுவர்களை எவ்வளவு தூரம் அடிமைப்படுத்தியிருக்கிறது என்பதற்கு ஓர் உதாரணம்: சென்ற வாரம் எனது நண்பரின் புதல்விக்கு மஞ்சள் நீராட்டு விழா. மனைவியுடன் சென்றிருந்தேன். விழா முடிந்து இரவு சாப்பிடும் நேரம் சம்பந்தப்பட்ட அவரது புதல்வியைக் காணாமல் தேட, வந்திருந்த விருந்தினர்களில் ஒருவர் அப்பெண் மூன்றாவது வீட்டில் டி.வி. பார்க்கச் சென்றதைத் தெரிவித்தார். எல்லோரும் விருந்து சாப்பிட்டு முடித்த பின்பும் அப்பெண் வரவில்லை. சிந்தனையோடு விடை பெற்றுக் கொண்டு வந்தோம்.

நெய்வேலி, கே.எஸ். ஜெயராமன்.

* 'யானை படுத்தால் குதிரை மட்டம்', 'சினிமா நடிகர்கள் மார்க்கெட் படுத்தால் டி.வி.யில் ஸ்பான்ஸர் ப்ரோக்ராம் மட்டம்' என்ற நிலை இப்போது. பார்வையாளரின் ஆவலைத் தூண்டும் அளவுக்கு நிகழ்ச்சிகள் மனநிறைவைத் தருவதில்லை. அடுத்த இன்ஸ்டால் மெண்ட்டாவது நன்றாக இருக்கும் என்ற 'கானல் நீர்' கனவிலேயே பதின்மூன்று வாரங்கள் முடிந்து விடுகின்றன.

சென்னை — 5, வெ. சீதாராமன்.

* இவ்வாரக்கார்டூன்கள் மூன்றுமே மூன்று முக்கியப் பிரச்னைகளை மையமாகக் கொண்டு வரையப்பட்டிருந்தன. சம்பந்தப்பட்டவர்களின் உடனடி கவனத்தை ஈர்க்கும் வகையிலும் அமைந்திருந்தது பாராட்டுக்குரியது.

தோட்டக்குறிச்சி, இரா. வலையாபதி.

* அணுமின் நிலையங்கள் விளைவிக்கும் கதிரியக்க அபாயம் குறித்த தகவல்களைத் தரும் கட்டுரையில் இந்த உற்பத்தி தடை செய்யப்பட வேண்டும் என்று சொல்வது முட்டாள்தனமானது என்று ஒரு வாதம் இருப்பதாக எடுத்துச் சொல்கிறீர்கள்.

எந்தப் புதிய ஆற்றலும், கண்டு பிடிப்பும், மனித நாகரிகத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துவதாகவே இருத்தல் அவசியம். கட்டுரையில் வெளியிடப்பட்டுள்ள தீவிரமான ஆபத்துகள் தவிர, ஒவ்வொரு நிமிடமும் சுற்றுச் சூழலை மாசுபடுத்தி நச்சுப் படுத்திக் கொண்டிருக்கும் (மெல்ல, மெல்ல) கதிரியக்கச் சக்தி, அளவிட முடியாத நாசத்தை வரப் போகும் தலைமுறைகளுக்குக் கொண்டு வரும். அவர்களுக்கு நாம் கதிரியக்கம் தாக்கிய நீரை, காற்றை, மண்ணை, சுருக்கமாகச் சொன்னால் ஒரு மயானத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். எதற்காக? இன்றைக்கு நமக்கு வேண்டிய அளவில், சுகபோகங்களில் சக்தியை விரயமாக்குவதற்காக!

கட்டுரையிலேயே குறித்தது போல மற்ற energy sources குறித்த ஆய்வுக்கு அ.மி. நிலையங்களில் கொட்டப்படும் பொருளில், நாலில் ஒரு பங்கு செலவிடப்பட்டால்கூட நிச்சயமான பலன் உண்டு.

சென்னை — 28, பிரஸன்னா ராமஸ்வாமி.

* கல்வித் தரம் பற்றிய பட்டிமன்றத்தில், 'இங்லீஷ்' என்று சொல்லப்படும் வார்த்தையை 'இங்லிஷ்' என்று உச்சரிக்க வேண்டும் என்று என் வாதத்தில் குறிப்பிட்டிருந்தேன். அதைத் தவறுதலாக 'இங்லீஷ்' என்றே அச்சிட்டிருக்கிறீர்கள்:

மன்னன்பந்தல், எஸ். சிவசங்கர்.

* இன்றைய சமூகத்திற்கு மதம் என்ன செய்கிறது? சிருங்கேரி சுவாமிகளின் பேட்டி ஆழ்ந்து சிந்திக்க வைத்த அருமையான பேட்டி.

விக்கிரபாண்டியம், ஆர்.கே. அருள்செல்வன்.

* கல்கி நவம்பர் 23 இதழில் கலெக்டர் பேட்டியில் சேரன் போக்குவரத்துக் கழகத்திலிருந்து ஓய்வு பெற்ற திரு. இராமதாசனுக்கு சங்கத்தின் மூலம் வீடு ஒதுக்குவது தொடர்பாக எழுந்துள்ள பிரச்னை விவாதிக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி சங்கம் கீழ்க்கண்ட விளக்கத்தைச் சமர்ப்பிக்கிறது:

சேரன் போக்குவரத்துக் கழகத்திலிருந்து பணி ஓய்வு பெற்றவர்களுக்கு வீடு ஒதுக்கீடு செய்யப்படும் போது, முன்னர் ஏற்பட்ட அனுபவத்தைக் கருத்திற் கொண்டு, சேரன் போக்குவரத்துக் கழக நிர்வாகக் குழுவின் முடிவின்படி ஓய்வு பெறும் உறுப்பினர்கள் விட்டிற்குண்டான உத்தேச முழுத்தொகையையும் செலுத்துமாறு கோரப்படுகிறார்கள். அதேபோல்தான் திரு. இராமதாசனையும் கோரினோம். ஆனால் அவர் இவ்வாறு செலுத்த இயலாது எனவும், தமது மகன் (சேரன் போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரிகிறார்) சம்பளத்திலிருந்து மாதத் தவணையில் பிடித்தம் செய்து கொள்ளவும் கோரினார். அதற்குச் சங்கம் திரு இராமதாசனுக்குப் பதிலாக அவருடைய மகனுக்கு வீட்டை மாற்றி ஒதுக்கீடு செய்ய முன்வந்தது. ஆனால் திரு இராமதாசன் வீடு தம்முடைய பெயருக்குத்தான் ஒதுக்கப்பட வேண்டும் எனவும், மகன் பெயருக்கு ஒதுக்கக் கூடாது எனவும் கூறிவிட்டதால், சங்கம் மேற்கொண்டு ஒன்றும் செய்ய இயலவில்லை. பின்னர் திரு இராமதாசன் துணைப் பதிவாளர் (வீட்டு வசதி), கோவை அவர்களிடம் வழக்குத் தொடுத்துள்ளார். இந்நிலையில் இதுசம்பந்தமாக மேல்விளக்கம் அளிப்பது சட்டத்திற்குப் புறம்பானது.


கோவை, தலைவர்,
சேரன் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம்.

ஆந்திரப் பிரதேசம் — பலவற்றின் இசைவான கலவையும், சிறப்புடைய மாறுபாடுகளும் கொண்ட பெருநிலம். ஆலயங்கள், கடற்கரைகள், விடுமுறை ஸ்தலங்கள், பழம் பெரும் சின்னங்கள், சரணாலயங்கள் ஆகியவை நிறைந்த நிலம். ஹிந்து, பௌத்த, மற்றும் முஸ்லீம் கலாச்சாரங்களின் மாபெரும் சங்கத்தை தன்னகத்தே கொண்டது.


வாரங்கலில் ராமப்பா ஆலயம் மற்றும் காகதிய வாயில், பாகால், ஸ்ரீ சைலம், புலிகாட், கொல்லேறு ஏரி ஆகியவற்றில் வன விலங்கு மற்றும் பறவைகள் சரணாலயங்கள், அரக்கு பள்ளத்தாக்கு, ஹார்ஸ்லி குன்றுகள் போன்ற மலைவாச இடங்கள், விசாகப்பட்டிணத்தின் விசாலமான நெடிய அழகிய பொன் மணல் கடற்கரைகள், திருப்பதி, பத்ராசலம், ஸ்ரீசைலம், சிம்மாசலம் போன்ற புகழ் மிக்க ஆலயங்கள்.

நாகார்ஜுன சாகர் — உலகின் உயரமான கல்லணைக்கட்டு, நாகார்ஜுன கொண்டாவில், அகழ்ந்தெடுத்த பௌத்த சின்னங்களின் அருங்காட்சியகம்.

ஆந்திரபிரதேசம் — கூச்சுப்புடி நடனத்தின் பிறப்பிடம், வண்ணமிகு நிர்மல் ஓவியங்கள், கொண்டபல்லி பொம்மைகள், புகழ் பெற்ற கலம்காரி துணி அச்சுக்கலை போன்ற கலைகள் நிறைந்த இடம்.



ஹைதராபாத் — ஆந்திரப் பிரதேசத்தின் தலைநகரம், பழமையும், புதுமையும் கலந்த இடம். சார்மினார் — இந்திய—அரபு கட்டடக்கலைச் சிறப்புக்கு ஒரு எடுத்துக்காட்டு. சலார்ஜங் மியூசியம் — உலகிலேயே தனி ஒரு மனிதரால் சேகரிக்கப்பட்ட பொருள்களைக் கொண்ட கவர்ச்சி மிக்க அருங்காட்சியகம். பிர்லா வான மண்டலக் காட்சியகம், கோல்கொண்டா கோட்டை, குதுப் ஷாஹி சின்னங்கள், பளிங்குக் கற்களால் கட்டப்பட்ட வெங்கடேசுவரா ஆலயம், இயற்கை எழில் மிகுந்த மிருகக் காட்சி சாலை, மற்றும் பார்க்க வேண்டிய இடங்களுக்கு குறைவே இல்லை.



ஆந்திர பிரதேசத்திற்கு வாருங்கள்.
நினைவில் நிலைத்திடும் ஒரு
விடுமுறையை அனுபவியுங்கள்.

ஆந்திரப் பிரதேஷ் டூரிசம்,
1வது ஃப்ளோர், கலா விஹார்,
எம்.ஜே. ரோடு,
ஹைதராபாத் 500 001.
டெலிபோன்கள்: 556493, 77192
70087, 233384, 233385

ஆந்திரப் பிரதேசம் — சிறப்புடைய மாறுபாடுகள் நிறைந்த நிலம். நினைவில் நிலைத்திருக்கும் ஒரு விடுமுறை



காவிரி: இப்போதும் பிரச்னைதான்.



காவிரி நதி நீர்ப் பங்கீடு பிரச்னை:

தமிழக அரசின் ஆமை வேகம்!

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் மிகப் பெரிய பிரச்னை காவிரி நதிநீர்ப் பங்கீடு பற்றியதுதான் என்பதைத் தாங்கள் உணர்ந்துதான் அதுபற்றிய விரிவான கட்டுரையைப் பிரசுரித்திருந்தீர்கள் (கல்கி 11.5.86) அதற்குப் பிறகு பிரச்னையில் கணிசமான முன்னேற்றம் ஏதும் ஏற்படாதது வருந்தத்தக்கது.

தமிழ்நாடு – கர்நாடகா இடையே பதினாறு வருடங்கள் இருதரப்புப் பேச்சு வார்த்தைகள் நடந்து ஒரு பிரயோஜனமும் இல்லை. ஒருவழியாக இப்போதுதான் நமது அரசு, நதிநீர்ப் பங்கீட்டுக்கு நீதி வழங்க ஒரு தீர்வுக் குழுவை (Tribunal) அமைக்குமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. இவ்வாறு அமைய இருக்கும் நீதிக்குழு குறிப்பிட்ட கால அளவுக்குள் தனது தீர்ப்பை வழங்க வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்க வேண்டும் என்றும் தமிழக அரசு யோசனை தெரிவித்துள்ளது. தமிழக அரசின் இந்த யோசனைகளை மத்திய நீர்வளத்துறை அமைச்சகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. இவ்வளவுதான் முன்னேற்றம். நீதிக்குழு இன்னும் அமையவில்லை. அது எப்போது தன் தீர்ப்பை வழங்குமோ தெரியவில்லை.

மேட்டூருக்கு வரும் நீரின் அளவு எப்படி வேறுபடுகிறது பாருங்கள்:

1983–84 – 230,370 Mcft
1984–85 – 284,358 Mcft
1985–86 – 158,282 Mcft.

இப்படி மாறுபாடுகள் இருந்தால் எந்த அடிப்படையில் விவசாயி திட்டமிட்டுப் பயிர் செய்ய முடியும்?

காவிரிநதிநீர்பிரச்னையால்பல்வேறுவகையில் தஞ்சையில் மொத்தமாகப் பாதிக்கப்படுகிற மக்களின் எண்ணிக்கை முப்பத்தைந்து லட்சம்!

விளைச்சல் குறைவது மட்டும் பிரச்னையில்லை. மக்களுக்கு அன்றாடக் கூலி கிடைக்காமல் போகும். இதனால் வறுமை அதிகரிக்கிறது. எனவே இரண்டு விதத்தில் அடி!

ஒரு மனிதனின் ஒருநாள் வேலையை ஒரு மனித நாள்' என்று கொள்வோமேயானால் நடப்பு 86 – 87 ஆண்டில் இதுவரையில் 4.30 லட்சம் ஏக்கரில் குறுவை பாதிக்கப்பட்டிருப்பதோடு 365 லட்சம் மனித நாட்களை இழந்து விட்டிருக்கிறோம். இதனால ஏற்பட்ட உற்பத்தி இழப்பின் மதிப்பு ரூ. 172 கோடி. இது இந்த ஆண்டின் முதல் பாதி கதை மட்டுமே. இனி சம்பாவின் கதி என்ன ஆகும் என்பது நவம்பர் மாதத்தோடு பருவ மழை முடிந்த பின்னர் கர்நாடகா எவ்வளவு நீரை அனுப்பும் என்பதைப் பொறுத்திருக்கிறது!

எனவே டிரிப்யூனல் அமைந்து அதன் தீர்ப்பும் வெளியாகும் வரை இடைக்காலத்தில் கர்நாடகம் 1924 ஒப்பந்தத்தை மதித்து அதன்படி நமக்கு நீர் விடவேண்டும் என்பதை வற்புறுத்தியாக வேண்டும். அல்லது இடைக்காலத்துக்குக் காவிரி நதிநீர்ப் பங்கீட்டினை நியாயமாக நிர்வகிக்க, அதிகாரங்களுடன் கூடிய ஓர் அமைப்பை உருவாக்க வேண்டும். கர்நாடகாவில் நீர்த் தேக்கங்கள் நிறைந்து தளும்புகின்ற போதிலும் நமக்கு நீர் விடாதது பெரும் தவறு.

காவிரி நதிநீர்ப் பங்கீடு பற்றிய முழு விவரங்களும் அறிந்த ஓய்வு பெற்ற அதிகாரிகளும் பிரதம இன்ஜினியர்களும் பலர் நம்மிடையே இன்னும வழிகாட்டக் கூடியவர்களாக இருக்கிறார்கள். பக்தவத்சலம், கருணாநிதி போன்ற அரசியல் தலைவர்களும் உள்ளனர். எல்லோரையும் சேர்த்து ஒரு கமிட்டியாக அமைத்து அரசு ஆலோசனைகளைப் பெற வேண்டும்.

மத்திய அரசு டிரிப்யூனல் அமைக்கக் காலதாமதம் செய்யுமானால் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகத் தமிழக அரசு தயங்கக் கூடாது. 1956 ஆம் ஆண்டின் ஒரு சட்டம், நதிநீர்ப் பங்கீடு சர்ச்சைகள் தொடர்பாகக் கோர்ட்டுக்குப் போக மாநில அரசுகளுக்கு மட்டுமே அதிகாரம் வழங்குகிறது. விவசாயிகள் நீதிமன்றத்தின் அனுதாபத்தைக் கோரலாமே தவிர சட்டபூர்வமாகப் போய் வாதாட முடியாது.

இவையெல்லாம் எப்படிப்பட்ட ஒரு பரிதாப நிலையில் தஞ்சை விவசாயி தள்ளப்பட்டிருக்கிறான் என்பதை உணர்த்தும்.

— எஸ். ரங்கநாதன்

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600 032.

Assistant Editor: P.S. Mani | Editor: K. Rajendran

Editorial Office: 28, Fifth Street, Lake Area, Nungambakkam, Madras-600 034. (Phone: 473389)

Administrative Office: Race Course Road, Guindy, Madras-600 032 (Phones: 431543, 434157 Press: 434190)

கைபடாத சேவரிட் சேமியா
மணக்குமே உங்கள் கைபட்டதும்!



வரிட் சேமியா மிக நவீனமான அயல் நாட்டு
யந்திரங்களால் மிகச் சுகாதாரமான முறையில்
கபடாமல் தயாரிக்கப்படுகிறது.

யர்தர சம்பா கோதுமை ரவையில் தயாரிக்கப்படும்
வரிட் சேமியா சத்து நிறைந்தது. குழைந்து
ாகாதது. சீக்கிரமாகச் சமைக்கக் கூடியது. மேலும்.
வரிட் சேமியாவை வறுக்க வேண்டிய அவசிய
ல்லை. இது சமைத்த பின்பும் பால்போல் வெண்மை
க இருக்கும்!

றுண்டிகளானாலும். பாயசம் போன்ற விசேஷ
ணவு வகைகளானாலும் சேவரிட் சேமியா உங்கள்
மையலுக்கு ஊட்டமும் சுவையும் கூட்டுகிறது!

கையினால்தான் குடும்பநலன் கருதும் குடும்பத்
லவிகள் விரும்பி வாங்குவது சேவரிட் சேமியாவே!



Sista's - UIM.482.85.TM.A

த்தான அம்மா சமைப்பது
த்தான சேவரிட் சேமியா!

Savorit
சேமியா

REGISTERED . No. M. 4382
Registered as a Newspaper in Sri Lanka

